# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 29 சனிக்கிழமை (14.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 261


# வன்னியில் இராணுவ முகாம்கள் அமைப்பதை உடன் நிறுத்துக!

## நல்லிணக்க ஆணைக்குழு முன் ஆனந்தசங்கரி வலியுறுத்து



கொழும்பு,ஓகஸ்ட் 14

★வன்னிப் பிரதேசத்தில் சந்திக்குச் சந்தி இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. அதனால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். அந்த அச்ச நிலையைப் போக்குவதற்கு இராணுவ முகாம்களை அரசு உடனடியாக அகற்றவேண்டும்.

★கிளிநொச்சியில் தமிழ் மக்களின் காணிகளை அரசு சுவீகரித்துள்ளது. சுவீகரித்த காணிகளை அவற்றின் சொந்தக்காரர்களிடம் திரும்பக் கொடுக்க தாமதமின்றி ஏற்பாடுகள் செய்க.

★தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளை விடுவித்து அவர்கள் சாதாரண மக்கள் போன்று வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மூன்றாம் நாள் அமர்வின் போது நேற்றுச் சாட்சியம் அளித்தவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மேற்கண்ட மூன்று விடயங்களையும் வலியுறுத்தினார்.

ஆணைக்குழுவிடம் ஆனந்தசங்கரி தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில் சந்திக்குச் சந்தி இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவதால் மக்கள் அச்சநிலையில் உள்ளனர். அந்த மக்களின் அச்சத்தைப் போக்குவதற்கு இராணுவ முகாம் அமைக்கும் செயற்பாடு உடன் நிறுத்தப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களின் செயற்பாடுகளால் அச்சநிலையில் வாழ்ந்த வாழ்க்கைக்கு மீண்டும் அந்த மக்கள் திரும்பியுள்ளனர். அதனைப் போக்க வேண்டும். (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் சார்பில் சென்னை நீதிமன்றில் மனு

கொழும்பு,ஓக.14

1986 ஆம் ஆண்டில் சென்னை சூளைமேட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பில் சென்னை நீதிமன்றமொன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் அரசு முறைப் பயணமாக இந்தியாவுக்குச் சென்றிருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவருடன் சென்றிருந்தார்.

அச் சந்தர்ப்பத்தில் சட்டத்தரணி புகழேந்தி கொலைக் குற்றச்சாட்டு ஒன்றில் டக்ளஸ் தேடப்படும் சந்தேகநபர் என்றும் அவரைப் பொலிஸார் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கோரியிருந்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் காலப் பகுதி இரண்டு வருடங்கள் மட்டுமே

கொழும்பு,ஓக.14

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான காலம் இரண்டு வருடங்களுக்கு மேற்படாதவாறு வரையறுக்கப்பட்டுள்ளது என்று புலிச் சந்தேகநபர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆணையாளர் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க கூறினார்.

யு.என்.டி.பி. நிறுவனத்தால் வாதுவையில் ஊடகவியலாளர்களுக்காக நடத்தப்பட்ட செயலமர்வில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிச் சந்தேகநபர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான சட்டரீதியான காலப்பகுதி ஒரு வருடமாகும். அதன் பின்னர் தலா மூன்று மாதங்கள் கொண்ட 4 தவணைகளுக்கு அதை நீடிக்கமுடியும். இருப்பினும், இதற்கான அதிகூடிய காலப்பகுதி இரண்டு (24ஆம் பக்கம் பார்க்க)

## சிவந்தனின் கோரிக்கைக்கு வலுச்சேர்க்க சுவிஸிலிருந்து மூவர் ஐ.நா. நோக்கி நடை

கொழும்பு,ஓக.14

சிவந்தனின் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் சுவிற்ஸர்லாந்து சூரிச்சில் இருந்து ஜெனீவா நோக்கி மனிதநேய நடைப்பயணம் மேற்கொள்ள தமிழின உணர்வாளர்கள் மூவர் முன்வந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசு மீது சுயாதீன போர்க் குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும், தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், மனித உரிமைகள் மதிக்கப்படும்வரை இலங்கையைப் புறக்கணிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை ஒட்டுமொத்த தமிழ் மக்கள் சார்பாக முன்வைத்து ஜெனீவாவிலுள்ள (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகா குற்றவாளி; இராணுவ நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு,ஓக.14

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று முதலாவது இராணுவ நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

இராணுவ சேவையில் இருந்துகொண்டே அரசியலில் ஈடுபட்டார் என இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

சரத் பொன்சேகா குற்றவாளியாக இனங்காணப்பட்டமையை அடுத்து, அவருடைய இராணுவப் பதவிகளின் நிலை களைக் குறைக்கவேண்டும் என்று அவர் மீதான விசாரணைகளுக்கென நிறுவப்பட்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு

கொழும்பு, ஓக.14

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத்பொன்சேகாவை குற்றவாளி என முதலாவது இராணுவ நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்ததை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என சரத்பொன்சேகா தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

முதலாவது இராணுவ நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக்கு எதிராகத் தாம் மேன்முறையீடு செய்யப்போவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-சி)

### சமாதான முயற்சிகளில் பங்கு வகித்த

## முரளிதரன், பீரிஸ், மிலிந்த ஆகியோரையும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு விசாரிக்கவேண்டும்

### ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்துகிறது

கொழும்பு,ஓக.14

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தேசிய நல்லிணக்க ஆணைக்குழு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரையும் விசாரணை செய்யவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று வேண்டுகோள் விடுத்தது.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றபோது ரவி கருணாநாயக்க எம்.பி. இவ்வாறு வலியுறுத்தினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)

## குடிவரவுக் கொள்கையை மேலும் இறுக்குவதற்கு கனடாவில் சட்டமூலம்

கொழும்பு,ஓக.14

கனேடியக் குடிவரவுக் கொள்கையை மேலும் இறுக்கமானதாக மாற்றுவதற்கான சட்டமூலம் ஒன்று விரைவில் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் குடிவரவுக் கொள்கை மிகவும் இலகுவானதாக காணப்படுவது அதிக அளவிலான அகதிகள் பிரவேசிப்பதற்காக ஏதுவாக அமைகிறது என இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கனேடியப் பிரதமரின் கோரிக்கையின் அடிப்படையில் இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் இது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகளுடன் சன்-சீ கப்பலை கனேடிய அதிகாரிகள் நேற்றுக் கையேற்றனர்; துறைமுகத்துக்கு அருகே கூடாரங்கள்

வன்கூவர், ஓக.14

ஈழத் தமிழ் அகதிகளுடன் கனடாவை நோக்கிச் சென்ற 'சன் சீ' கப்பலை கனேடிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவும், தேசிய பாதுகாப்புப் பிரிவும் நேற்று வெள்ளிக்கிழமை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளன; பொறுப்பேற்றுள்ளன.

490 அகதிகளுடன் கனேடிய கரையை நோக்கி வழிநடத்தப்படும் இக்கப்பலில் இருந்து நேற்று இரவு அகதிகள் கரை இறக்கப்படுவர் என எதிர்பார்க்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடாவிலுள்ள 'போர்ட் அல்போன்' துறைமுகத்தை நோக்கியே 'சன் சீ' கப்பல் கனேடிய கடற்படையினரால் வழிநடத்திச் செல்லப்படுகிறது.

இக்கப்பலில் இலங்கையைச் சேர்ந்த அகதிகளுடன் சட்டவிரோதமாக இவர்களை அழைத்துச் செல்வோரும் இருக்கலாமென கனடா அதிகாரிகள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

### அகதிகள் தங்குவதற்கு கூடாரங்கள் அமைப்பு

இதேவேளை, 'போர்ட் அல்போன்' துறை முகத்தை அண்டிய பிரதேசத்தில், கப்பலிலுள்ள (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தரங்கவின் நிதானமான ஆட்டத்தால்
# நியூஸிலாந்தை வென்றது இலங்கை



கொழும்பு, ஒக.14

நேற்று நடந்த நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 192 ஓட்டங்களை எடுத்தது. அடுத்துக் களமிறங் கிய இலங்கை அணி 195 ஓட்டங்களை எடுத்து நியூஸிலாந்து அணியைத் தோற்கடித்தது.

இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு ஒருநாள் போட்டி இலங்கையில் நடந்து வருகிறது. தம்புள்ள, ரன்கிரி சர்வதேச மைதானத்தில் நேற்று நடைபெற்ற பகல் - இரவுப் போட்டியில் இலங்கை - நியூஸிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி களமிறங்கிய நியூஸிலாந்து வீரர்களான வெற்லிங் (55), ரெய்லர் (16), ஸ்ரைறிஸ் (24), மக்கியூலம் (36) ஆகியோரின் ஓரளவான ஓட்டத்துடன் வெளியேற, நியூஸிலாந்து அணி 192 ஓட்டங்களை எட்டியது. இலங்கை அணியின் பந்துவீச்சாளர்களான மலிங்க (3), குலசேகர (1), மத்தியூஸ் (3), மெண்டிஸ் (1), ஹெறத் (2) விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

193 ஓட்டங்களை பெற்றால் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கியது இலங்கை அணி. இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக தரங்க - டில்ஷான் ஆகியோர் களமிறங்கினர். டில்ஷான் போன வேகத்திலேயே பெவிலியன் திரும்பினார். தரங்க நிதானமாக விளையாடி இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தப் பெரிதும் உதவினார். 70 ஓட்டங்களை எடுத்த நிலையில் தரங்க ஆட்டமிழந்து வெளியேறினார்.

இலங்கையின் துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் அணித்தலைவர் சங்ககார (48), சமரவீர (36) ஆகியோர் தங்களுடைய பங்களிப்பை அணிக்கு சிறப்பாக வழங்கி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர். இதன்படி இலங்கை அணி 3 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து அணியை தோற்கடித்தது.

புள்ளிளின் அடிப்படையில் இந்தியா 5 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இலங்கை 4 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், நியூஸிலாந்து அணியினர் 2 போட்டிகளில் தோற்றதன் மூலம் எந்தப் புள்ளியையும் பெறாமல் மூன்றாம் இடத்திலும் இருக்கிறது.

# வருடாந்த கும்ப அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக.14

கந்தரோடை வயல்காக்கும் நாகதம்பிரான் ஆலய வருடாந்த கும்பாபிஷேகம் நாளைமறுதினம் மு.ப. 11 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 13 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறவுள்ளது.

13ஆம் நாளான எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 108 கலச சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவுபெறும். (ஒ-10)


## ROTARACT CLUB OF JAFFNA MID - TOWN

விளையாட்டுப் போட்டிகளின் விவரங்கள்

| இல | போட்டி | பிரிவு | நிபந்தனை |
|---|---|---|---|
| 01. | கூடைப்பந்து | வயதெல்லை அற்றது ஆண்/பெண் | 5 பேர் கொண்ட 10 நிமிடங்கள் |
| 02. | கரப்பந்து | வயதெல்லை அற்றது ஆண்/பெண் | 3 பேர் கொண்ட 11 புள்ளிகளை கொண்ட 3 சுற்று |
| 03. | வலைப்பந்து | வயதெல்லை அற்றது பெண் | 7 பேர் கொண்ட 20 நிமிடங்கள் |
| 04. | சதுரங்கம் | 11,13,15,17,19 மற்றும் வயதெல்லை அற்றது | வயதெல்லை அற்ற போட்டி |
| 05. | கிரிக்கெட் (மென்பந்து) | வயதெல்லை அற்றது ஆண் | 6பேர் கொண்ட 5 ஓவர்கள் |

விண்ணப்பப் படிவங்களை பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
1.உதயன் பணிமனை
2.ரமணன் ஸ்போட்ஸ், இல.175, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0777167887
*போட்டி நிரல் தெரிவு 29.08.2010 (ஞாயிறு) பி.ப.2.30 மணிக்கு உதயன் பணிமனையில் இடம்பெறும்.
*முடிவு திகதி: 28.08.2010.
தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே: 0778460089, 0771738095.
*போட்டிகள் அனைத்தும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.



## ஸ்ரீ கற்பக விநாயகர் தளபாட நிலையம்



மொறட்டுவவில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப் பட்ட அலுமாரிகள், கதிரைகள், அலுவலக மேசைகள், கணனி மேசைகள், மெத்தைகள், கட்டில்கள் போன்ற அனைத்துத் தள பாடங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: 20,000/- ரூபாய்க்கு மேல் பொருள்கள் பெற்றுக் கொள்பவர்களுக்கு அன்பளிப்புப்பொருள்கள் வழங்கப்படும்.

தவணை முறையில் பொருள்கள் வழங்கப்படும்.

ஸ்ரீ கற்பக விநாயகர் தளபாட நிலையம்
512, கே.கே.எஸ்.வீதி, மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 0214922941



## யாழ். மணமக்களை வாழ்த்துகின்றோம்



உங்கள் திருமண விழாவினை இரட்டிப்பு மகிழ்ச்சியாக்க நவநாகரிக முறையில் ஐரோப்பாவிலும், கொழும்பிலும் அழகுக் கலை தொழில்சார் நிபுணத்துவம் பெற்ற அலங்கரிப்பாளர்களால் அழகாக உங்கள் இல்லம் வந்தே மணப்பெண் அலங்காரம் செய்து தருகின்றோம்.

முற்கூட்டிய பதிவுகளுக்கு: 077 9788772, 077 2205727

திருமண மண்டப அலங்கரிப்பு மலர்கள், திருமணக் கார், பச்சை குத்துதல் போன்ற சேவைகளுக்கும்.....

ALANGARE BEAUTY CARE
18, ½ Hampdon lane, Wellawatte. Colombo 06.
www.alangare.com


# சைவக்குருமார் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஒக.14

கனடா வாழ் சைவக் குருமார்களின் நிதி உதவியுடன் சைவக்குருமார்களின் சிறார்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பங்குபற்றுபவர்களுக்கான உபகரணங்கள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையில் வைத்து வழங்கப் படவுள்ளது என்று சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி இந்த நிகழ்வு முன்னர் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொள்ளாத சிறார்கள் வருகை தந்து கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-26-322)


## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. குறிப்பு: நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 5867574



## அறைகள் வாடகைக்கு

நல்லூர் திருவிழாவில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கு அறைகள் வாடகைக்குண்டு.
(நல்லூர் மேற்கு வீதியில்)
தொடர்பு: 0777 412324


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி

**ரம்யா ரவி**



தாயின் மடியில் 14 * 11 * 1988

ஆண்டவன் அடியில் 14 * 08 * 2006



செல்லமே வாரத்தில் ஒரு தடவையாவது உன்முகம்
பாராமல் நாங்கள் உறங்குவதில்லையம்மா
நான்கு வருடங்களாக எம்மை விட்டு எங்கேயம்மா ஓடி ஒளித்தாய்? செல்வமே
மூத்தமகவென முதற்கிடைத்த அரும்பெரும் சொத்தாக உனை வளர்த்தோமே!
எமைப் பிரிய உனக்கு எப்படியம்மா மனம் வந்தது!
செல்வக் குழந்தையே பதினெட்டு வயதுவரை பாசமுடன் உனை வளர்த்து
படுகுழியில் புதைத்து விட்டு உயிர்வாழும் பாவிகள் நாங்களம்மா.

நி.மு.: வடமராட்சி கிழக்கு, கோவில், முள்ளியான்.
த.மு.: குடத்தனை மேற்கு,குடத்தனை.

தகவல்:
ரவி (தந்தை)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**தங்கவேலு குணேந்திரராசா**
(வெற்றிலைக்கேணி, முள்ளியான்)

தோற்றம்
08.01.1980

மறைவு
06.08.2008

06.08.2008 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் தங்கவேலு குணேந்திரராசா அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவுநாள் இன்று (14.08.2010) சனிக்கிழமை அன்னாரின் தற்காலிக இல்லத்தில் மதியபோசன நிகழ்வு (பளைய தோட்டம், கம்பர்மலை) மு.ப.11 மணியளவில் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பளைய தோட்டம்,
கம்பர் மலை.

தகவல்:
நிர்மலா (மனைவி), ஜனனி (மகள்).

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

சிவபூமி அறக்கட்டளையின் உபதலைவரான திரு.க.சிவாஜியின் அன்புத் தாய்



திருமதி
**தங்கரத்தினம் கந்தசாமி**
அவர்களின் மறைவுக்கு எமது இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

நிர்வாக சபை,
சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.
சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம்.

## எமது இதய அஞ்சலிகள்



எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.க.சிவாஜியின் அன்புத் தாய்

திருமதி
**தங்கரத்தினம் கந்தசாமி**

அவர்களின் மறைவுக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
[illegible]
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

# மரண அறிவித்தல்கள்

## யோகநாதன் பாக்கியலட்சுமி



அரியாலை, புங்கன்குளம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியலட்சுமி யோகநாதன் (யோனான் அக்கா) 81ஆவது வயதில் 12.08.2010 வியாழக்கிழமை பாசையூர் சென்.யோன்ஸ் வயோதிபர் இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற யோகநாதன் அவர்களின் அன்பு மனைவியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 12.08.2010 அன்று அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.உருத்திரசிங்கம் (பிரான்ஸ்) 0033314829992
மகேஸ்கண்ணா (நோர்வே) 004722160386, 004745032409

இல.18, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (102015)

## கந்தையா பிள்ளையம்மா



கொக்குவில் மேற்கு, ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த கந்தையா பிள்ளையம்மா 12.08.2010 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொ.பே: 021 3205363 (102009)

தகவல்:
பிள்ளைகள்.

## சின்னத்தம்பி இராஜசிங்கம் (ரூபி)



சாவகச்சேரி, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராஜசிங்கம் 11.08.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் சின்னத்தம்பி (J.S கராஜ் உரிமையாளர்) - தங்கம்மா (முன்னாள் பரிசாரகர், சாவகச்சேரி வைத்தியசாலை) தம்பதியரின் அன்பு மகனும் றஜனாவதியின் (டென்மார்க்) பாசமிகு கணவரும் லபோகா, லபோன் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு டென்மார்க், கோவுணில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிப்பு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே: 004990555530238 (டென்மார்க்).

தகவல்:
சகோதரர்கள்.

(சி/569937)

## பொன்னம்பலம் நித்தியானந்தன்

தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, கேசாவிற்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நித்தியானந்தன் நேற்று (13.08.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-தங்கமணி தம்பதியரின் மகனும் சாந்தரூபியின் அன்புக் கணவரும் நிசாந்தன் (லண்டன்), நிறோசன் (மாணவன், யா/இந்துக் கல்லூரி), நிகல்யா (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி), நிரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேசாவில் பிள்ளையார் கோயிலடி,
வண்ணார்பண்ணை. (102011)

தகவல்:
பொ.ஆறுமுகசாமி (சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## தன்வினை தன்னைச்சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும்!

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையிலோ அல்லது வேறு எந்த நாடுகளிலோ தேவையற்ற எதனையும் திணிப்பதில்லை. தேவையில்லாத தலையீடுகளையும் மேற்கொள்வதில்லை.

ஒவ்வொரு நாட்டிலும் அதன் அரசாங்கம் தனது இலக்குகளை அடைவதற்காக உதவி புரிகிறோம். மக்கள் மத்தியில் கருத்து ஒற்றுமையை மேம்படுத்துவதற்காகவும் உதவுகிறோம்.

ஐ.நாவின் அபிவிருத்தித் திட்டம் (யு.என்.டி.பி) உலகில் வறுமையை ஒழிப்பதற்காகச் செயற்பட்டு வருகின்றது. இலங்கை அரசின் அழைப்பின் பேரிலேயே எமது நிறுவனம் இங்கு செயற்படுகிறது. நாம் திரை மறைவில் இருந்து கொண்டு அரசுக்கும் மக்களுக்கும் உதவு கின்றோம். நாம் இதைச் செய்தோம் அதைச் செய்தோம் என்று மார் தட்டிக் கொள்வதில்லை. மக்களுக்குச் செய்யவேண்டிய பணி என்று உணர்ந்து செய்கிறோம்.

இலங்கை அரசின் அழைப்பின் பேரில் தான் நாம் இங்கு பணியாற்றுகின்றோம். இங்கு நீண்ட காலம் பணி புரியவேண்டியுள்ளது. அரசாங்கத்துடன் நெருங்கியே செயலாற்றி வருகின்றோம். எமது சேவை தேவையில்லை என்று அரசு கூறினால் நாம் இங்கிருந்து சென்று விடு வோம்.

இவ்வாறு எடுத்துரைத்திருக்கிறார் கொழும்பிலுள்ள ஐ.நா .அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்ளஸ் கே. நாடாளுமன்றச் செய்தியாளர்களுக்கான கருத்தரங்கைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் டக்ளஸ் கே தமது மனதில் இருந்ததை வெளிப்படுத்தி இருக்கிறார்.

எமது சேவை தேவை இல்லை என்று அரசு கூறினால் நாம் சென்று விடுவோம் என அவர் கூறுவதற்கான காரணம், தேவை என்ன?. அதனைச் சொல்ல வேண்டும் என்று அவரது மனதை உறுத்தியது எது?.

நாட்டு நடப்பு அறிந்த எல்லோருக்குமே டக்ளஸ் கே யின் மனவெளிப்பாட்டின் அத்திவாரம் எது என்று ஊகிக்க முடிந்திருக்கும்.

இலங்கை அரசின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக ஐந்து வாரங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட அருவருக்கத்தக்க 'கூத்தே' டக்ளஸ் கேயை இவ்வாறு கூற வைத்திருக்கிறது.

போர் நடைபெற்ற சில வாரங்களின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவும், ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் பான் கீ- மூனும் நடத்திய பேச்சுவார்த்தை இணக்கப்பாட்டின் பிரகாரம் -

இலங்கையில் நடைபெற்றதாகக் கருதப்படும் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழுவை பான் கீ - மூன் நியமித்ததும் இலங்கை அரசுக்குச் சுரம் (காய்ச்சல்) பல பாகைகள் உச்சத்துக்கு ஏறியது.

அதன் பின்னர் ஜே.வி.பியினரின் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அலுவலகத்தின் முன்னான முற்றுகையும் ஆர்ப்பாட்டமும் -

அதனால் அங்கு பணி புரிந்தவர்கள், அதிகாரிகள் வெளியேற்றப்பட்டதும் இங்கிருந்து ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹுனே திருப்பி அழைக்கப்பட்ட தும் -

அமைச்சர் விமல் வீரவன்ச, விசேட நிபுணர் குழுவைக் கலைக்கக் கோரி உண்ணாவிரதம் இருந்த தும், அது பலனளிக்காததால், உயிரைக் காப்பாற்ற ஜனாதிபதியே இளநீர் கொடுத்து முடித்து வைத்ததும் -

ஐக்கிய நாடுகள் சபையையும் அதன் அதிகாரிகளையும் எத்துணை தூரம் மனம் நோகச் செய்திருக்கிறது; இலங்கைத் தரப்பு ராஜீகப் பாரம்பரியங்களையும் தூக்கி மிதித்து நடந்ததால் உண்டான மனக்கசப்பு எத்துணை மனவடுவை, ரணத்தை ஏற்படுத்தியது; என்பதற்கு இது ஒரு சிறு மாதிரியே. யு.என்.டி.பி யின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்ளஸ் கே யின் மனதையும் அது நெருடியிருக்கிறது. இது போன்றே உலகமன்றமான ஐ.நா சபையின் உயர் பீடத்தின் நிர்வாகிகளையும், அதிகாரிகளையும் நோக வைத்திருக்கும் என்பது குறித்த முன்யோசனையோ, தூர நோக்கோ இன்றி இலங்கை அரசு நடந்து கொண்டதன் பின் விளைவுகள் இனியினித்தான் மெல்ல மெல்ல வெளிப்படும்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூனின் உத்தரவின் பேரில் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி நீல் புஹுனேயை இலங்கையிலிருந்து திருப்பி அழைத்த பின்னரும் -

அமைச்சர் விமல் வீரவன்சவின் போராட்டத்தை தடுத்து நிறுத்த முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கெச்சிதம் பேசியதும் -

ஐ.நாவின் உறுப்பு நாடுகள், அணிசேரா நாடுகளின் குழாம் உட்பட பலவும் ஐ.நா செயலாளருக்கான விசேட நிபுணர் குழு குறித்த விவகாரத்தில் தனது பக்கமே என்று எமது நாட்டு அரசு மார்தட்டினாலும் போகப் போகத்தான் இலங்கைக்கு உண்டாகவுள்ள பாதகமான விளைவின் மீது ஒளி பாய்ச்சும். தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்பதனைப் பகுத்தறியாமல் அரசு செயற்படுவது ஏனோ?

# யுத்தத்திற்குப் பின்னர் விளைச்சல் அதிகரிப்பு பெருமளவு நெல் தற்போது கையிருப்பில்

### கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் தகவல்

கொழும்பு,ஓக.14

யுத்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிக நெல் விளைச்சல் கிடைத்திருப்பதன் காரணமாக போதியளவு நெல் கையிருப்பில் உள்ளதாக கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏற்கனவே தடைசெய்யப்பட்டிருந்த நெல்வயல்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாலும் போதிய உரங்கள் விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிக நெல் விளைச்சல் கிடைத்துள் ளது.

இதன் காரணமாக 800 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை கையிருப்பில் வைக்கக்கூடியதாக உள்ளது. தற்போது நாம் அரிசியில் தன்னிறைவு அடைந்துள்ளோம்.

அரசாங்கம் நெல்கொள்வனவு செய்வதை நிறுத்துமாறு ஒருபோதும் உத்தரவிடவில்லை. ஒரு கிலோ சாதாரண ரக நெல் 28 ரூபாவாகவும் சம்பா ரக நெல் 30 ரூபாவாகவும் அர சாங்கத்தால் கொள்வனவு செய்யப்படுகின்றன என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை - அம்பாறையில் விவசாயியொருவர் தமது நெல்லுக்கு குறைந்த விலை கிடைத்ததால் நெல் மூடைகளுக்குத் தீமூட்டியதாகவும் மன்னாரில் குறைந்த விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுவதாகவும் செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே. (ஒ-க)

### ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுத வந்த

# கண்டி தமிழ் மாணவிக்கு நேர்ந்த அவலம்; அறிக்கை சமர்ப்பிக்குமாறு டி.ஐ.ஜிக்கு பணிப்பு

கண்டி,ஓக. 14

ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வந்த தமிழ் மாணவி ஒருவர் வகுப்பறை ஒன்றில் வாயில் பழம் துணி திணிக்கப்பட்டு கால் கைகள் கட்டப்பட்ட நிலையில் கதிரையுடன் பிணைக்கப்பட்டிருக்க காணப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் நடத்தி உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் அதிபருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

கண்டியில் முதன்மை பாடசாலை ஒன்றைச் சேர்ந்த இம்மாணவி கல்வியில் கெட்டித்தனம் உள்ளவர் என்றும் பரீட்சை தொடங்கிய அன்று பரீட்சை எழுதவந்தவரைக் காணாது ஆசிரியர்கள் தேடியபோது காலியாக இருந்த ஒரு வகுப்பறையில் வாயில் துணி அடைக்கப்பட்டு கதிரையில் பிணைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

பரீட்சை ஆரம்பமாகி அரை மணி நேரம் ஆகிவிட்ட பின்னரே அவரது நிலை குறித்து தெரியவந்ததால், பரீட்சை ஆணையாளரின் விசேட அனுமதியைப் பெற்று அம்மாணவி பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

பரீட்சை முடிந்த பிறகே இச்சம்பவம் பற்றி விரிவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டபோதிலும் இச்சம்பவம் பற்றிய அறிக்கையை தமக்குச் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் பொலிஸ் மேலிடத்தைப் பணித்திருப்பதாகத் தெரியவருகிறது.

மாணவியின் பெற்றோரின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ள பொலிஸார், அம்மாணவிக்கு உளரீதியில் பாதிப்பு ஏற்படாத விதத்தில் விசாரணைகளை பரீட்சை முடியும் வரை ஒத்திவைத்திருப்பதாகத் தெரிகின்றது. (ஒ-ப)

## 'இதோ என் முகவரி' நூல் அறிமுகவிழா

கைதடி, ஓக. 14

எஸ்.கவிதரனின் ''இதோ என் முகவரி'' என்னும் நூலின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி கலைவாணி வித்தியாலய மண்டபத்தில், கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்ட உறுப்பினர் சி.நிசாகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் அதிபர் ப.செல்லத்துரை பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

இந்நூலின் அறிமுக உரையை கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வே.தபேந்திரனும், நூல் ஆய்வுரையை வலிகாமம் கல்வி வலய ஆசிரிய வள நிலைய முகாமையாளர் த.சிவகுமாரனும் நிகழ்த்துவார்கள். (த-319-288)

## புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பித்தலும் நூல்வெளியீடும்

வடமராட்சி, ஓக. 14

கூட்டுறவுப் பெருந்தலைவர் தம்பையா சிதம்பரப்பிள்ளை ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பித்தலும் சமதர்மக் கூட்டுறவுச் சிற்பி நூல் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி தடக்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி கட்டைவேலி ப.நோ.கூ. சங்கத் தலைவர் த.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சமூக சேவையாளர் பாஸ்கரன் தம்பதியர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் வ.செல்வராசா, வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றுவர். (த-236-313-322)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 30 | 15.08.2010 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : ஷஷ்டி மு.இ 07.48 வரை |
| நட்சத்திரம் | : சித்திரை பி.ப. 01.38 வரை |
| சுபநேரம் | : 09.05-10.35 வரை |
| ராகுகாலம் | : 04.35-06.05 வரை |

## சக்தியின் 'வேலாயுதா' இறுவட்டு வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஓக. 14

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திரு விழாவை ஒட்டி சக்தி எப்.எம். தயாரிப்பிலான 'வேலாயுதா' என்னும் இறுவட்டு வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இசையரசர் ரி.எம்.சௌந்தரராஜன், இசையரசி பி.சுசிலா ஆகியோர் இணைந்து முருகனை புகழ்ந்து பாடிய பாடல்கள் சக்தியின் இசையால் ஓர் இறுவட்டாக வெளிவருகிறது.

சக்தி வானலையின் இசைப் படைப்புக்களுக்குப் பலம் சேர்க்கும் சத்யன் மகா லிங்கம், சக்தியின் இந்த சரித்திரப் படைப்புக்கும், பக்தியில் பரவசமாய் இசைகோர்த்துள்ளார். ஆன்மிக மணம் கமழும் அர்த்தமுள்ள வரிகளை அடுக்கடுக்காய் அமைத்து அழகிய கந்தனுக்குத் தமிழ் மாலை சூட்டிய பெருமைக்குரியவர் பாடலாசிரியர் சிம்மன்.

இவர்களின் ஒத்துழைப்போடு யாழ். மண்ணில் அலங்காரக் கந்தனை மனதிற் கொண்டு கந்தா கடம்பா கலியுக வரதா என செந்தமிழில் நான்மறை நாயகனை இசையால் துதிக்க உருவெடுத்துள்ள 'வேலாயுதா' என்னும் இறுவட்டு உலக வானொலி வரலாற்றில் இசைச் சரித்திரம் படைக்குமென்பதில் ஐயமில்லை. (ஒ-ஐ)

## குருநகர் ஐந்து மாடிக் குடியிருப்பில் பொலிஸார் டெங்கு ஒழிப்பு பிரசாரம்

யாழ்ப்பாணம், ஓக. 14

குருநகர் ஐந்து மாடி வீடமைப்புத் திட்ட மக்களுக்கு டெங்கு ஒழிப்பு தொடர்பான ஆலோசனைகளைப் பொலிஸார் நேரில் சென்று வழங்கி வழங்கியதுடன், அவை பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தினர்.

இதில் பொதுமக்கள் தமது குறைகளைத் தெரிவித்ததுடன் கழிவுநீர்



யதுடன் சிரமதானப் பணிகளையும் பார்வையிட்டனர்.

நேற்றுக்காலை யாழ். பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் விஜயரத்ன ஆகியோரின் தலைமையில் சென்ற குழுவினர், பொது மக்கள் மத்தியில் டெங்கு நோய் தொடர்பான அறிவுறுத்தல்களை

வெளியேறுவதற்கான உரிய வடிகால் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும், தாம் இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் விசனம் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் பொலிஸாருடன் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும், கிராமசேவை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (த-16-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

*சுத்தம் செய்யப்பட்டது 1 Kg. 450/=*

கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

*விஜயகுமார்*
*குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.*

## வாடகைக்கு

வீடு ஒன்று களஞ்சியத் தேவைகளுக்கு வாடகைக்கு விடப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: **077 6569652**

## வீடு வாடகைக்கு

*பிறவுண் றோட்டில் வீடு வாடகைக்குண்டு. (Office தேவைகளுக்கு மட்டும் வழங்கப்படும்.)* **தொ.பே.: 0770712439**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தொண்டைமானாறு மீன்பிடி படகுகள் போக்குவரத்து செய்யும் பாதையை (வான்) தோண்டித் தந்தமைக்காக மாண்புமிகு



அமைச்சர்
**K.N. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



வடமராட்சி கரையோர
இணைப்பாளர் தோழர்
**தெய்வேந்திரம்** அவர்களுக்கும்

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாச தலைவர் **அ.எமிலியாம்பிள்ளை** அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு மேன்மேலும் மீனவ சமுதாயத்திற்கு தங்கள் சேவையை தொடர்ந்து செய்ய வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றோம்.

**ஆதி கோவிலடி**
**ஆதி சக்தி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.**

யாழ் மாவட்ட
## பேக்கரி உரிமையாளர் சங்கம்
### பொதுக் கூட்ட அறிவித்தல்

*மேற்படி சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டமும், 2010ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும், 2008/2009ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தலும், 29.08.2010 அன்று மு.ப.11 மணிக்கு தலைவர் மா.நாகலிங்கம் அவர்களின் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன. அன்றைய கூட்டத்தில் ஏதேனும் பிரேரணைகள் சமர்ப்பிக்கவிரும்பின் 25.08.2010 அன்று மதியம் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது கடித மூலமாகவோ சங்க அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.*

★ குறித்த நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும் என்பதால் அங்கத்தவர்கள் அனைவரும் குறித்த நேரத்திற்கு சமுகம் தரவும்.

நேரிவாளர் குழு சார்பாக
**த.துரைரஞ்சன்,**
செயலாளர்.

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## பெருமையோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு
**கந்தையா கணேஷ்**

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் புகழ் பூத்த மைந்தர்களில் ஒருவரும், கல்லூரியின் வளர்ச்சியில் சிரத்தையோடு செயற்பட்டவரும், பழைய மாணவர் சங்கப் போசகருமான உயர்திரு கந்தையா கணேஷ் அவர்கள் அரச சேவையில் ஐம்பதாம் ஆண்டில் கால்பதித்து மூன்று மாவட்டங்களின் அரச அதிபராகச் சேவையாற்றிய பெருமையோடு இளைப்பாறிய இவ் வேளையில் கல்லூரிச் சமூகம் சார்பில் பெருமையோடு பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் இளைப்பாற்றுக்காலம் தேக ஆரோக்கியத்துடன் நீண்ட நிறைந்த வாழ்வாக அமைய இறைவனை இறஞ்சி நிற்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம், வல்வெட்டித்துறை.
பழையமாணவர் சங்கம் கொழும்பு.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை.

(101984)

## நாளைமுதல் "மகாபாரதம்" சொற்பொழிவு

வடமராட்சி, ஓக. 14

பொலிகண்டி, இருப்பைமூலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழாக் காலத்தில் தினமும் இரவு 7.30 மணிக்கு ''மகாபாரதம்'' தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை பிரபல ஆன்மீக சொற்பொழிவாளர், சைவப் புலவர் பொன். சுகந்தன் நிகழ்த்துவார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்ற தினம் முதல் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இந்தத் தொடர் சொற்பொழிவு நடைபெறும். (த-236)


## - அதிஷ்டசாலி ஆகலாம் -- அதிஷ்டசாலி ஆகலாம் -

*அறிமுக விழாவில் கலந்துகொள்வோரில் தெரிவுசெய்யப்படும்*
*5 அதிஷ்டசாலிகளுக்கு ரூபாய் 3500 பெறுமதியான CDகள் வழங்கப்படும்.*

*'நிலவு' நிறுவனம் நடாத்தும்*
### - தமிழ் மென்பொருள் அறிமுக விழா -

இடம் : வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்
காலம் : 14/08/2010 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி

மென்பொருள்களின் செயல்முறை விளக்கமும் விற்பனையும் இடம்பெறும்.

*வெளியிடப்படும் மென்பொருள்கள்*
பொன்மொழி, பொன்பேனா, பொன்விழி

**பொன்மொழி**
தமிழுக்குத் தரமான, விரிவான சொல்திருத்தியுடன் அகராதி, அகரவரிசையாக்கம் என வசதிகளைக் கொண்ட ஒரு மென்பொருள்.

**பொன்பேனா**
உங்களது கையெழுத்தினை உடனடியாக தமிழில் தட்டச்சு செய்துதரும் மென்பொருள்.

**பொன்விழி**
Scan செய்யப்பட்ட பக்கங்களில் இருந்து தமிழ் எழுத்துகளை பிரித்து உணர்ந்து தட்டச்சு செய்துதரும் மென்பொருள். தமிழ் OCR.

புத்தகம்.com ஈழத்தமிழரின் சர்வதேச புத்தகக்கடை! உங்கள் புத்தகங்களை நாங்கள் விற்கிறோம்!!

- அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் -

பொன் தமிழ்
*தமிழால் கணினி உலகை வெல்வோம்*

தொடர்புகளுக்கு : 0 777 769 751, 0 777 707 839

### - தமிழ் மென்பொருள்கள் விசேட விலையில் -

**பொன்மொழி** தமிழுக்குத் தரமான, விரிவான சொல் திருத்தியுடன் அகராதி, அகரவரிசையாக்கம் என பல வசதிகள்
விலை: ரூபாய் 2000

**பொன்பேனா** நீங்கள் கையால் எழுதும் போதே உடனடியாக தமிழில் தட்டச்சு செய்து தரும் ஆற்றல் கொண்ட மென்பொருள்.
விலை: ரூபாய் 2500

**தமிழ் யுனிகோட் எழுதி**
* தமிழ் தட்டச்சு ஆசான்
* இ கலப்பை 2.0
* இ கலப்பை 3.0
* NHM Writer
விலை: ரூபாய் 350

**திருக்குறள்**
3 தமிழ், 2 ஆங்கிலம் பொழிப்புரைகளுடன்!
1330 குறளும் ஒலியுடன்!
விலை: ரூபாய் 350

**தமிழ் தட்டச்சுப் பலகை**
யுனிகோட் Unicode மூலமாக தமிழை தட்டச்சுச் செய்யக்கூடிய தட்டச்சுப்பலகை.
விலை: ரூபாய் 1990

**தமிழ் எழுத்துருக்கள் படங்கள்**
Tamil Vairam (தமிழ் வைரம்)
ANU GRAPHIC SYSTEMS

சிறுவர்களுக்கான கதைகள், பாடல்கள் கொண்ட குறுவட்டுக்கள்
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்.



விலை: ரூபாய் 350 இலிருந்து


## முன்பள்ளி விளையாட்டு விழா

வடமராட்சி, ஓக. 14

புலோலி இலங்கைநகர் உதயசூரியன் அறவழி மழலைகள் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நிலையத் தலைவர் க.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி ஈ.பி.டி.பி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கல் புசல்லாவ, கற்கோவளம் இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் விஜயரட்ண உட்பட பலர் கலந்துகொள்வார்கள். (த-236)

## பரத நாட்டிய பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 14

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியினால் வளாகம் கடந்த பரதநாட்டியப் பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ''கலைக்காவிரி'' நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து இக்கல்லூரியில் நடத்தப்படும் இவ்வளாகம் கடந்த பரதநாட்டிய பட்டப் படிப்புகளுக்காக முதுநுண்கலைமாணி (2 வருடம்), இளங்கலைமாணி (3 வருடம்), பெருஞ்சான்றிதழ் கற்கை (ஒரு வருடம்) ஆகிய கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கற்கை நெறிகளுக்கு இம் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். (த)


## அறைகள் வாடகைக்கு

யாழ்.நகரில், மானிப்பாய் வீதியில் மாணவருக்கு/ அலுவலக உத்தியோகத்தருக்கு அறைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: 189, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## கணிதம்

*தரம் 9, 10, 11 மற்றும் O/L பரீட்சார்த்திகளுக்கும் கணிதம் தனியாகவும் குழுக்களாகவும் கற்பிக்கப்படும்.*
**தொடர்பு: 077 2627890, 078 9151905**

## காசாளர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு அனுபவம் வாய்ந்த காசாளர் உடன் தேவை. 40 வயதுக்கு மேற்பட்ட ஆண் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.
*36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*021 222 8437*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் குடியமர்ந்துள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து ஆளுநர் ஆராய்வு

## உரிய வசதிகளை ஏற்படுத்தவும் அவர் உறுதி

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறி யுள்ள முஸ்லிம் மக்கள் எதிநோக்கும் பிரச் சினைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வடமாகாண ஆளுநரின் யாழ்.அலுவலகத்தில் மாலை 4 மணிக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட முஸ்லிம் மக்களின் சார்பில் யாழ்.மாநகரசபை உறுப்பினர் மௌலவி சுபியான் கலந்து கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் சில கோரிக்கைகள் மாநகரசபை உறுப்பினர் சுபியானால் முன்வைக்கப்பட்டன.

முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்தை விரைவாக்கி அழிந்து இருக்கும் பிரதேசங்களைக் கட்டி எழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். மாவட்டத்திலுள்ள பழைய இரும்புகளை கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட வேண்டும். சுன்னாகத்தில் உள்ள சந்தையில் முஸ்லிம்களுக்குரிய கடைகளை மீள வழங்க வேண்டும். ஒஸ்மானிய கல்லூரியில் விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம் என்பவற்றை நிறுவுவதுடன் தளபாடங்களையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுபியான் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், மீள் குடியேறிய முஸ்லிம் மக்களுக்கு 8 பைக்கற் சிமெந்து வழங்க உள்ளதாகவும், பழைய இரும்புகளை கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு செயலாளரிடம் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், சுன்னாகம் சந்தையில் முஸ்லிம்களின் கடைகளை மீண்டும் பெறுவதாயின் தகுந்த ஆதாரங்களுடன் பிரதேச சபைச் செயலரிடம் தொடர்பு கொண்டால் அவர் அதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும் கூறினார்.

அத்துடன் ஒஸ்மானியா கல்லூரிக்கு நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், தளபாடம் ஆகியவற்றை மிக விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், யாழ். மாவட்டத்தில் அமைக்கவுள்ள 10 ஆயிரம் வீடுகளில் முஸ்லிம்களுக்கும் வீடுகள் வழங்கப்படும் எனவும் ஆளுநர்கூறினார்.

மீள்குடியேற்றப்பட்ட வீட்டுத் தலைவர்கள் 16 பேருக்கு சைக்கிள்களும் நுளம்பு வலைகளும் தாய்மார்களுக்குரிய பால்மா பக்கற்றுகளும் இதன்போது வழங்கப்பட்டன.

ஒஸ்மானியாக் கல்லூரிக்கு வலயக் கல்விப் பணிப்பாளரை நேரில் சென்று அங்குள்ள குறைகளை கேட்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் பணிப்புரை வழங்கினார்.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-319)

### ரம்ழான் சிந்தனை

வருடத்திலோர் மாதம். அதுவே பூத்துக் குலுங்கும் ரம்ழான் மாதமாகும். அதனது அருளும், சுபசோபனங்கள், நற்செய்திகள் எண்ணிலடங்காதவை. பாவத்திலிருந்தும் விடுதலை பெற்ற ஒருவன் நல்லடி யானாகத் தன்னை மாற்றிக் கொள்வதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் ரம்ழானை அமைத்துத் தந்துள்ளான். - காதர் -

# சர்வதேச கூட்டுறவு விழா

கொழும்புத்துறை, ஓக. 14

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடத்தப்படும் 88ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாநகரசபை முதல்வர் யோ.பற்குணராஜா, இலங்கை தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் பந்துரணவக்க, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான எஸ்.அருள்ராஜ், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். சிறப்பு விருந்தினர்களாக சகல கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்கள் பங்குபற்றுவர்.

கூட்டுறவுச் சபையால் நடத்தப்பட்ட விளையாட்டு, கலைப் போட்டிளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

கலைநிகழ்வுகளாக போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களின் பேச்சு, கவிதை, பாடல், நடனம், என்பனவும் ''வாழ்க வளமுடன்'' என்னும் நாடகமும் இடம்பெறும். (த-135)

# கடற்றொழில் அமைச்சின் உதவியுடன் இரண்டு ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள்

## யாழ்ப்பாணத்திலும், பருத்தித்துறையிலும் அமைப்பு



யாழ்ப்பாணம், ஓக. 14

கடற்றொழில் அமைச்சின் நிதி உதவியுடன் இரண்டு கொள்கலன் வடிவிலான ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள் கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இந்த இயந்திரங்களைச் செயற்படுத்துவதற்கான வேலைகள் ஐஸ்மாற் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் இதற்காக அமைச்சு 20 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. எனவும் அவர் கூறினார்.

மேலும் இயந்திரங்களைச் செயற்படுத்துவதற்காக 4 மில்லியன் ரூபாவை வழங்குவதாக யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நாமல் ராஜபக்ஷ குழுவினருடனான கலந்துரையாடலின் போது உறுதி அளிக்கப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் கூறினார்.

யாழ். முதலாம் குறுக்கு வீதியில் ஒரு ஐஸ் உற்பத்தி நிலையமும், பொலிகண்டி, பருத்தித்துறையில் ஒரு ஐஸ் உற்பத்தி நிலையமும் அமைக்கப்பட்டுள்ள தெனவும், கட்டடப் பணிகளுக்காகப் 10 மில்லியன் ரூபாவும், மின்சாரத்துக்காக 4.7 மில்லியன் ரூபாவும் இத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதெனவும் தர்மலிங்கம் கூறினார். (த-319)

# யாழ். பல்கலைக்கழக இவ்வாண்டு பட்டமளிப்பு விழா ஒக்ரோபர் 6 இல்

யாழ்ப்பாணம், ஓக 14

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் இவ்வாண்டுக்கான பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இப் பட்டமளிப்பு விழாவில் கலாநிதி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா, இளமாணி, டிப்ளோமா ஆகிய பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே 20.11.2009 ஆம் திகதிக்குப் பின்பு நடைபெற்ற தேர்வுப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள் தமக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் அறிவுறுத்தலுக்கமைய சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை www.jfn.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பெற்று வேண்டுகோள் கட்டணம் 200 ரூபா, சான்றிதழ் கட்டணம் - 350 ரூபா, பட்டதாரி மேலங்கிக் கட்டணம் - 50 ரூபா ஆகியவற்றுக்குரிய கட்டணங்களை யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை, கணக்கு இல - 162100160000 880 இற்கு செலுத்தி வங்கிப் பற்றுச்சீட்டில் மாணவரின் பெயரையும் பதிவு இலக்கத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பப் படிவத்துடன் அனுப்புதல் வேண்டும்.

இவ் விண்ணப்பங்களை உதவிப் பதிவாளர் அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கும், வவுனியா வளாக மாணவர்கள் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/தேர்வுகள், வவுனியா வளாகம், வவுனியா என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு பதிவாளர் அறிவித்துள்ளனர். (த-26-313-318)

# நிறை குறைந்த பாண் விற்பனை; அதிகாரிகளின் பரிசோதனையில் அம்பலம்

பண்டத்தரிப்பு,ஓக.14

யாழ். குடாநாட்டில் உள்ள சில வெதுப்பகங்களில் நிறுத்தல் அளவைகள் பகுதியினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது சில வெதுப்பகங்கள் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். செயலக நிறுத்தல் அளவைகள் பகுதியினர் பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய பகுதிகளில் இயங்கும் மூன்று வெதுப்பகங்கள் நிறைகுறைந்த பாண் விற்பனை செய்வதைக் கண்டுபிடித்தனர். இவர்கள் விற்பனை செய்த பாண் 450 கிராமுக்கும் குறைவாகக் காணப்பட்டது. இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை குடாநாட்டிலுள்ள அனைத்து வெதுப்பகங்களிலும் படிப்படியாக தாம் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் நிறுத்தல் அளவைகள் பகுதியினர் தெரிவித்தனர். (த-26)

# அரச அதிபர்களுக்கான மாநாடு அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 14

அனைத்து மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கான இரண்டு நாள் மாநாடு முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு அடுத்த மாதம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறும்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு இவ் வருடம் யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பொது நிர்வாக மற்றும் வீடமைப்புப் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அடுத்த மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இந்த மாநாடு இடம்பெறும் என்றும், இதில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 25 அரசாங்க அதிபர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேற்கொள்வார் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (த-319)





அளவெட்டி பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டெங்கு நோய் அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய திண்மக் கழிவுகள் அகற்றும் நடவடிக்கை வலி.வடக்கு பிரதேச சபை அனுசரணையில் இடம்பெற்றது.

இதில் அளவெட்டி பொது சுகாதார பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன், கிராம அதிகாரி முன்னிலையில் திண்மக்கழிவுகள் டிராக்டர் மூலம் அகற்றப்பட்டுப் புதைக்க நடவடிக்கை எடுப்பதையும், பொதுமக்கள் அளவெட்டி வீதிகளைச் சுத்தப்படுத்தி கழிவுகள் சேர்ப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள் :- இரா.சுதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சுடர்

உதயன் நாளிதழ் ஊடாக நடத்தும்

புலமைச்சுடர் மழலைகளின் புதுச்சுடர்

தொடர் 06

## தரம் 05 புலமைப் பரிசில் இறுதிக் கருத்தரங்குத்தொடர் 2010



வளவாளர்:
மாணவர் சமூகத்தின் பாராட்டுக்குரிய
எமது தேசிய ஆசிரியர் எஸ்.ஏ.சந்திரபவன், கொழும்பு.

| வினாத்தாள் I | 45 நிமிடங்கள் |
|---|---|
| சுட்டெண் | புள்ளிகள் |

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

★ முதலிரண்டு வினாக்களிலும் முதலில் தரப்பட்டுள்ள எல்லாச் சொற்களுக்கும் பொருந்தக்கூடிய மிகப் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து கீறிடுக.

01.
தொழில்
தானியம்
கிராமம்
பயிர்
உணவு

i)  ii)  iii) 

02.
பயிற்சி
ஆரோக்கியம்
போட்டி
வெற்றி
விளையாட்டு

1)  2)  3) 

★ 03 ஆம், 04 ஆம் வினாக்களில் முதலில் உள்ள படத்துடன் மிகவும் தொடர்புடைய ஒரு படத்தை எதிரேயுள்ள படங்களிலிருந்து தெரிவுசெய்க.

03.

  
1) 2) 3)

04.


  
1) 2) 3)

★ 05 ஆம் வினா தொடக்கம் 10 ஆம் வினா வரை சரியான விடையின் கீழ் கோடிடுக.

05. இதழ் விரித்து மலர்ந்திருப்பவை எல்லாம் மலர்களே -
இக்கூற்றின்படி கீழுள்ளவற்றில் சரியான கூற்று,
1) இதழ்கள் இல்லாத மலர்களும் உள்ளன.
2) எல்லா மலர்களுக்கும் இதழ்கள் உள்ளன.
3) சில மலர்களுக்கு முட்களும் உண்டு.

06. காலையில் சூரியன் உதிக்கும்-
இக்கூற்றின்படி பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
1) சூரியன் உதிப்பது காலைவேளையில் ஆகும்.
2) சூரியன் மாலையில் மறைகின்றது.
3) சூரியனும் சந்திரனும் மாலையில் மறைகின்றது.

07. அருகிலுள்ள சாதனத்துடன் எவ்விதத்திலும் பொருந்தாத சொல் யாது?
1) தொடர்பாடல்.
2) வலைப்பின்னல்.
3) காட்சி.



★ கீழுள்ள குறியீட்டுப் பிரசினத்தை அவதானித்து 08-10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | | | |
|---|---|---|---|---|
| ✪ | + | ⊙ | = | 9 |
| + | | + | | |
| ⌘ | + | ☒ | = | 6 |
| = | | = | | |
| 8 | | 7 | | |

08. ✪ இக் குறியீட்டின் பெறுமதி 6 எனின் ⌘ இதன் பெறுமதி யாது?
1) 2  2) 3  3) 4

09. ⊙ இக்குறியீட்டின் பெறுமதி யாது?
1) 2  2) 3  3) 4

10. ✪ இக்குறியீட்டுப் பெறுமதியிலிருந்து ☒ இக்குறியீட்டுப் பெறுமதியைக் கழித்தால் வரும் பெறுமதி யாது?
1) 2  2) 3  3) 4

★ 11-15 வரையான வினாக்களின் சரியான விடையினைத் தெரிவு செய்க.
இச்செங்கல் அடுக்கில் ஒவ்வொரு பக்கத்திலும் சில செங்கற்கள் நிறந்தீட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்திற்கும் எதிர்ப்பக்கங்களிலும் அதே எண்ணிக்கையில் நிறந்தீட்டப்பட்டுள்ளன.



11. இச்செங்கல் அடுக்கில் நிறந்தீட்டப்பட்டுள்ள செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 12  2) 16  3) 18

12. இச்செங்கல் அடுக்கில் உள்ள செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 32  2) 36  3) 38

13. கீழே நிரையில் உள்ள எண்கள் ஓர் ஒழுங்கின்படி எழுதப்பட்டுள்ளன. அடுத்துவரும் எண் யாது?

10 → 19 → 11 → 29 → 12 → 39 → .......?.........

1) 13  2) 40  3) 49

14. பின்வரும் எண்களை இறங்குவரிசையில் எழுதும்போது இரண்டாவதாக வரும் எண் யாது?

8, 20, 12, 16, 11, 22, 10

1) 20  2) 16  3) 12

★ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நிரையிலும் ஐந்து சொற்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சொல் வேறுபட்டது. அதனைத் தெரிவுசெய்க.

15. 1) பேனா  2) பென்சில்  3) கொப்பி
4) கரும்பலகை  5) அழிறப்பர்

16. 1) தூரம்  2) பாரம்  3) நீளம்
4) அகலம்  5) உயரம்

★ முதலில் தரப்பட்டுள்ள சோடிச் சொல்லில் காணப்படுகின்ற தொடர்பை அறிந்து, அடுத்துள்ள சொல்லுக்குரிய சோடிச் சொல்லைத் தெரிவு செய்க.

17. புத்தகம் - வாசித்தல், பேனா .......?...........
1) சீவுதல்  2) வரைதல்  3) எழுதுதல்


18. இறக்கைகள் - பறத்தல், .................... - நடத்தல்
1) கால்கள்  2) கைகள்  3) சில்லுகள்

★ தரப்பட்டுள்ள சொற்களையும் அவற்றுக்குரிய ஆங்கிலக் குறியீடுகளையும் அவதானித்து விடை தருக.


19. படம் மடம் பலம் ஆகிய சொற்களை ஆங்கில எழுத்துக்களால் எழுதினால், கீழுள்ள விடைகளில் மடம் என்னும் சொல்லின் ஆங்கிலக் குறியீடு எதுவாக இருக்கும்?
1) KRM  2) KDM  3) ADM

20. குமரகுருபரன் என்பவர் தனது பெயரை ABCADECF என எழுதுவார் எனின், பரமன் என்பவர் தனது பெயரை எழுதிய முறை எதுவாக இருக்கும்?
1) ECBF  2) ECAD  3) ABCF

★ கீழே ஒவ்வொரு வினாவிலும் கூட்டில் சில உருக்கள் காணப்படுகின்றன. அவற்றில் இரு உருக்கள் ஏனையவற்றிலிருந்து வேறுபட்டவை. அவ் உருக்களைக் குறிக்கும் விடை எது?

21.



1) A யும் B யும்
2) B யும் E யும்
3) C யும் B யும்

22.




1) A யும் D யும்
2) B யும் E யும்
3) C யும் E யும்

★ அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து விடை தருக.

23. ஆசிரியர் 16 அங்குலம் நீளமுள்ள ஒரு கம்பியை எடுத்து இரு துண்டுகளாக வெட்டினார். ஒரு துண்டை விட மற்றைய துண்டு 4 அங்குலம் அதிகமாக இருந்தது. நீளம் குறைந்த துண்டின் நீளம் யாது?
1) 5 அங்குலம்  2) 6 அங்குலம்  3) 7 அங்குலம்

24. கரன் பாடசாலை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது அவனது வலது கைப்பக்கம் சூரியன் உதித்தது. எனவே, அவன் செல்லும் திசை எதுவாக இருக்கும்?
1) வடக்கு  2) தெற்கு  3) மேற்கு


★ கீழேயுள்ள வட்டமேசையினையும் அதில் இருந்து விருந்து உண்ணும் A B C D E F G H ஆகிய விருந்தாளிகளையும் அவதானித்து விடை தருக.




25. A யிற்கு எதிரே இருப்பவருக்கு வலது பக்கத்தில் இருப்பவர் யாருக்கு எதிராக இருக்கிறார்?
1) B யிற்கு  2) E யிற்கு  3) H இற்கு


26. G இற்கு அருகில் இருப்பவருக்கு எதிரே B இருக்கிறார். எனவே B யிற்கு எதிரே இருப்பவர் யார்?
1) G  2) F  3) E


★ கீழே A யுடன் தொடர்புடைய உரு B ஆகும். அதே போன்று C யுடன் தொடர்புடைய உருவை எதிரில் உள்ள உருக்களில் இருந்து தெரிவு செய்க.

27.






28.



★ கீழே சொற் பகுதிகளின் பிரிப்புகளையும் இணைப்புகளையும் கவனத்திற் கொண்டு விடை தருக

29. வருமதி - என்பதை மதிவரு என எழுதினால்;
கடுகதி என்பதை எவ்வாறு எழுதலாம்.?
1) கடு திக  2) திக கடு  3) கதி கடு

30. பாத்திரம் என்பதில் பாரதி எனும் சொல்லை எவ்வாறு பெற்றோமோ, அதுபோல சாஸ்திரம் என்பதிலிருந்து பெறக்கூடிய சொல் எது?
1) சாதிர  2) சாரதி  3) திரசா

31. காகங்கள் எல்லாம் பறவைகள் ஆகும். பறவைகளுக்கு இறக்கைகள் உள்ளன. எனவே, கீழ் உள்ளவற்றில் சரியான கூற்று யாது?
1) இறக்கைகள் உள்ளவை அனைத்தும் காகங்கள்.
2) காகங்களுக்கும் இறக்கைகள் உள்ளன.
3) இறக்கைக்கள் இல்லாத காகங்களும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மேற்படி சங்கத்தின் வளாகத்தை அமைச்சர் பார்வையிடுவதையும், அது தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டறிவதையும் முதல் இரு படங்களிலும்,

கூட்டுறவுத்துறையினருடனான சந்திப்பில் நாமல் ராஜபக்ஷ மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சகிதம் அமைச்சர் கலந்து கொண்டிருப்பதை மூன்றாவது படத்திலும், இதில் கலந்து கொண்ட கூட்டுறவு சங்கங்களின் உத்தியோகத்தர்களை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: சுகந்தன்)*

# வடபகுதியில் புதிய முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்புகள், சலுகைகள் வழங்கப்படும்

## முதலீட்டுச் சபையின் பிரதிப் பணிப்பாளர் தகவல்



யாழ்ப்பாணம், ஓக.14

வடபகுதியில் முதலீட்டுகளை மேற்கொள்ளவுள்ள புதிய முதலீட்டாளர்கள் இலங்கை முதலீட்டுச்சபையில் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் பல்வேறு ஊக்குவிப்புகள், சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வடபகுதியில் முதலிடு வதற்கு இனங்காணப்பட்டுள்ள துறைகள் தொடர்பாகவும் முதலீட்டாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி ஊக்குவிக்க நாம் காத்திருக்கிறோம்.

இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ். பிராந்திய சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர் ஏ.ஆர்.ஜெயமனோன் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

வட பகுதியில் முதலிடுவதற்கு புதிய முதலீட்டாளர்கள் பலர் ஆர்வமாக இருக்கிறார்கள். எந்த துறையில், எப் பகுதியில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது குறித்து அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். உள்நாட்டு முதலீட்டாளர்கள் மட்டுமன்றி வெளிநாட்டு முதலீட்டாளர்களும் அதிக ஆர்வமாக உள்ளனர்.

இலங்கை முதலீட்டு சபையில் பதிவுகளை மேற்கொள்வதன் ஊடாக முதலீட்டாளர்கள் பல்வேறு சலுகைகளைப் பெற முடியும்.

முதலீட்டுச்சபையில் பதிவதற்கு ஆகக் குறைந்த முதலீடு 40 மில்லியன் ரூபாவாகும். அத்துடன் 50 பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கவும் வேண்டும். இந்த நிலைமை முதலீட்டுத்துறைக்கு ஏற்ப வேறுபடும். இது தொடர்பாக முதலீட்டாளர்கள் எம்மிடம் ஆலோசனை பெறலாம்.

இவ்வாறான முதலீட்டாளர்கள் 15 வருடங்களுக்கு வருமான வரி செலுத்தத் தேவையில்லை. அத்துடன் மூலதனப் பொருள்களுக்கு சுங்கத்தீர்வை விலக்களிக்கப்படுவதுடன் ஏற்றுமதியாளர்களின் உள்ளீடுகளுக்கான சுங்கத் தீர்வை விலக்கும் அளிக்கப்படும்.

மேலும், முதலீட்டுத் தொழில்துறைகளுக்கு என வட பகுதியிலுள்ள அரச காணிகளை நீண்ட காலக் குத்தகை அடிப்படையிலும் பெற்றுக்கொடுக்க முடியும்.

எனவே புதிய முதலீடுகளை மேற்கொள்ளவுள்ள முதலீட்டாளர்கள் தமது விண்ணப்பப்படிவங்களுடன் திட்ட முன்மொழிவுகளையும் எமது பணிமனைக்கு சமர்ப்பித்து உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதன் மூலமே இவ்வாறான ஊக்குவிப்பு,சலுகைகளைப் பெறமுடியும்.

இதேவேளை,

விவசாயம், மீன்பிடித்துறை, கைத்தொழில்துறை, பால்பண்ணை, திறன் விருத்தி, உல்லாசப் பிரயாணத்துறை, கட்டட அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பமும், வியாபார செய்முறைகளை வெளிநபர்களுக்கு ஒப்படைத்தல் ஆகியன வட பகுதியில் முதலிடக் கூடிய துறைகளாகத் தற்போது இனங்காணப்பட்டுள்ளன - என்றார். (த-14)

## கடற்றொழில் திணைக்கள பணியாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.14

இலங்கை முழுவதும் உள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறை திணக்களங்களில் பணியாற்றும் சகல வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குக் கடற்றொழில் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பில் உள்ள 'சிறிலங்கன் பவுண்டேஷன்' நிறுவனத்தில் நடைபெற உள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 14 பேர் பங்குபற்ற உள்ளனர். (த-319)




# கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலகு கடன் மத்திய வங்கி விரைவில் வழங்கும்

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்.மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலகு கடன் மூலம் நிதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மக்கள் வங்கியின் ஊடாக இலங்கை மத்திய வங்கி இந்த வட்டி குறைந்த இலகு கடனை சங்கங்களுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் இந்தக் கடன் மூலம் என்ன திட்டங்களை நடைமுறைப் படுத்தவுள்ளனவோ அவை தொடர்பான விவரங்களை முன்கூட்டியே கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

# சர்வதேச அஞ்சல் தின நிகழ்வு 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஓக.14

சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகளை இம்முறை யாழ்ப்பாணத்திலும் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி வி.குமரகுரு தலைமையில் நடைபெறவுள்ளது.

தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, தபால்மா அதிபர் எம்.கே. திசநாயக்க, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் தபால் திணைக்கள உயரதிகாரிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த அஞ்சல் தின நிகழ்வில் தபாலகப் பணியாளர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த-26)

## கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு விசேட வகுப்பு

யாழ்ப்பாணம், ஓக.14

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பொதுத்தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையின் சுப்பிரமணியம் மண்டபத்தில் விசேட வகுப்பு நடைபெறவுள்ளது.

# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக.14

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா காலத்தில் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தெய்வீக இசையரங்கு நிகழ்வை நடத்தவுள்ளனர்.

இளங்கலைஞர் மன்றத் தலைவர் க. சோமசேகரம் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்திருவிழா அன்று முதலாம் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

அன்றைய தினம் ஆசியுரைகளை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் ஆறு. திருமுருகன் ஆகியோர் நிகழ்த்துவர்.தெய்வீக இசையரங்கு நிகழ்வில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறவுள்ளது. கே. ஆர். சுந்தரமூர்த்தி, கே. ஆர்.எஸ். தேவதாஸ் ஆகியோர் நாதஸ்வரமும் கே.ஆர்.எஸ். இராமதாஸ், ஆர்.பாஸ்கரன் ஆகியோர் தவிலும் இசைக்கவுள்ளனர். (த-201)

* * *

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழா காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சமய சொற் பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகளை நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதலாம் நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அன்றைய தினம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் சுப்பிரமணியம் உதயபாலன் தலைமையில் பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 6மணி வரை நிகழ்வுகள் நடைபெறும்.

நிகழ்வுகள் வரிசையில் இந்து சமய தர்மம் என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். கலை நிகழ்வுகளாக புங் குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசர் அறநெறிப் பாடசாலை, மாதகல் விநாயகர் அறநெறிப் பாடசாலை, சங்கானை வெல்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெறும். (த-201)

# நல்லூர் ஆலய உற்வசத்தையொட்டி சில வீதிகளில் வாகனம் செல்லத்தடை

யாழ்ப்பாணம், ஓக.14

நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் மஹோற்சவ காலங்களில் குறிப்பிட்ட சில வீதிகள் வாகனப் போக்குவரத்திற்காக மூடப்படவுள்ளதாக மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசடி சந்திக்கும் முத்திரைச் சந்திக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை வீதி, பிராமணக்கட்டு ஒழுங்கை சந்திக்கும் சங்கிலியன் வீதி சந்திக்கும் இடைப்பட்ட கோயில் வீதி, செட்டித்தெரு ஒழுங்கையில் இருந்து பருத்தித்துறை வீதி வரையான செட்டித்தெரு வீதி போன்ற இடங்களில் வீதித் தடைகள் அமைக்கப்படவுள்ளன.

இதனைவிட பேருந்துகள் சிற்றூர்திகள் மற்றும் கனரக வாகனங்கள் ஆனைப்பந்தி சந்தியில் இருந்து நாவலர் வீதி, கச்சேரி-நல்லூர் வீதி, செம்மணி வீதி, முத்திரைச் சந்தி வீதி ஆகியவை ஊடாகச் செல்ல அனுமதிக்கப்படும்.

பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியூடாகப் பேருந்துக்களும் சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடைசெய்யப்படும்.

அத்துடன் வாகனங்களுக்கான தரிப்பிடங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

முத்திரைச் சந்தியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியிலும், கந்தர்மடம் சந்திக்கு அப்பால் அரசடி வீதியிலும், அம்மன் வீதி-பருத்தித்துறை வீதிச் சந்திக்கும் அப்பால் பருத்தித்துறை வீதியிலும், வீரமாகாளி அம்மன் ஆலய வீதிகளிலும், செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பாலும் கோயில் வீதியிலும் வாகனங்கள் தரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (த-26)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக.14

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தரம் 1-4 வரை கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 17, 18 ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-201)

## எதிர்வரும் நாள்களில் மந்தாரமான காலநிலை

யாழ்ப்பாணம், ஓக.14

எதிர்வரும் நாள்களில் மப்பும் மந்தாரமுமான காலநிலை நிலவும் எனவும், சில சந்தர்ப்பங்களில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் யாழ்.அலுவலக பொறுப்பதிகாரி புஷ்பநாதன் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 11ஆம் திகதி 36 பாகை ஷெல்சியஸாக இருந்த வெப்பநிலை 12 ஆம் திகதி 35 பாகை ஷெல்சியஸாகவும், நேற்றைய தினம் 33.1 பாகை ஷெல்சியஸாகவும் இருந்தது எனவும் அவர் தெரிவித்தார். (த-322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை:** யாழ்.இந்து கௌரவ குடும்பம், 31 வயது. 8 இல் செவ்வாய், 72 கிரகபாவமுடைய பிரபல தனியார் நிறுவனமொன்றில் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் மாதம் 25000/= வருமானம்பெறும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும்.
*விளம்பர இல: 4058, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

## டேடன்ஸ் ஆய்வுகூடம் DURDANS LAB

**வெற்றிடங்கள்**

1. ஆய்வுகூட பயிலுநர் (Lab. Technician)
★ தகைமை:. G.C.E. A/L Science. ★வயது: 25இற்கு கீழ்
கொழும்பில் பயிற்சி வழங்கப்படும்.
2. வேலையாள் - Labourer. 3. பாதுகாப்பு ஊழியர் - Security

தகுதியானவர்கள் 15.08.2010 ஞாயிறு
காலை 9 மணிக்கு டேடன்ஸ் ஆய்வுகூடம்,
514/1, ஆஸ்பத்திரி வீதி, (OPD முன்பாக)
யாழ்ப்பாணம் முகவரியில் சமுகம் தரவும், தொடர்பு: 021 222 9727

## திருமணக் CAR A/C வாடகைக்கு



* Metalic white மற்றும் Silver நிற கார்கள் பெற்றுக் கொள்ளலாம்.
* சாதாரண தினசரி வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம் (சாரதியுடன்)
* டொல்பின் வான் மற்றும் மினி பஸ்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**ரட்ணம்,** 22, சோமசுந்தரம் அவெனியு,
சுண்டிக் குளி, யாழ்ப்பாணம்.
777-903090/ 021-5100150

## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

வெற்றிடங்கள் :- கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)

தகைமைகள் :- க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
(a) இளைப்பாறிய பொலிஸ்/ படை உத்தியோகத்தர்கள், சாரணர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.
(b) தடகள, கிரிக்கெட், உதைபந்தாட்டம், கராட்டி, கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு:- மேற்கூறப்பட்ட தகைமையில் a+b உள்ளவர்களுக்குக் கல்வித் தகைமையில் விலகல் அளிக்கப்படும்.
நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
(i) உயரம் 5'4''
(ii) 22 வயதுக்கு மேற்பட்டோர்.

நேர்முகப் பரீட்சை 337 1/1, கஸ்தூரியார் வீதியிலுள்ள பணிமனையில் 18.08.2010 புதன்கிழமை அன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.
கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.
1. கிராமசேவகரின் நற்சான்றுப்பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
2. வதிவிடச் சான்றிதழ்.
3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
4. கல்வித் தராதரப்பத்திரங்கள்.
5. தேசிய அடையாள அட்டை.
6. குடும்ப அட்டை.
இவை அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோப் பிரதியும் கொண்டுவரவும்.
337 1/1, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். பணிப்பாளர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் ஆராதனையும்

மலர்வு: 12.12.1944
உதிர்வு: 15.07.2010



அமரர்
**குணரத்தினம் மார்க்கண்டு (சோமு)**

*'கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல்' பாக்கியவான்கள் என்றெழுது* வெளி 14: 13

கடந்த 15.07. 2010 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அன்னாரின் வாழ்விற்கான நன்றி செலுத்தும் ஆராதனையும் இன்று (14.08.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனை வழிபாட்டிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு வந்து ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தியோருக்கும் பத்திரிகையூடாக அனுதாபச் செய்தியினை வெளியிட்ட உடுவில் பிரதேச செயலகத்திற்கும் மேலும் பல வழிகளில் எமக்கு உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

நி.முகவரி:
வீமன்காமம்,தெல்லிப்பளை.
த.முகவரி:
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

மனைவி,பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## பஸ்ஸில் மோதுண்டு பெண் மரணம்

புத்தளம், ஓக.14

பஸ்ஸுக்காகக் காத்திருந்த பெண்ணொருவர் அதே பஸ்ஸில் மோதுண்டு மரணமான சம்பவம் புத்தளம் கரைத்தீவுக் கிராமத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்த பஸ்ஸை நிறுத்துவதற்காக இப்பண் சைகைகாட்டி யுள்ளார். எனினும்,சாரதியின்கட்டுப்பாட்டை மீறிய பஸ் அவரை மோதிக்கொண்டு குடைசாந்தது.

இதில் காயமடைந்த இருபதுக்கும் மேற்பட்ட பயணிகள் புத்தளம் தள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் கவலைக்கிடமான நிலையில் உள்ள ஒருவர் சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவத்தையடுத்து சாரதி தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்யும் நடவடிக்கையில் வண்ணாத்திவில்லு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.(சி)

## தேவை

*சாரதி மற்றும் வேலையாள்கள் தேவை.*
**சிவா பிறதர்ஸ்**
*205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் பணியாற்றக்கூடிய கம்பியூட்டர்அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள், கணக்குப் பதிவாளர் (ஆண்/ பெண்) தேவை. விண்ணப்பிக்குக.
**குளோபல் மல்ரி சேர்விசஸ்**
கண்டி வீதி,
கிளிநொச்சி.
(சி/569912)

## பணியாளர்கள் தேவை

நல்லூர்க் கந்தனின் உற்சவகாலத்தைமுன்னிட்டு அபிவிருத்தி லொத்தர் சபையின் அதிஷ்டலாபச்சீட்டுக்களை நடமாடி விற்பனை செய்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் தேவை.
ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்:
**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு,**
இல: 303,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

## புறொயிலர் விற்பனைக்கு

உடன் சுத்தம் செய்யப்படும் புறொயிலர் கிலோ 480/= மட்டும், திங்கள், புதன், சனி, ஞாயிறு பகல் ஒரு மணிவரை பெற்றுக்கொள்ளலாம். **குமரன் பாம்,**
*227, பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.*

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர்,
*19, முருகேசர் லேன், நல்லூர்.*

## வேலையாள்கள் தேவை

அப்பள வேலை செய்வதற்கும், பக்கிங் (Packing) செய்வதற்கும் ஆண்/பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: இ.ஸ்ரீமகேஸ்வரன் (அப்பள கம்பனி)
சீனிப்புளியடி (ஆரம்பப் பாடசாலை அருகில்),
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.தொ.பே. 0771393670

## விற்பனைப் பிரதிநிதி தேவை

தென்மராட்சியில் இயங்கிக் கொண்டிருக்கும் வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு, பொதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.சுயச்சிகரமாகக் கதைக்கக் கூடியவர்கள், சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேர்முகத்தேர்வு: 16.08.2010 திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு.
தொடர்பு: [illegible]
சங்கத்தானை, சாவகச்சேரி. தொ.பே.: 0779189464





சீட்டிழுப்பு இலக்கம் 672 திகதி 12-08-2010

வெற்றி எண்கள்

ஆங்கில எழுத்து
**10 12 24 46 D**

ஜக்பொட் பரிசு ரூ. 31,316,920/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 01 | 31,316,920/= | 31,316,920/= |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 2,000/= | 38,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 406 | 1,000/= | 406,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 655 | 1,000/= | 655,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16607 | 60/= | 996,420/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7899 | 40/= | 315,960/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 194681 | 20/= | 3,893,620/= |
| | | மொத்தம் | ரூ.38,021,920/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
| --- | --- |
| கண்டி | 700262327-0-20 |
| கொழும்பு | 700276073-3-23 |
| நுவரேலியா | 700265696-5-35 |
| மட்டக்களப்பு | 700272982-7-17 |
| மாத்தறை | 700261746-3-33 |
| புத்தளம் | 700260846-8-18 |
| வவுனியா | 700268759-1-41 |
| காலி | 700271986-7-27 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 38,421,920/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
**ரூ. 10,000,000/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஓகஸ்ட் 16 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

## பொது அறிவித்தல்

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்
**விசேட பொதுக் கூட்டம் - 2010**

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் (28.08.2010) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் திரு. நா. மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.

தகைமையுள்ள சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது தயவுசெய்து இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ம.கணேசலிங்கம் நா.மகேந்திரன்
செயலாளர். சங்கத் தலைவர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்:
03.01.1966

ஆண்டவன் அடியில்:
16.07.2010



அமரர் செல்லையா
**சதானந்தன் (சந்திரன்)**

அன்பின் திருவுருவே பாசத்தின் இருப்பிடமே
அப்பா நீங்கள் எங்கு சென்றீர்கள்?
நித்திரைக்குச் சென்ற உங்களை எழுப்ப இயலவில்லை
நிர்க்கதியாய் நிற்கின்றோம் நீண்ட பயணம் சென்றதேனோ?
ஆசை மனைவி, அன்புப் பிள்ளைகள்
உறவினரை விட்டு எங்கு சென்றீர்கள்
துணையின்றித் தவிக்கின்றோம் தூரதேசம் சென்றீர்களோ!
வந்து துயர் தீர்க்க மாட்டீர்களா!
தங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைஞ்சுகின்றோம் இறைவனை நாம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(101970)

'தேவி வாசம்',
இணுவில் தெற்கு, இணுவில்.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்டப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் இலங்கை கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே உடுவில் மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் முதல் நான்கு இடங்களைப்பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் அணிகளைப் படத்தில் காணலாம். (படங்கள்: நேசன்)

# 8 விக்கெட்டுக்களால் நவசக்தியை வென்று கிண்ணத்தை சுவீகரித்தது கைதடி சரஸ்வதி

கைதடி , ஓக.14

கைதடி தெற்கு சன சமூகநிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் 8விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

16 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியின் இறுதிச் சுற்றில் கைதடி 'சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் கைதடி நவசக்தி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 16 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 107 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அல்கின் 50 ஓட்டங்களைப் பெற்று வானவேடிக்கை காட்டி எல்லோரையும் அசத்தினார். அத்துடன் வாணன் 24 ஓட்டங்களையும் பெற்றார். இவை கூடுதலாகப் பெற்ற ஓட்டங்களாகும்.

நவசக்தி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த டெனிஸ், தயாபரன் ஆகியோர் தலா இவ்விரண்டு விக்கெட்டுக்களையும் உதயகீதன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு 108 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கைதடி நவசக்தி விளையாட்டுக்கழகம் 14.5 ஓவர்களில் விக்கெட்டுக்கள் யாவற்றையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஜெசிகாந் 20 ஒட்டங்களையும், கயோதரன் 15 ஓட்டங்களையும் ஆகக் கூடுதலான ஒட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர்.

சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சுகுணன் 04 விக்கெட்டுக்களையும், மிகுந்தன் 3 விக்கெட்டுக்களையும்,நிசாந்தன், கீதன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இதனடிப்படையில் 8 ஓட்டங்களால் வெற்றிபெற்ற கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அல்கினும், தொடர் ஆட்ட நாயகனாக நவசக்தி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தயாபரனும் , சிறந்த பந்து வீச்சாளராக சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மிகுந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(த-288)

# ஆண்களுக்கான பூப்பந்தாட்டம்; உடுவில் மான்ஸ் மூன்றாமிடம்

வலி.வடக்கு, ஓக.14

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மான்ஸ் வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில் மன்னார் சென் .சேவியர் ஆண்கள் கல்லூரியும் உடுவில் மான்ஸ் வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் மூன்று தனிநபர் போட்டியும் இரண்டு இரட்டையர் போட்டியும் நடைபெற்றன.

முதல் மூன்று தனி நபர் போட்டியில் முதல் சுற்றை மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி 21:18, 21:15 என்ற புள்ளிகள் அடிப்படையிலும்,

அடுத்த இரண்டு சுற்றுக்களையும் முறையே 21:16, 21:17, 21:15, 21:14 புள்ளிகள் என்ற அடிப்படையிலும் வென்றது.

நான்காவது இரட்டையர் சுற்றை மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி 21: 19, 21:16 புள்ளிகள் என வெற்றிபெற இறுதிச் சுற்றை உடுவில் மான்ஸ் வித்தியாலயம் 21:17, 21:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (த-86)

# மகாஜனாவை வென்றது யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம்,ஓக.14

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவினருக்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டித் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மகாஜனாக் கல்லூரியும், யாழ்.மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 32.1 ஓவர்களில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது.

திலக்சன் 11 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்கள் கிடைத்தன. யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த நிரூபன் 7 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், நிரேஷன் 7 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும், செளமிதரன் 9 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும், ஜெயேந்திரன் 5 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள்.

58 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி 12.1 ஓவர்களில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் சஞ்சயன் ஆட்டம் இழக்காமல் 33 ஓட்டங்களையும்,யூலியஸ் கனிஸ்ரன் ஆட்டம் இழக்காமல் 13 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கஜனாதன், 3.1 ஓவர் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

(த-23)




# கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு,

இன்று

* பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி எதிர் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழக அணி.

நாளை

* யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் சென் ற லைட்ஸ் விளையாட்டுக்கழக அணி.(த-23)

* * *

யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகமும் யாழ்.துடுப்பாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் படையினர் - பொது மக்கள் நல்லுறவு வெற்றிக் கிண்ணத்துக் கான 'ருவென்ரி - 20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரை யிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை சென். பற் றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* காலை 9 மணி

கடற்படை அணி எதிர் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி.

* மதியம் ஒரு மணி

இராணுவ அணி எதிர் விமானப்படை அணி. (த-23)

# யாழ். பாடசாலைகளின் தடகளப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு ,ஓக.14

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 21 வயதுப் பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**100 மீற்றர் ஓட்டம்**

தே.சபினா ( வவுனியா சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம்), ச.ரேகலா - (மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி), இ. கௌதமி- ( மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), பு.டொபிற்கா - சாவகச்சேரி றிபேக் கல்லூரி).

**200 மீற்றர் ஓட்டம்**

கே. சபினா-( வவுனியா சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயம்), ச.ரேகலா - (மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி), இ. கௌதமி- ( மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி),எஸ் பிலோஜினி -(வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயம்).

**400 மீற்றர் ஓட்டம்**

தெ. ரேவதி ( அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), கே. சங்கீதா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ். பிலோஜினி-(வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயம்), எம். கீர்த்திகாதேவி (வவுனியா வாணி வித்தியாலயம்).

**800 மீற்றர் ஓட்டம்**

எஸ். எழில்அரசி- ( வவுனியா கோவில் குளம் இந்துக் கல்லூரி), இ. துஷ்யந்தி- (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), ச. சஜிதா- ( பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆ. சுதர்சினி -(மன்னார் பரிகாரிகண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை).

**1500 மீற்றர் ஓட்டம்**

எஸ். எழில்அரசி ( வவுனியா கோவில் குளம் இந்துக் கல்லூரி), இ. துஷ்யந்தி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), ச. சஜிதா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆ. சுதர்சினி (மன்னார் பரிகாரிகண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை).

**5000 மீற்றர் ஓட்டம்**

எஸ். எழில்அரசி ( வவுனியா கோவில் குளம் இந்துக் கல்லூரி),தெ. ரேவதி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), கே.சுதர்சினி ( மன்னார் பரிகாரிகண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), செ.ஜெயதர்சினி ( சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**100 மீற்றர் தடை தாண்டல்**

நா. ஜெஸனி ( அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), பு.இடிதீகா (சாவகச்சேரி றிபேக் கல்லூரி),ஜ.புஸ்பாதேவி (வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்), என்.சிவகௌரி (முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம்). (த-8-86)

# போட்டி நடைபெறாது

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகமும் யாழ். துடுப்பாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் படையினர் பொது மக்கள் நல்லுறவுக் கிண்ணத்திற்கான 'ருவெண்ரி -20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம் பெறவிருந்த போட்டி பிற் போடப்பட்டுள்ளது எனவும் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப் படும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் பிடிக்குள் இலங்கை; விடுவித்துக்கொள்ள வழி என்ன?

## புதுடில்லிப் பேச்சுக்களில் இடம்பெறப்போகும் முக்கிய விடயம்

*'டெய்லிமிரர்' பத்திரிகையில் கடந்த 11 ஆம் திகதி உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியிருந்த கட்டுரையின் தொகுப்பு*

புதுடில்லியிலுள்ள உயர்மட்ட அதிகாரிகள் இலங்கை - இந்திய பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷவின் சகோதரர்களுடன் பேசுவதற்கு விரும்புகிறார்கள்.

இலங்கை- இந்திய பிரச்சினைகள் தொடர்பான விடயங்களில், பசில்ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய மூவரால் தான் ஜனாதிபதி ராஜபக்ஷவை இணக்கப்பாட்டுக்கு வரவைக்க முடியும் என்று இந்திய அதிகாரிகள் கருதுகின்றனர்.

இந்தப் பணியை முன்னாள் வெளியுறவு அமைச்சர் ரோகித போகொல்லாகமவாலோ, இப்போதைய வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸினாலோ திருப்திகரமாக நிறைவேற்ற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். இதற்குக் காரணம் இவ்விருவரும் மஹிந்தவின் உள்வட்டாரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவில்லை. மஹிந்தவின் உள்ளக வட்டாரத்தைச் சேர்ந்தவர்களாக அவரின் சகோதரர்கள் இருப்பதால் டில்லி அதிகாரிகள் அவர்களுடனேயே பேச்சுக்களை நடத்த விரும்புகிறார்கள்.

இலங்கையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இந்த மூவருடனேயே இந்திய அதிகாரிகள் பேச்சு நடத்துவதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

**சீன பணிகளில் சீன பிரஜைகள்**

இம்மூவரும் கடந்த முறை டில்லி சென்றிருந்த போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீன கட்டுமானப் பணிகளில் சீனப் பிரஜைகள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்ற விஷயத்தை இந்திய அதிகாரிகள் விவாதிக்க முனைந்தார்கள் என்று தெரிகின்றது. குறிப்பாக வடகிழக்குப் பகுதிகளில் சீனா மேற்கொண்டு வரும் திட்டங்களில் சீனப்பிரஜைகள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்ற விடயத்தை இந்திய அதிகாரிகள் அழுத்தமாக எடுத்துக் கொண்டு விவாதிக்க விரும்பியதாகத் தெரிகின்றது.

இந்த ஞாயிற்றுக்கிழமை (இன்று) பசில், கோத்தபாய மற்றும் லலித் வீரதுங்க ஆகியவர்கள் புதுடில்லிக்கு பயணமாவார்கள் என்றும், இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகளை இந்திய அதிகாரிகளுடன் விவாதிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழருக்கான அரசியல் தீர்வு தொடர்பான விடயம் இந்தப் பேச்சுக்களின்போது முக்கிய இடம்பெறும் என்று அனேகர் எதிர்பார்க்கின்றனர். இருந்தாலும் அரசியல் விடயத்துக்கு மேலாக சீனத் திட்டங்கள், சீனப் பிரஜைகள் பணி புரிவது போன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெறுமானால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

உலகம் முழுவதிலும் சீன அரசு மேற்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் பணிபுரிவதற்குச் சீனப் பிரஜைகள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்றும் அவர்களில் சீன அரசியல் ஒற்றர்களும் கலந்திருக்கிறார்கள் என்றும் கருதப்படுவதே இதற்குக் காரணமாகும்.

சீன ஒற்றர்களின் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து இந்தியா முழுமையாக அறிந்திருப்பதால் இயற்கையாகவே அவர்கள் கவலையும் அச்சமும் கொண்டிருக்கிறார்கள் எனலாம்.

**சீனர்களின் தலையீடும் விளைவுகளும்**

பல நாடுகளில் சீனர்களின் தலையீட்டினால் ஏற்பட்டுள்ள விளைவுகளில் பின்வரும் தகவல்கள் குறிப்பிடத்தக்கவை.

* அமெரிக்கப் பொறியியலாளர் நோஷி எஸ் கவாடியா என்பவர் அமெரிக்க பி2 குண்டுவீச்சு விமானம் தொடர்பான இரகசியங்களைச் சீனருக்கு வழங்கி அவர்கள் வெகுதூரம் பாய்ந்து செல்லும் ஏவுகணைகள் தயாரிப்பதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக அமெரிக்க ஜூரிசபையொன்று கடந்த வாரம் விசாரணைகளை ஆரம்பித்தது.

* 2005 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட கவாடியா விசாரணைகளின் போது 84 ஆயிரம் டொலர்களைப் பெற்றுக் கொண்டதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

* கனேடிய கொன்சர்வேடிவ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடந்த வாரம் விடுத்த தகவல் ஒன்றில் தமது சகாக்கள் சிலர் சீன ஒற்றர்கள் விரித்த வலையில் வீழ்ந்துவிட்டார்கள் என்று தெரிவித்திருந்தார். பெறுமதியான பரிசுகள், வியாபாரச் சலுகைகள் போன்றவற்றைக் காட்டி அவர்கள் வீழ்த்தப்பட்டார்களாம். அவர்களில் இருவர் பின்னர் அச்சுறுத்தி காரியம் சாதிக்கப்பட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த எம்.பிக்களில் ஒருவர் ஷாங்காயில் பெரிய தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டார் என்றும் இன்னொருவர் பாலியல் சலுகைகள் வழங்கப்பட்டார் என்றும் கனேடிய புலனாய்வாளர்களுக்கு அந்த உறுப்பினர் தெரிவித்துள்ளார். கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீனாவுக்குச் சென்றபொழுது அவர்களை விட வயதில் மிகக்குறைந்த பெண்கள் பாலியல் சலுகைகள் வழங்க முன்வந்தார்கள் என்று தமக்கு தெரிவிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார். மேலும் கனேடிய நிர்வாகத்துக்குள் சீனர்கள் ஊடுருவல் செய்திருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் வந்துள்ளன. இவை பற்றி அதிகாரிகள் மௌனமாக இருந்துவந்தாலும் புலனாய்வுகள் நடைபெற்று வருகின்றன.

* பாதுகாப்பு தளபாடங்களைச் சட்ட விரோதமாகச் சீனாவுக்கு ஏற்றுமதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இரு சீனர்கள்- ஸென் சௌவு மற்றும் யுபெங்வேய்- இவர்களுடன் சீன இலத்திரனியல் நிறுவனம் ஒன்றும் அமெரிக்க நீதித்துறையினால் குற்றம் காணப்பட்டுள்ளனர். ஷாங்காயிலுள்ள விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றுக்கும் வேறு பல நிறுவனங்களுக்கும் அவர்கள் சாதனங்களை ஏற்றுமதி செய்துள்ளார்களாம்.

* சிம்பாப்வே மற்றும் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு ஆபிரிக்காவிலுள்ள சீன வர்த்தக நிறுவனங்கள் ஆதரவு வழங்குவதில் இணைந்து செயற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தார் எஸ் சலாம் பல்கலைக்கழகத்தின் பொருளியல் ஆராய்ச்சி கழகத்தின் பேராசிரியர் ஹம்ரிமோஷி என்பவர் கடந்த 2008 ஆம் ஆண்டு சீன- ஆபிரிக்க வர்த்தகக் கழகத்தில் சொற்பொழிவாற்றியபோது இப்படியான ஆட்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதை நிறுத்திக் கொள்ளும்படி சீனாவைக் கேட்டுக்கொண்டார்.

* பொட்ஸ்வானா அரசாங்கம் சீன வர்த்தகர்களைத் தமது நாட்டில் ஜவுளி வியாபாரத்தில் ஈடுபடவேண்டாம் எனத் தடைவிதித்தது. ஏராளமான சீன வர்த்தகர்கள் சர்வதேச வர்த்தக மோஸ்தர்களில் போலியானவற்றை அறிமுகம் செய்தமையே இதற்குக் காரணம். உள்ளூர்த் தொழில்களை நசுக்கும் விதத்தில் சீனப் பொருள்களைக் கொண்டு வந்து குவித்ததாகவும் சீன வர்த்தகர்கள் மீது பொட்ஸ்வானா குற்றஞ்சாட்டியது.

* கடந்த டிசெம்பர் மாதம் ஆறு சீன வர்த்தகர்களுக்கு நைஜீரிய நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது. இந்தியாவில் தயாரிக்கப்பட்டது என்ற போலி அடையாளத்துடன் மலேரியாத் தடுப்பு மருந்துகளை இவர்கள் விற்பனைக்கு விடுத்திருந்தார்களாம்.

* தான்ஸானிய இறைமைக்குட்பட்ட கடல் பகுதியில் மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் ஒரு பெரிய சீன மீன்பிடிப் படகை தான்சானிய கடற்படையினர் கைப்பற்றினார்கள்.

* சீன சிவில் என்ஜினியரிங் கட்டுமான கூட்டுத்தாபனத்துக்கு தனது ரயில்வேயை தரம் உயர்த்துவதற்கென வழங்கியிருந்த 8.3 பில்லியன் அமெரிக்க டொலர் ஒப்பந்தத்தை நைஜீரியா ரத்துச் செய்தது. பணிகள் தரம் குறைந்ததாகவும் முற்றுப்பெறாமல் கைவிடப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

* அறிக்கைகளின் படி டாபரில் வன்முறைகள் அதிகரித்திருந்தபோது சூடானுக்கு 90 வீதம் சிறு ஆயுதங்களை சீனா வழங்கியிருந்தது. சூடானின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் ஏற்றுமதியை சீனா வாங்குகிறது. அதேபோல் சீனாவிலிருந்து எல்லா ஆயுதங்களையும் சூடான் வாங்கிக்கொள்கின்றது.

* சிம்பாப்வேயில் பணியாற்றும் சுரங்கக் கம்பனிகள் அடிமைத்தனத்தை உருவாக்குவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. சீனக் கம்பனி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 50 சாம்பியர்கள் மரணமானார்கள். இன்னொரு சம்பவத்தில் சம்பளம் கோரிப் போராட்டம் நடத்தியவர்கள்மீது சீன நிறுவன மேலாளர் சுட்டதில் 5 சாம்பியர்கள் கொல்லப்பட்டார்கள்.

**பணிபுரிவதற்கு தண்டிக்கப்பட்ட சிறைக்கைதிகள்**

* இப்பொழுது சுரங்கம், ரயில்பாதை அமைத்தல் மற்றும் தொலைத்தொடர்புப் பணிகளில் சீன நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்துள்ள இடங்களில் வேலை செய்வதற்கு குற்றச்செயல்களில் தண்டிக்கப்பட்ட சிறைக்கைதிகளைக் கொண்டு வருகிறார்கள். இந்த நடைமுறையானது ஆபிரிக்காவின் பல பகுதிகளில் உள்ளக சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

**சீனப் பிடியிலிருந்து விடுவிக்க முடியாது**

இலங்கை அரசாங்கம் இந்த அறிக்கைகள் பற்றி அறிந்திருக்கிறதோ இல்லையோ உண்மை நிலைமை என்னவென்றால் சீனாவின் பிடியில் இருந்து அதனால் தன்னைவிடுவித்துக் கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் புதுடில்லியில் இடம்பெறப்போகும் பேச்சுக்களின் போது சீனப் பிரச்சினை எழுப்பப்படுமானால் சீனாவை மனம் கோணச்செய்யும் வகையில் எதனையும் இவர்களால் செய்யவோ சொல்லவோ முடியாது.

அவ்வாறாயின் இந்தியாவுக்குள்ள தெரிவு என்னவாக இருக்கும்?

எண்பதுகளில் ஜே.ஆர் ஜயவர்த்தனாவின் ஆட்சியின் போது திருகோணமலை மீது அமெரிக்கா கண்வைத்துக் கொண்டிருந்த வேளை அதனைத் திசை திருப்புவதற்காக இந்தியா ஆயுதம் தரித்த போராளிகளைக் கொண்டு ஈழப்போரை தூண்டிவிட்டது. இறுதியில் இந்தியாவும் அதன் எதிர்விளைவுகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது.

ஏற்கனவே விரல்களைச் சுட்டுக் கொண்ட நிலையில் மீண்டும் அவ்வாறான ஒரு போரை இந்தியா தூண்டிவிடும் என்று நினைத்துப்பார்க்க முடியாது. ஆனால் வடக்கு- கிழக்கில் சீன வேலைத்திட்டங்களுக்கு எதிராக அரசியல் போராட்டங்களை நடத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அது பயன்படுத்தலாம் என்பதை ஒதுக்கிவிடமுடியாது. அந்த வகையிலான இந்தியாவின் திறமையைக் குறைத்து மதிப்பிடலாகாது.

**தமிழில் : ரம்யன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதுவும் நடக்கலாம்!

ஒரு காட்டிலே உள்ள மரத்தின் கிளையில் இரண்டு புறாக்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தன. அந்த அமைதியை கெடுக்க வேடன் அந்த வழியாக வந்தான். அவன் மரத்தில் இருந்த புறாக்களைப் பார்த்து அம்பைத் தொடுத்து குறி வைத்தான். காற்றிலே இலைகள் அசைவதனால் அவனால் குறி வைக்க முடியவில்லை. புறா தற்செயலாக கீழே குனிந்து பார்த்ததும் வேடன் குறி வைப்பது தெரிந்த உடன் பக்கத்தில் உள்ள புறாவிடம் சொன்னது. அதற்குமற்ற புறா என்ன சொன்னது தெரியுமா?

அதோ பார் வானத்திலே கழுகு ஒன்று நம்மை குறி வைக்கிறது. மேலே போனால் கழுகிடம் மாட்டி விடுவோம். இரண்டு பக்கமும் ஆபத்து. இப்படியே இரு, எதுவும் நடக்கலாம். இதற்கு அப்புறம் நாம் தப்பிக்க வாய்ப்பிருக்கா எனப் பார்ப்போம். குறி பார்த்த வேடனுக்கு ஒரே அம்பில் இரண்டையும் விழுத்த ஆசை. அதனாலே கொஞ்சம் கவனமாக குறிபார்த்து கொண்டே பின்னால் நகர்ந்தான். அப்போது பாம்புப் புற்றின் மீது காலை வைக்க அதிலிருந்து பாம்பு அவனை கடித்துவிட கையிலிருந்த அம்பு நேராக பாய்ந்து உயர பறந்து கொண்டிருந்த கழுகை பதம் பார்த்தது.

கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? வேடனும் கழுகும் தரையில் விழுந்து கிடக்கிறார்கள். அந்தப் புறாக்கள் அப்படியே உட்கார்ந்திருக்கின்றன. சாகப் போகிறோம் என்று நினைத்த அந்த புறாக்கள் சந்தோஷமாக இருக்கின்றன. அவற்றைச் சாப்பிடப் போகிறோம் என நினைத்த வேடனும் கழுகும் செத்து கிடக்கிறார்கள்.

இக்கதையில் ஒரு நுட்பமான படிப்பினை இருக்கிறது. அதாவது- வாழ்க்கையில் நாம் கடைசி வரையில் நம்பிக்கையோடு செயற்பட வேண்டும். எதற்காகவும் நம்பிக்கையை இழந்து விடக் கூடாது. எதுவும் நடக்கலாம் என்கிற எண்ணம் வேண்டும். இந்த துணிச்சல் இல்லாதவர்கள் தாம் ஒரு சில வினாடிகளில் தற்கொலைக்குத் துணிந்துவிடுகிறார்கள்.

கோ. சுவாமிநாதன்

# சிக்கனம் வேறு கஞ்சத்தனம் வேறு

இரட்டையர்களில் இரண்டு வகை உண்டு. ஒட்டிப்பிறந்த இரட்டையர். ஒரே மாதிரி இரட்டையர் என்று இருவகை. அதே போல வேறு குணம் என்கிற இரட்டையர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தட்டுமா? சிக்கனம், கஞ்சத்தனம் என்பதே அவர்கள் பெயர்கள். ஒரே மாதிரியான உலகத்தின் கண்களுக்கு இவை அல்லது இவர்கள் தெரிவதே பெரிய குழப்பத்தின் காரணம். இருவரும் நேர் எதிரானவர்கள். பயங்கர எதிரிகள். புரிய வைக்கிறேன்.

அமெரிக்காவின் பிரபலமான கோடீஸ்வரர் ஒருவரை ஒரு குழு சந்திக்க போனது. கல்விக்கூடம் கட்ட நன்கொடை கேட்டு பேசிக்கொண்டிருக்கும் பொழுது பாதியில் எழுந்து போய் '' விளக்குகள் அநாவசியமாக எரிகின்றன. நிறுத்திவிட்டு வருகிறேன். என்று அணைத்துவிட்டு வந்தார். வந்த குழுவினர் மகா கஞ்சர் விளக்குகளை அணைத்துவிட்டு வருகிறார். என்ன கொடுக்க போகிறார்'' என்று தளர்ந்து போனார்கள். முடிவில் மூன்று லட்சம் மதிப்புள்ள அமெரிக்க டொலர் செக்கை கொடுத்தார். ஒருவர் வாய்விட்டு தனது சந்தேகத்தைக் கேட்டார். விளக்கு எரிவதையே நிறுத்தி வைக்கிறீர்கள். தாங்கள் எப்படி இவ்வளவு நன்கொடை தர முன் வந்தீர்கள் என்றார். கோடீஸ்வரரோ '' வெரி சிம்பிள் இப்படி சேமித்து மிச்சம் வைத்தால் தான் என்னால் நல்ல காரியங்களுக்குக் கொடுக்க முடிகிறது என்றார்.

இது கஞ்சமா? சிக்கனமா? என யோசியுங்கள் அவசியமானால் எத்தனை லட்சம் வேண்டுமானாலும் செலவு செய்யலாம். ஆனால் அவசியம் இல்லாமல் பத்து பைசா கூட வீணாக விரயமாகச் செலவாகக் கூடாது. இது இளைய தலைமுறை எத்தனை பேருக்குப் புரிகிறது.

மகாத்மா காந்தி ஒரு சின்ன பென்சில் துண்டு தொலைந்து போனால் கூட அமர்க்களம் செய்து வைரப் புதையலை தேடுவது போல ஆசிரமத் தொண்டர்கள் தேடிப் பிடித்து பாபுஜியிடம் பென்சிலை ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் அவர் தூங்கமாட்டார். தேசத்திற்காக தன் ரத்தத்தையே செலவழித்த வள்ளல் பாபுஜி என்ன கஞ்சரா? சிக்கனத்தை நுட்பமாக உணர்ந்த மாபெரும் வள்ளல் எப்படி கஞ்சனாக இருக்க முடியும். பிறருக்கு பயன்பட வேண்டும்- முழுமையாக என்பதே அவர் கொள்கை.

விலையுயர்ந்த பொருள்களை வாங்குவதே அவசியம், ஜம்பமாக செலவழிப்பதே கௌரவம் என்கிற மாயையில் இருந்து கண்டிப்பாக இளம் தலைமுறை வெளிவர வேண்டும். சம்பாதித்தால் மட்டுமே வெறும் பணக்காரன் ஆகிவிட முடியாது. சேமித்து வைப்பதே முக்கியம். நிறைய சம்பாதித்து ஏழையாக செத்தவரும் உண்டு. எனவே சிலரது சிக்கனத்தைக் கஞ்சத்தனம் என்று தயவு செய்து அசிங்கப்படுத்த வேண்டாம்.

சு.கி.சிவம்

# பொன் மொழிகள்

★ சிலவகை பழக்கவழக்கங்கள் மறுபரிசீலனைக்குரியவை. மாற்றப்பட வேண்டியவை. ஆனால் உடனடியாக மாற்ற முடியாமல் போய்விடும். காரணம் பழக்கங்கள் பலமானவை.

-சுந்தரமூர்த்தி சுவாமி-

★ மாற்றங்களை மறுதலிக்கிறவர்கள் தோற்றுப் போகிறார்கள். மாற்றங்களை எதிர்பார்த்து முன் கூட்டியே தயாராக இருப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

-இங்கர்சால்-

★ அங்கொன்றும் இங்கொன்றும் பேசுவது மிகமிகத் தவறுதான். ஆனால் அது எப்போதுமே தவறாகிவிட முடியாது. '' பொய்மையும் வாய்மை உடைத்து''

-ஓர் அறிஞர்-

★எந்த விஷயத்திலும் அக்கறை நம்மை உயர்த்தும். கவலை கண்டிப்பாகத் தாழ்த்தும்.

-மார்க் வின்-

தொகுப்பு: பு.தட்சிகா

# ஒலியும் எலியும்

மனிதனுடைய வாழ்க்கையில் ஒலி என்பது மிகமிக முக்கியமான ஒன்று. ஏதாவது கொண்டாட்டங்கள் என்றால் பல வகைப்பட்ட சத்தத்தை உணருகின்றோம்.

மேளச்சத்தம் வருகின்ற கூட்டங்களின் சத்தம், ஒலி பெருக்கியின் சத்தம், டெலிபோன்களின் சத்தம். இப்படி பலவகைப்பட்ட சத்தங்களைக் கேட்கலாம்.

ஓர் அழகான முறையில் அந்த ஒலியைக் கொண்டு வந்தோம் என்று சொன்னால் அது இசையாகிவிடும்.

ஜப்பானில் எலியை எல்லாம் எப்படிக் கொல்கிறார்கள் தெரியுமா? நாம் எலியைக் கொல்வதற்கு எலிப்பாஷாணம், எலிப்பொறி என்று வைக்கிறோம். ஆனால் அவர்கள் அப்படியெல்லாம் எலியைக் கொல்வதில்லை. எலிகள் இருக்கும் வளையைக் கண்டு பிடித்து ஒரு குறிப்பிட்ட ஒலியை அங்கே உண்டு பண்ணுகிறார்கள். சத்தத்தைக் கேட்டவுடன் அங்கும் இங்குமாக ஓடி பைத்தியம் பிடித்தது போல் மாறும் போது அது அப்படியே கீழே விழுந்து தற்கொலை செய்து கொள்ளும்.

இப்படியாகத்தான் மனிதனும் மாறிக் கொண்டிருக்கிறான். வாகனச் சத்தம், பாட்டுச் சத்தம், பிள்ளைகளின் சத்தம் இவ்வாறான சத்தங்களால் நமது காதுகளுக்கு கெடுதல். நமது உணர்வுக்குக் கெடுதல். சித்திக்கின்ற ஆற்றலுக்கு கெடுதல். இதைப் பற்றியெல்லாம் யாரும் யோசிக்கமாட்டேன் என்கிறார்கள்.

துணி துவைக்கும் ஒருவர் வாசலில் ஒரு கழுதையை கட்டி வைத்திருந்தார். அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் மாமரம் இருக்கிறது. அதில் குயில் ஒன்று மென்மையான குரலில் கூவியது. அவர் துணி துவைப்பதை விட்டுவிட்டு மாமரத்துக் குயில் கெடுதல் பண்ணுவதையும் மறந்து ரசித்துக் கொண்டு இருந்தார்.

சிறிது நேரத்தில் குயில் பறந்து போனது. உடனே அவரும் வீட்டிற்குள் சென்று விட்டார். கழுதை நினைத்தது. எஜமானுக்கு சத்தம் பிடிக்கும் என்று. அது சத்தம் போட்டது. உடனே அவர் கம்பை எடுத்துக் கொண்டு வந்து சத்தம் போடுவாயா என்று கழுதைக்கு அடித்தார்.

கழுதை வருத்தப்பட்டது. குயில் கத்தினால் ரசிக்கின்றார். நான் கத்தினால் மட்டும் அடிக்கிறாரே என்று.

குயிலின் குரல் இனிமையானது என்பதால் ரசிக்கிறார்கள். கழுதையின் குரல் தாறுமாறாக இருப்பதால் யாராலும் தாங்க முடியவில்லை. ஒழுங்குபடுத்தப்பட்ட ஒலி அது மனிதனை மேன்மைப்படுத்தும். எனவே ஒலியைக் குறைப்பதற்கு முயற்சி செய்தால் வாழ்க்கை நமக்கும் மற்றவர்களுக்கும் இனிமையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழைக்காட்டுக் கதைகள்

- கோகுலராகவன் -

சிறுவயதில் பள்ளிக்கூடத்தால் வரும்பொழுது ஒரு நுங்கைக் கண்டுவிட்டால் போதும் எடுத்து பனுவிலை உடைத்துவிட்டு வாயாலே காந்து காந்து குடித்து விடுவோம். அணிலுக்கு ஒரு கண் எங்களுக்கு இரண்டு கண். அணில் அறுத்து குடித்தபடியால்தான் அது வாடிக் கீழே விழும். அணிலுக்கு நன்றி.

மணற்காட்டில் பனையில் ஏறி குலையாக நுங்கை வெட்டி குடித்துத் தள்ளுவோம். சீக்காய் சப்புவதில் குமாரமூர்த்திக்கு அலாதிப் பிரியம். சும்மா விடுவோமா வைத்த பட்டம் '' சீக்காய்'' குமார்.சீக்காய் என்பது நுங்கின் குடிக்கும் பருவம் தாண்டும்போது பனம் விதையாக மாறும்.

ஒரு நாள் கனகப்பா வாயை வெள்ளைத்துணியால் பொத்தியபடி ஓடி வர பின்னால் அம்மம்மா குளறியபடி வந்து கொண்டிருந்தார்.

"ஐயோ நானென்ன செய்ய. இந்த மனுசன்ர வாயெல்லாம் பிஞ்சு போச்சு"

வாய் ஏன் பிளந்து போனது கனக்க கதைத்தாரோ?

' என்னெணை என்னெணை''

சும்மா சத்தம் போட்டு கேட்டார்.

'' மாட்டுக்கு ஓலை அறுக்கேக்கை....''

'' அறுக்கேக்கை''

' சுவர் மட்டை வாயில விழந்து போச்சு''

'' என்ரை ஐயோ''




கனகப்பா வாயிலிருந்து துணியை எடுத்துக் காட்டினார். கீழ்ச் சொண்டு பிய்ந்து தொங்கிக் கொண்டு இருந்தது.

பிறகு யாழ்ப்பாணம் கொண்டு வந்து ஒரு மாதம் வாட்டில் இருந்துதான் உதடு பொருத்தப்பண்ணினார்கள்.

வண்டில் மாட்டுக்குப் பனை ஓலை என்றால் அலாதியாக விரும்பி உண்ணும். நீண்ட மூங்கில் தடிகளை கொண்டு கொக்கைச் சத்தகம் கட்டி பனை ஓலை அறுப்போம்.

பின்னர் இரவு 7 மணிக்கு இதழ் இதழாகக் கிழிக்கத் தொடங்கினால் அண்ணன்கள் ஒரு பக்கம்.அம்மா ஒரு பக்கம்.அம்மப்பா ஒரு பக்கம். பப்பா ஒரு பக்கம். ஓலை சறார் சறார் என்று கிழிபடும் சத்தம் நாதமாகக் கேட்டுக் கொண்டிருக்கும்.

பின்னர் கத்தியில் வைத்து சின்னன் சின்னனாகக் குத்தி மாட்டுக்கு தொட்டியில் போட்டால் கரும்பு சாப்பிடுவது போல ஆனந்தமாகச் சப்பி அசை போடும்.

பனைகளுடன் எங்களுக்கு உரிய ஊடாட்டம் மிக அதிகம்.

இந்த நீண்ட கால யுத்தத்தில் மிகப் பாதிக்கப்பட்ட பெரிய குடும்பம் பனைக் குடும்பம்தான்.

எத்தனை ஆயிரம் பனைகள் தறிக்கப்பட்டு விட்டன. ஒரு ஐம்பதாயிரத்திற்கும் மேல் வரலாம் அல்லது அதற்கு மேல் வரலாம்.

பனைகளைப் பாதுகாக்க எவரும் நடவடிக்கை எடுக்கவே இல்லை. பச்சிலைப்பள்ளிப் பகுதியில் அழிந்து போன பனைகள், வடலிகள் ஒரு லட்சத்தைத் தாண்டும்.

(முற்றும்)

# நமது பெரு...



இலங்கைத் தீவின் மேலைத்தேய காலனிய கால. கட்டட மரபுரிமைகளின் முக்கியமான கிளைகளுள் ஒன்று கோட்டைகளாகும். தீவின் வெவ்வேறு பிராந்தியங்களில் போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் அமைக்கப்பட்ட கோட்டைகள் இன்றும் காணப்பட்டும், பேணப்பட்டும் வருகின்றன. இவற்றுள் மிகச் சிறப்பான கோட்டையமைவுகளுள் ஒன்றாக யாழ்ப்பாணக் கோட்டை கருதப்படுகிறது. குறிப்பாக கொழும்பு, காலி கோட்டைகளை விடப் பலமானதும், இலங்கைத் தீவின் இரண்டாவது பெரிய கோட்டையுமான யாழ்ப்பாணக் கோட்டையானது, ஆசியாவிலுள்ள வலிமை மிக் கோட்டையமைவுகளுள் ஒன்றாக ஆய்வாளர்களால் எடுத்துக் காட்டப்படுகின்றது. காலனியகால அரசுகளால் தமது இராணுவ, நிர்வாகத் தேவைகளுக்கான களமாகப் பெரித பயன்படுத்தப்பட்ட மேற்படி கோட்டை, இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது மோசமாகப் பாதிக்கப்பட்டது. இலங்கை இராணுவம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதற் காலத்திலும், அதனுடன் தொடர்ச்சியாகவும் அவர்களால் கோட்டையின் பகுதி இடிக்கப்பட்டமை மிகவும் துரதிஷ்டவசமானது.

யாழ்ப்பாணக் கோட்டை அதன் மூலத்தில் போர்த்துக்கேயருக்குரியது. 1619 ஆம் ஆண் தம்மால் கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாண தீபகற்பத்தில் யாழ்ப்பாண நீரேரியின் களிமுகத்தி அது கட்டப்பட்டது. 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒல்லாந்தர் வசமாகியபோது த கோட்டைக்குள் இருந்த வெற்றி மாதா திருச்சொரூபம் உட்பட்ட முக்கியமான பொருள்களுடன் கோவாவுக்குப் போர்த்துக்கேயர் தப்பிச் சென்றனர்.

# யாழ்...

யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தரால் 1665 இற்கும் 1680 இற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் ஒல்லாந்த கட்டட மரவிற்கமைய மீளமைக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் பூர்த்தியான 1680 காலமே, அதன் முகப்பு வாயிலில் இன்றும் தென்படுகிறது. இது பற்றி நெல்சன் கூறுகையில், 'ஒல்லாந்தின் இலட்சியப் படுத் தப்பட்ட சமகால புதிய கட்டட வடிவமைப்பிற்கேற்ப தொழில் நுட்ப ரீதி யாக முதன்மையுடையதும் முழுமையுடையதுமாகக் கட்டப்பட்ட தென்கிறார். அத்து டன் இக்காலகட்டத் தின் இப்பிராந்தியத்துனுள் கட்டப்பட்ட வற்றுள் யாழ்ப்பாணக் கோட்டையே எல்லாவற்றையும் விஞ்சி நிற்கிற தெனவும் அவர் கூறுகிறார்.

ஒல்லாந்தக் கட்டடங்கள் குறிப்பிட்ட வகையான கேத்திரகணித உருவ அடிப்படையிலானவை என்ற வகையில் மேற்படி கோட்டையும் ஐங்கோண முதி கட்டடமாக இருக்கிறது. இந்த அமைவு அதனோடு கூடிய அகழி முதலியவற்றுடனும் சேர்ந்து இராணுவ் ரீதியாக முக்கியமான அமைவாகிறது. பீரங்கித்தளங்கள் பாரிய சுவர்களோடு கூடிய இக்கட்டுமானத்தின் ஒல்லாந்த நிலைப்பட்ட கட்டுமானச் செயற்பாடு களின் இரண்டாம் கட்டம் 1790 களின் சுற்றுவட்டாரத்தில் நிகழ்ந்தது. இந்தக் கோட்டைக் கட்டுமானத்துள் மிக முக்கியமான இன்னோ ரமைவு உள்ளே பண்டைய போர்த்துக்கேய தேவாலயத்திற்காக மாற்றீடு செய்யப்பட்ட




# நாட்டியத்தில் நயம்பட வைக்கும் நவசந்...

(சென்றவாரத் தொடர்ச்சி)

நிருத்தி சந்தி:

நிருத்தி சந்தி என்பது தென்மேற்குத் திசையாகும். இத்திசைக்குரிய கடவுள் நிருத்தி ஆவார். இவர் அசுரர்களின் கடவுளாகப் போற்றப்படுகின்றார். குந்தாயுதமும் சிங்க வாகனமும்,துர்க்கா தேவி சகிதமுமாயிருக்கும் தென்மேற்குத் தேவனை நட்டபாடை பண்ணுடன் உருவாகிய குந்தள இராகத்திலமைந்த மல்லி தாளமும் (திஸ்ர ரகம்) உடைய கௌத்துவப் பாடலை பிரதி மட்டய வாத்தியம் இசைத்து புஜங்க ராகிதமாக நிருத்தமாடுவர், நாட்டியத்தில் நிருத்திப் பகவானைப் பிரயோகிக் வலது கையில் சகட முத்திரையும், இடது கையில் கட்வா முத்திரையினையும் பயன்படுத்துவர்.

6.வருண சந்தி- ஆலயத்தினுடைய மேற்குத் திசையினை வருண சந்தி என்பர். இத்திசைக்குரிய கடவுள் வருண பகவானா வார். ஐம்பூதங்களில் ஒன்றாகிய நீரின் கடவுள் முதலை வாகனத்துடன், பாசாயுதமும் காளிதேவி சகிதமுமாயிருக்கும் இவரை சீகாமரம் பண் உருவாக்கிய வராளி ராகமும் நவதாளமுடன் (தற்போது சதுஸ்ரராகம்) கூடிய கௌத்துவம் பாடலுக்கு சிம்மநந்தன வாத்திய இசைக்கு குஞ்சித நிருத்தமாக ஆடலமைத்து ஆடுவர். வலது கையில் பதாக முத்திர்ரயும் இடது கையில் சிகர முத்திரையினையும் பயன்படுத்தி வருண பகவானை அபிநயிப்பர்.

7.வாயு சந்தி - வடமேற்கு திசையினை வாயு சந்தி என்கிறோம். இத்திசைக் குரிய தேவன் வாயு பகவான். இவர் காற்றின் கடவுள் எலியை வாகனமாகக் கொண்டு அஞ்சனாதேவி சகிதமாயிருப்பவர். இவருக்குப் பிடித்த தக்கேசிப் பண்ணும், மகுடநாமகிரி இராகமும் பழைமையான பலிதாளமும் (திஸ்ர நகம்) உள்ள கௌத்துவப் பாடலுக்கு பஞ்ச வாத்தியம் இசைக்க காந்தி நிருத்த மாக நாட்டி யம் அமைத்து ஆடுவர். வாயு பகவானை நாட்டியத்தில் பிரயோகிக்க வலது கையில் அராளமும், இடது கையில் அர்த்த பதாகமும் பிடிப்பர்.

8.குபேர சந்தி- குபேரக் கடவுளுக்குரிய திசை வடக்காகும். இவர் செல்வத்தின் அதிபதியாவார். நவரத்தினங்களும் இவருக்கு சொந்தம். தட்டாயுதம் ஏந்தி சித்திராதேவி சகிதமாயிருப்பவர். இவருக்கு பிடித்தமான பண் தக்கராகம். இராகம் மாளவஸ்ரீ. தாளம் கொட்டர், நடைமுறையில் திஸ்ர ரகம் பிடித்தமான சந்தர்ப்பு வாத்தி யம் இசைத்து சந்தியா நிருத்தமாக குபேர சந்தி கௌத்துவம் ஆடப்படும். நாட்டி யத்தில் குபேரக் கடவுளை அபிநயிக்க வலது கையில் முஸ்டியும் இடது கையில் அலபத் மமும் பிடித்துக் கொள்வர்.

'நாட்டியக் கலாவித்தகர்',
திருமதி அ.உமாமகேஸ்வரி (B.F.A),
உடுவில் தெற்கு.

9.ஈசான சந்தி - ஈசானம் என்பது வடதிசையினைக் குறிப்பதாகும். இத்திசைக்குரிய கடவுள் ஈசனாவார். அந்தாளிப் பண்ணும் மலகரி இராகமுமுடைய கம்பீரம் நிறைந்த தக்கரை கண்டசாபு தாளத்துடன் கூடிய கௌத்துவப் பாடலுக்கு அனு மத்ரித வாத்தியம் இசைத்து பிரம்மஸ்ரீ நிருத்தமாக நாட்டியமாடுவர். பரத நாட்டி யத்திலே ஈசனைக் குறிக்க இடது கையில் சிம்ஹ முகமும் வலது கையில் த்ரிபதாக மும் பிடிப்பர். இதனை அபிநயதர்ப்பணம் கூறினாலும் பரதார்ணவம் வலது கை த்ரிபதாக மும் இடது கை முஸ்டியும் Cross பண்ணி பிடிக்க வேண்டும் எனக் கூறுகின்றது.

இந்த வகையில் ஒன்பது சந்திகளுக்கும் ஒன்பது தேவர்கள் குறிக்கப்பட்டு வழிபடப்படுகிறது. ஆலய மகோற்சவ காலங்களில் அதாவது துவஜாரோகணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்
ப
ல
ின்
ஒன்று
ாகும். தீவின்
ரில்
வும்
குறிப்பாக
ண்டாவது
வலிமை மிக்க
றது.
ாகப் பெரிதும்
போது
களின்
டயின் பகுதிகள்
ஆம் ஆண்டில்
களிமுகத்தில்
யபோது தமது

தேவாலயமாகும். 1706 களில் கட்டப்பட்டதாக வரலாற்றாசிரி யர்களால் எடுத்துக் காட்டப்படும் இத்தேவாலய கட்டுமானம் கிரேக்கச் சிலுவை அமைப்பை தளமாகக் கொண்டமைக்கப்பட்டதுடன் வெளிப் பாட்டு நேர்த்தியுடைய ஒரு கட்டுமான முமாகும். மிகமிக துரதிஷ்டவசமானது என்னவெனில், இக்கட்டுமானம்

# ...ருமை மிகுந்த மரபுரிமைகள்




ம. திருக்குமரன்

# ...ப்பாணக் கோட்டை

இராணுவ மோதற் பின்னணியில் முழுதாகவே அழிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

துரதிஷ்டவசமாக தமிழ் மக்களிடம் அவர் தம் அதிகாரிகள், அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பலரிடமும் மரபுரிமைச் சொத்துக்களது முதன்மை, அவற்றைப் பேணிப்பாதுகாக்க வேண்டியமை தொடர்பாக விரிவான - ஆழமான பார்வைகள் கடந்த காலத்தில் மட்டுமன்றி நிகழ்காலத்திலும் இல்லை. இதனால்தான் பலவற்றை இழந்திருக் கிறோம். அல்லது முட்டாள்தனமாக நடந்துள்ளோம். இதற்கு ஒருவகையில் கோட்டையின் கடந்தகாலமும் ஒரு உதாரணமாகும். அதிஷ்டவசமாக ஒல்லாந்த அரசின் அனுசரணையின் கீழ் மீளவும் கோட்டை புனரமைக்கப்படுகிறது. இது ஒரு புறம் நிகழ, மறுபுறம் நாங்கள் வெற்றிகரமாக இதன் தொடர்ச்சியான பல கட்டடங்களை அழித்து வருகிறோம்.

இக்கோட்டையின் தொடர்ச்சியாக அதன் சுற்றுவட்டாரத்தில் அமைந்திருந்த ஒல்லாந்த நகரம் அழிந்தவண்ணம் இருக்கிறது. அதனைப் பற்றி அதிகாரிகளும், பொதுமக்களும் கவனம் எடுக்க வேண்டும். அது நமது முதுபெரு நகரக் கட்டுமானமும், அழகிய நகரத் திட்டமிடலின் எஞ்சியுள்ள பகுதியு மாகும்.

சரியான திட்டமிடல் இன்றி ஆர்ப் பாட்டமாக ஆரம்பித்துள்ள தெரு அகலிப்பு, இந்த ஒல்லாந்த நகரத்தையும் சப்ப இருக்கிறது. யார்தான் இந்த நிலைமைகளுள் இருந்து நமது பெருமை மிக்க மரபுரிமைகளைக் காக்கவல்லார்?




# ...சந்தி கௌத்துவங்கள்



தொட்டு துவஜாவரோகணம் வரையான விசேட தினங்களில் இவ்வொன்பது சந்திக்குமுரிய கௌத்துவங்கள் பாடப்பட்டு தேவரடியார்களினால் ஆடப்பட்டும் வந்தன. ஆனால் இன்றைய நிலையில் தமிழ் நாட்டில் கூட இக் கௌத்துவங்கள் ஆலயங்களில் குறிப்பிட்ட காலங்களில் ஆடப்படுவதில்லை என்றே கூற வேண்டும். எங்கேனும் ஆலய விழாக்கள் வெளிமேடைக் கச்சேரிகளில் ஆங்காங்கு ஆடப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் வருடத்தில் ஒருமுறையேனும் இவ்வடிவங்களை நாட்டியமாகக் காண்போமா என்பது ஐயமே. பஞ்சமூர்த்தி கௌத்துவங்களுக்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் நவசந்தி கௌத்துவங்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. எனினும் ஆடலில் பல அற்புதங்களை ஏற்படுத்தக் கூடிய இந்நவசந்தி கௌத்துவங்களை கச்சேரிகள் விழாக்களில் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். இன்றைய நிலையில் நாட்டியம் கற்கும் பலருக்கு நவசந்தி கௌத்துவங்களோ அல்லது அதன் உள்ளடக்கமோ தெரியாத துர்ப்பாக்கிய நிலை கூடக் காணப்படுகிறது. இந்நிலை மாறவேண்டும். யாழ்ப்பாணத்து மூத்த நடன விற்பன்னர்கள் வழிகாட்ட வேண்டும் என வேண்டுகிறேன். (முற்றும்)

# பாவம், ராகம், தாளம் = பரதம்

## மெய்ப்பித்த பரத நிருத்திய அரங்கேற்றம்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

பரத நிருத்திய அரங்கேற்ற வெற்றிக்கு ஒரு காரணம் என்பது உண்மையே.

எத்துணை இசை எப்படி வந்தாலும், ராகமும் தாளமும் இசைந்து வர அதற்கேற்ற பாவத்தைக் காட்டி அரங்கை உயிர்ப்பித்த பெரும் பொறுப்பு நாட்டியமாடுபவரையே சாரும். இந்தப் பொறுப்பினை ஜனனி சிறப்பாக ஒரு கைதேர்ந்த நடனத்துறை விற்பன்னரைப் போல நிறைவேற்றியிருந்தமை மிகைபடுத்திய கூற்றல்ல. நாட்டியத்திற்கே உரித்தான அடைவுகளையும், அபிநயங்களையும் அழகுறக் கையாண்டு அரங்கை அழகுற வைத்தார்.

குறிப்பாக உமா மகேஸ்வரி உலக நாயகி எனும் ரேவதி ராகத்தில் அமைந்த வர்ண உருப்படியை மிக நேர்த்தியாக வழங்கி சுமார் 40 நிமிடங்கள் பாவத்தடன் தொடர்ச்சியாக அரங்கினை நிறைத்தமையைப் பலரும் தமது கரகோஷத்தினால் அங்கீகரித்தனர். ஒரு நாட்டிய அரங்கேற்றத் திற்கு நடனமாடுபவரின் திறனை அளவிடும் கோலாக இவ்வர்ண உருப்படி திகழ்கின்றது. இதனை சிறப்பாக நிறைவேற்றி விருந்தினராகக் கலந்து கொண்ட நாட்டிய முதுமெய்யியல்மானி திருமதி கிரிஜாந்தி ரவீந்திராவினு டைய பாராட்டையும் ஜனனி வாழ்த்துரையில் பெற்றுக் கொண்டார்.

அதுபோன்றே சிந்தை கவரும் சிவரஞ்சனி ராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்த வித்துவான் மதுரை சோமுவின் குரலால் குழையப் பெற்ற '' என்ன கவி பாடினாலும் உந்தன் மனம் இரங்கவில்லை இன்னும் என்ன சோதனையோ முருகா'' என தர்சனன் அவர்கள் மனமுருகப் பாட நெஞ்சை ஈர்க்கும் பின்னணி இசையுடன் அரங்கேறிய பதமும் பலரது கவனத்தையும் ஈர்ப்பதாக அமைந்தது. இது போன்று எங்கோ ஒரு குழலோசை கேட்கிறது.... எனும் சுனாதவினோதினி ராகத்தில் அமைந்த பதமும் வசந்தனின் புல்லாங்குழல் இசையுடன் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.

''புதியன புகுதலம் பழையன கழிதலும் கால வழுவில்''என்பதற்கு இணங்க பாரதியாரின் கவிதைகளை இருளும் வெளியும் எனும் தலைப்பிலேயே பல ராக தாளங்களின் கோர்வைகளாகப் படைத்த படையில் பலரது மனதையும் சில கனங்கள் , சில நாள்கள் முன்னோக்கி ஈர்த்து சென்று நிலைத்திருக்க வைத்திருந்தது. காலத்தைப் பதியாத எந்த வொரு கலைப்படைப்பும் முழுமை பெறுவதில்லை என்பதுடன் காலத்தை பாடாத கவிஞனும் கவிஞன் இல்லை என்பதனையும் விளக்கிக் கொண்ட தானா இக்கலைப்படைப்பு காலம் கடந்தும் வாழும் பாரதியாரின் கவித் திறனுக்குச் சான்றாக அமைந்தது. உயிர் வலிக்கும் அந்தக் கணங்களையும் அவலம் தோய்ந்த குருதியால் கழுவப்பட்ட எமது துயர் மிகு வாழ்வினையும் ஒரு கலைக் குழாமுக்குரிய நோக்கு நிலையிலிருந்து தந்தமை வரவேற்க் கத்தக்கது. சாஸ்திரிய கலைகளை மரபு பிசகாது பேணுவோம் என பயனற்ற வீராப்புக்களை விடுத்து மானுட விடியலுக்காக மகோன்னத பாதையே கலை என்பதை உணர்த்த இப்படைப்புக்கு அதன் பின்னால் உழைத்த கலைஞர்களுக்கும் எமது பாராட்டுக்களைக் கூறியே ஆக வேண்டும்.

இவ்வாறு விறுவிறுப்பூட்டும் தில்லானா, மங்களத்துடன் நிறைவேறிய பரத நிருத்திய அரங்கேற்றத்திலே விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி க. பொன்னம்பலம் , கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுத்தாளர் K.R. டேவிட், பேராசிரியர் க. சிவானந்தமூர்த்தி ஆகியோர் நாட்டியக் கலைக்குச் சிறப்புக்களையும் செல்வி ஜனனியின் திறமைகளையும் அவரை நெறிப்படுத்திய ஆசிரியரின் திறமைகளை யும் பலவாறு விதந்துரைத்தனர்.

அதிலும் குறிப்பாக இந்தியாவிலிருந்து வருகை தந்து விருந்தினராகக் கலந்து கொண்ட தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையின் பேராசிரியர் கலாநிதி ஆர்.மாதவி பாரதத்தில் தோன்றிய பரதக்கலையை அதன் நேர்த்தியோடு இன்றும் பேணி வருபவர்கள் யாழ்ப்பாணத்தவர்களே என வார்த்தைகளால் மகுடம் சூட்டியபோது திரண்டிருந்த சுவைஞர்கள் கரகோஷம் செய்து அவரது கருத்தினை வரவேற்றனர்.

சம்பிரதாயப் பூர்வமான அரங்க பூசை, குருவணக்கம், கணபதி ஸ்துதி என்பவற்றோடு ஆரம்பமான இந்நிகழ்வு நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையினால் புனிதம் பெற்றது. சுவாமி அவர்களும் நீண்ட நேரம் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அது மட்டுமல்லாது நேர்த்தியான ஆடை, அலங்காரம்,அழகுமிகு கலைத்துவமான ஒப்பனை , துல்லியமான ஒலியமைப்பு, காட்சிகளின் தன்மைக் கேற்ற ஒளியமைப்பு, கம்பீரமான குரலில் அமைந்த சர்வேஸ்வராவின் நிகழ்ச்சித் தொகுப்பு எனப் பல விடயங்கள் இந்நிகழ்வுக்கு மேலும் பலம் சேர்ந்தன.

மாறிவரும் நவீன உலகில் கலைகளைத் தமது பிள்ளைகளுக்கு கற்பிக்கத் தவறிவரும் பெற்றோர்கள் மத்தியிலே தமது மகளுக்குப் பரதக் கலையைப் பயிற்றுவித்த ஜனனியின் பெற்றோரும் தமது பெற்றோரின் கலை ஆர்வத்தைப் பூர்த்தி செய்து அதன் விளைவாக இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் புலமைப்பரிசில் பெற்றுச் செல்லும் ஜனனியும் என்றும் பாராட்டுக்குரியவர்களே

அதுபோன்றே விளையாட்டு, சமூகத்துறை களுக்குச் சேவையாற்றி வரும் தொழிலதி பர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் அவர்களும் இக்கலை நிகழ்விலும் தம்பதி சமேத ராய் கலந்து கொண்டு ஜனனியை வாழ்த்தியதுடன் பொன்னாடை போர்த்து கௌரவித்தமையும் குறிப்பிடத் தக்கது. மேடையமைப்பு இன்னும் அழகாக மெருகூட்டி யிருக்கலாம்.

எது எவ்வாறு எனினும் நல்ல தொரு பரத நிருத்திய அரங்கேற் றத்தைப் படைத்த யாழ்ப்பாணம் பரத கலாகேந்திரம் அதன் இயக் குனர் திருமதி வசந்தி குஞ்சித பாதமும் மாணவி ஜனனியும் பாராட்டுக்குரி யவர்களே.



கலா ரசிகன்

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



வரவுகளை எதிர்பார்த்து செலவுகளைச் செய்வீர்கள். தொழில் ரீதியான பொறுப்புகள் அதிகரிக்கும். மாற்று மொழி பேசும் நண்பர்கள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். ஆரோக்கியக் குறைவுகள் அகன்று தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். உறவினர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம். தன்னம்பிக்கை கூடும்.

### இடபம்



அவசர செலவுகளை சமாளிக்க பிறரிடம் கைமாத்து வாங்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள் வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களை செய்வீர்கள். வயிறு உபாதைகள், வாயுத் தொல்லைகளை சந்திக்கலாம்.

### மிதுனம்



தடைகள், போட்டிகளால் கோபம், எரிச்சல் அடையலாம். நாளைய காரியம் ஒன்றுக்காக இன்றே முன்னேற்பாடு செய்வீர்கள். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் அவதிப்படலாம். உத்தியோகத்தர்கள் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். தகுதிக்கு மீறிய வகையில் நடந்து கொள்ளும் சிலரை பார்த்து எரிச்சல் அடைவீர்கள்.

### கடகம்



புத்திசாலித்தனமான செயற்பாட்டால் முக்கிய காரியம் ஒன்றை முடித்து கொள்வீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். மற்றவர்கள் உங்களை பார்த்து பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். பெண்களால் சந்தோஷம், மகிழ்ச்சி உண்டு.

### சிங்கம்



வீட்டுக்கு தேவையான பொருள்கள் வாங்கலாம். தாய் வழியில் அன்பு தொல்லைகளைச் சந்திக்கலாம். பண விடயங்களில் கொடுத்த வாக்கை காப்பாற்ற கடும் பிரயத்தனம் செய்வீர்கள். மற்றவர்களிடம் உங்களின் சொந்த விடயங்களைச் சொல்ல வேண்டாம். எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்.

### கன்னி



கனிவான பேச்சுக்களால் சிக்கலான நபர்களிடமும் காரியம் சாதிப்பீர்கள். வீண் வம்பு விவகாரங்களில் இருந்து விடுதலை பெறுவீர்கள். கண்டு கொள்ளாமல் இருந்த உறவினர்கள் உங்களின் உதவி நாடி வரலாம். பல நாள் ஆசை ஒன்றை நிறை வேற்றிக் கொள்ள முற்படுவீர்கள். உடன்பிறப்புக்கள் விடயங் களில் தலையிட வேண்டாம்.

### துலாம்



ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பண விவகாரங்களில் சிலரிடம் கடுமையாக நடந்து கொள்ளலாம். பெற்றோருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். சிலர் உங்களை ஒரு இடத்திற்கு வரச் சொல்லி விட்டு, அவர்கள் கால தாமதமாக வரலாம். முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம்.

### விருச்சிகம்



இரண்டு நாள்களாக இழுத்த பிரச்சினை ஒன்று இன்று முடியலாம். நண்பர்கள் நீங்கள் கேட்ட உதவியை செய்ய முன் வரலாம். தொழில் ரீதியாக வர வேண்டிய பணவரவுகள் வரலாம். புதிய முதலீடுகள் தொடர்பாக ஆலோசனை செய்வீர்கள். இதுவரை உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

### தனுசு



நினைத்த காரியங்கள் நினைத்த நேரத்தில் முடியலாம். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்ட சிலர் மனம் மாறுவர். சேமித்த பணம் ஒன்றை நல்ல காரியத்திற்காக பயன்படுத்துவீர்கள். சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம்.

### மகரம்



உடன் பணிபுரிவோர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வாங்கிய கடன் ஒன்றைத் தீர்க்க முற்படுவீர்கள். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மதிப்பு, செல்வாக்கு கூடும். பெண்கள் பேச்சை கேட்டு நடப்பதன் மூலம் சில ஆதாயங்களைப் பெறலாம். ஆன்மிக நாட்டம் உண்டாகும்.

### கும்பம்



இறைவனை வழிபட்டு இன்பம் காண வேண்டிய நாள். நன்றாக நடப்பது போல தோன்றிய விடயம் ஒன்று குதர்க்கமாக அமைந்து விடலாம். குடும்ப உறுப்பினர்களுடன் கோபதாபம் ஏற்படலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவை எதிர் கொள்ளலாம். பயணங்களில் தடை, தாமதங் களைச் சந்திக்கலாம்.

### மீனம்



உங்களின் யோசனைக்கு மற்றவர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். பிரியமான சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். எதிலும் நன்கு சிந்தித்து செயற்பட்டு ஆதாயம் பெறுவீர்கள். வெளியூர் பயணங்களின் போது உறவினர் களை சந்திக்கலாம். மனைவியின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள்.


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட
**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**
பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(C/564561)



**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1981 ஆம் ஆண்டு, சித்திரை நட்சத்திரம், கிரகபாவம் 4½ உடைய, கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியருக்கு, அரச பணிபுரியும் மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (குறிப்பு, குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும்.) விளம்பர இல.4057, மே/பா உதயன்.


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 830 திகதி: 12.08.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| X | 02 | 20 | 24 | 40 | 66 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 18,254,728.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 299 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14340 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 201914 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 30034 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**8,170,960.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**18,558,322.50**

ஐந்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 27.11.1977
விண்ணில்: 05.08.2008

கனகசபாபதி - நாகேஸ்வரி
தம்பதியரின் செல்வப் புதல்வி
**ய.கேதீஸ்வரி (கேதா)**
திதி : ஆடிப் பஞ்சமி

ஆண்டு ஒன்றுபோக வயது ஒன்று போகும் நீ மறைந்து
ஆண்டு இரண்டு போனது திவசம் இரண்டு வந்தது
அருணன் தோன்றி மறைகிறான் அம்புயமும் மலர்கிறாள்
அம்மா கேதா நீங்கள் எங்கு உள்ளீர்கள்
ஆண்டு இரண்டுபோல் உருண்டு பலது ஆகலாம்
ஆண்டு ஆறு வயதான அபியும் நாமும் சேர்ந்து தான்
ஆண்டு ஆண்டு ஆண்டாக அஞ்சலிகள் செய்வோமே
ஆண்டாள் போல வாழ்ந்த நீர் அம்மன் வடிவுகண்ட நீர்
ஆண்டவனின் அருளால் அமைதிகொண்டெம்மை வாழ்த்தம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமை என்றும் மறவாத மனத்தினராம்:
தாய், தந்தை, மகள் அபிநாயினி
சகோதரர்கள்

அம்பனை,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

(1018896)

## ஓராண்டு நினைவு நாள்



அமரர் வானதி பிரதாப்

மலர்வு 19.10.1978
உதிர்வு 26.07.2009

கற்றுயர்ந்து நல்லாசானாய் பணிபுரிந்து
பார் புகழ வாழ எண்ணி - உன்
வாழ்க்கை ஓடத்தை நேசமுடன் ஓட்டினாய்
புன்னகை பெண்ணகையாக கனிந்த மொழிபேசி-நீ
மற்றவர் மனதில் நிறைந்திருந்தாய்
கொடிய நோயால் விதியழைக்க - எமை
பிரிந்து அன்னை பர்வதவர்த்தனி தாள் சேர்ந்து
ஆண்டொன்று ஓடி மறைந்ததம்மா - உன்
நினைவால் எம் இதயம் வாடுதம்மா!

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(101886)

**கணவர், மகன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்டப் பகுதி உயர்தரப் பாடசாலைகளில் விஞ்ஞான, கணித ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

## உடன் நியமிக்க மாகாணசபை உறுப்பினர் வலியுறுத்து

நுவரெலியா, ஓக. 14

பெருந்தோட்டப் பகுதியில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இது தொடர்பாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான முரளி ரகுநாதன் மத்திய அரசின் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் நேரடியாக முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

'' மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் அதுவும் பெருந்தோட்டப் பகுதியில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில்உடனடியாக விஞ்ஞான, கணித, ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கும்போது மலையகப் பகுதியை சார்ந்த தகுதியான ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்''- என அவர் வலியுறுத்தி உள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக உடன் கவனம் எடுத்து வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை தான் நியமிப்பார் என அமைச்சர் தன்னிடம் உறுதி கூறினார் எனவும் முரளி ரகுநாதன் குறிப்பிட்டுள்ளார். (ளி)

## ஜனாதிபதி இணைப்பாளராக ஜெகதீஸ்வரன் நியமனம்

கொழும்பு, ஓக. 14

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளராகவும், ஊடகப் பேச்சாளராகவும் இருந்து வரும் எஸ். ஜெகதீஸ்வரன் நுவரெலியா மாவட்டத்திற்கான ஜனாதிபதி இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நியமனத்தை வழங்கி உள்ளார்.

ஜெகதீஸ்வரன் இ.தொ.கா. உப தலைவர்களில் ஒருவர். முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். தேசிய நல்லிணக்க ஒருமைப்பாடு பிரதியமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

தமது அரசியல் வாழ்க்கையை அமரர் தொண்டமான் காலத்தில் ஆரம்பித்த இவர் இன்றுவரை 30 ஆண்டுகளாக மலையக மக்களுக்காகச் சேவை செய்து வருகிறார்.

சமூகமேம்பாட்டைக்கருத்தில் கொண்டு மலையக மக்களுக்காக உழைத்துவரும் ஜெகதீஸ்வரன் ஒரு சிறந்த பேச்சாளருமாவார் என இ.தொ.கா. ஊடகப் பிரிவு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ளி)

## நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சட்டவிரோத மதுபான நிலையங்கள் மீது நடவடிக்கை கோருகிறார் ஆறுமுகன்

நுவரெலியா, ஓக. 14

நுவரெலியா சட்டவிரோத மதுபான விற்பனை நிலையங்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட கலால் திணைக்கள அதிகாரிகளிடம் வலியுறுத்தி உள்ளார் கால்நடை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான்.

கடந்த திங்கட்கிழமை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் கலால் திணைக் கள அதிகாரிகளுடன் அமைச்சர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அவர் அங்கு பேசியபோது, ''நுவரெலியா மாவட்டத்தில் சட்ட விரோதமாகச் செயற்படும் மதுபானசாலைகளையும், சட்டத்திற்கு முரணாகச் செயற்படும் உத்தரவு பெற்ற மதுபானசாலைகளையும் சுற்றிவளைத்து அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

''ஒரு சில மதுபானசாலைகளில் மதுபானங்களை போத்தல்களில் இருந்து உடைத்துக் கொடுப்பதாக முறைப்பாடு வந்துள்ளது. அவ்வாறு உத்தரவுப்பத்திரம் இல்லாமல் உடைத்துக் கொடுப்போர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' - என்று வலியுறுத்தினார்.

மேலும் மதுபானசாலைகள் திறக்கப்படும் நேரங்களிலும் மட்டுமே அங்கு வியாபாரம் நடப்பதை உறுதி செய்யுமாறும் அதன்பின் காலை நேரங்களிலும் இரவு நேரங்களிலும் சட்டத்திற்கு முரணாக விற்பனையில் ஈடுபடும் அனைத்து மதுபானசாலைகளையும் சுற்றிவளைத்துப் பிடிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (ளி)

## வாசனைத் திரவிய உற்பத்தி கேகாலையில் அமோகம்

கேகாலை மாவட்டத்தில் வாசனைத் திரவிய உற்பத்தி அமோகமாக இருப்பதை அடுத்து விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்து வருகிறது.

ஏலம், கராம்பு, சாதிக்காய், மிளகு என்பன இம்முறை இம்மாவட்டத்தில் கூடுதலான விளைச்சலை அளித்துள்ளன. அத்துடன், இவற்றிற்கான உள்நாட்டு, வெளிநாட்டு கேள்விகளும் அதிகரித்துள்ளன. இதனால் உற்பத்தி செய்வோர் இவற்றை விற்று கைநிறையப் பணம் சம்பாதிக்கின்றனர்.

கொழும்பு வியர்பாரிகள் கேகாலை- மாவனல்லை நகரங்களில் உள்ள கொள்முதல் கடைகளில் வாசனைத் திரவியங்களைப் போட்டி போட்டுக்கொண்டு நேரடியாகக் கொள்வனவு செய்கின்றனர். (ளி)

## மஹியங்கனை தேனுக்கு மாவனல்லையில் கிராக்கி

கேகாலை,ஓக. 14

மஹியங்கனைப் பகுதியில் உற்பத்தியாகும் இயற்கைத் தேனுக்கு மாவனல்லைப் பிரதேசத்தில் பெரும் கிராக்கி நிலவுகிறது.

மஹியங்கனைப் பகுதியில் வதியும் ஆதிவாசிகளினால் காடுகளில் சேகரிக்கப்படும் தேனுக்கே இவ்வாறு கிராக்கி நிலவுகிறது.

பலவித நோய்களுக்கும் பரிகாரம் தரும் நிவாரணியாகவுள்ள மஹியங்கனைப் பிரதேச தேன், ஒரு போத்தல் 600 ரூபா முதல் 800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

மாவனல்ல்லப் பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் மஹியங்கனை சென்று தேனைக் கொள்வனவு செய்து இப்பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர். (ளி)




## இந்த வருடம் முடிவடைவதற்குள் கேகாலை முழுவதற்கும் மின்சாரம்

கேகாலை, ஓக. 14

கேகாலை மாவட்டத்தில் இதுவரை காலமும் மின்சார வசதி வழங்கப்படாத கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது இம்மாவட்டத்திலுள்ள ஒன்பது தேர்தல் தொகுதிகளிலும் 70 முதல் 80 வீதமானோர் வரை மின்சார வசதியைப் பெற்றுள்ளனர். எஞ்சியுள்ள குடியிருப்பாளர்களுக்கு இவ்வருடம் முடிவடைவதற்குள்ளாக மின்சார வசதியை வழங்க மின்சக்தி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதேவேளை, பிரதான வீதியிலிருந்து குறுகிய தூரத்தில் வாழும் குடியிருப்பாளர்களுக்கு துரிதமாக மின்சார வசதி வழங்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (ளி)

# முறைகேடான அரச நியமனங்கள் தவிர்க்கப்பட்டு பட்டதாரிகளுக்கு நிரந்தரத் திட்டத்தை முன்வைக்குக

## ஜனாதிபதிக்கு கிழக்கு மாகாணப் பட்டதாரிகள் மகஜர்




கொழும்பு, ஓக. 14

''நாட்டில் முறைகேடான நியமனங்கள் தவிர்க்கப்படவேண்டும். மத்திய, மாகாண அரசுகள் வேலையற்ற பட்டதாரிகள் நலன் தொடர்பில் நிரந்த திட்டத்தை முன்வைக்கவேண்டும்'' - இவ்வாறு வேலையில்லாப் பட்டதாரிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கக்கோரி கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் மாணவர் சங்கம், கடந்த புதன்கிழமை மட்டக்களபில் பாரிய ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜரிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு மத்திய அரசும் மாகாண அரசும் தனியார் நிறுவனங்களும் அரச சார்பு, சார்பற்ற நிறுவனங்களும் வேலை வாய்ப்புகளை வழங்கி வந்திருந்தன. ஆனால், நீண்டகாலமாக பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்காமையினால் 2005 முதல் இன்று வரைக்கும் கூடுதலான பட்டதாரிகள் வேலையின்றி காணப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 650 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 650 பேரும் அம்பாறையில் ஆயிரத்து 200 பேரும் வேலையற்று காணப்படுகின்றனர்.

தற்போது மத்திய மாகாண அரசிடம் உள்ள நியமனம் வழங்கும் நடைமுறையில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும்போது பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய ஆண்டின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

அரச சுற்று நிருபத்துக்கு அமைய மூன்று வீதம் விசேட தேவையுள்ள பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும்.

40 தொடக்கம் 45 வரையான பட்டதாரிகள் வேலையற்றுக் காணப்படுவதனால் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

முறைகேடான நியமனங்கள் தவிர்க்கப்படவேண்டும். மத்திய, மாகாண அரசுகள் வேலையற்ற பட்டதாரிகள் நலன் தொடர்பில் நிரந்த திட்டத்தை முன்வைக்க வேண்டும். வடக்கு கிழக்கு பட்டதாரிகளுக்கு விசேட சலுகைகள் வழங்க வேண்டும். - இப்படி அந்த அறிக்கையில் உள்ளது. (ளி)

## திருமலை மாவட்டத்தில் டெங்கு விழிப்புணர்வு

திருகோணமலை, ஓக. 14

டெங்குநோயில் இருந்து மக்களைக் காப்பாற்றும் முகமாக மக்களுக்கு விழிப்பு ணர்வு ஏற்படுத்தும் வீதி நாட கம், துண்டுப்பிரசுரம், வீதிப் பவனி என்பவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமங்கள் மற்றும் நகரங்கள் தோறும் வீதிகள், நடைபாதைகள்,கால்வாய்கள், துப்பரவு செய்யப்படவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு தடுப்புத் திட்டத்தை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண அமைச்சர் எம்.எஸ். சுபையிர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்துக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் எம்.தேவராஜன், பிரதேசசபைத் தலைவர்கள், செயலாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உட்பட உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

ஓகஸ்ட் 16-22 ஆம் திகதிவரை டெங்கு தடுப்பு இயக்கத்தை நடத்துவது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. (ளி)

## ஏழு புளியடிக் கிராமத்தில் தண்ணீரின்றி மக்கள் அவதி

திருகோணமலை, ஓக. 14

கிண்ணியாப் பிரதேசசபைக்குட்பட்ட ஆழிப்பேரலை மீள்குடியேற்றக் கிராம மக்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பெரிய கிண்ணியாவைச் சேர்ந்தவர்களே இக்கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. எனினும் கிணறுகளில் தண்ணீர் வற்றி வறண்டுவிடுவதோடு பல கிணறுகளில் தண்ணீர் உவர்த்தன்மையுடன் காணப்படுகின்றது.

மக்கள் நீண்டதூரம் சென்று குடிதண்ணீரைப் பெறவேண்டியுள்ளது. [illegible] கால்நடைகளுக்கும் தண்ணீரைப் பெறுவதில் சிரமம் ஏற்படுகின்றது என அந்த மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ளி)

## கிழக்கில் இ.போ.ச. சேவை விஸ்தரிப்பு

மட்டக்களப்பு, ஓக. 14

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நடவடிக்கைகளை கிழக்கு மாகாணத்தில் மேம்படுத்துவது தொடர்பான உயர்மட்ட மாநாடு அண்மையில் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் பிரதித் தலைவர் டபிள்யூ. விமலரட்ண தலைமையில் மட்டக்களப்பு வில்லியம் மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி மாநாட்டில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த திருகோணமலை, மூதூர், கந்தளாய், கிண்ணியா, மட்டக்களப்பு, வாழைச்சேனை, காத்தான்குடி, ஏறாவூர், வாகரை, கல்முனை, ரிதிதென்ன, அக்கரைப்பற்று, அம்பாறை, சம்மாந்துறை, பொத்துவில், களுவாஞ்சிக்குடி ஆகிய டிப்போக்களைச் சேர்ந்த முகாமையாளர்கள், பிரதி முகாமையாளர்கள், பிரதிப் பொறியியல் முகாமையாளர்கள், பிரதிநிதி முகாமையாளர் மற்றும் கிழக்குப் பிராந்தியப் பணிமனை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சேவைகளில் ஏற்பட்டுவரும் சீர்குலைவுகள் மற்றும் தடங்கல்களை நீக்கி வருவாய் இலக்குகளை அதிகரித்து மக்களுக்கு சீரான சேவைகளை வழங்குவது இங்கு குறித்து விரிவாக ஆராயப்பட்டனஎன்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் கொடிச்சீலை: அதன் வரலாற்றுச் சுருக்கம்

**இன்று நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள தேரடி வேல்முருகன் ஆலயத்திலிருந்து நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு கொடிச்சீலை எடுத்து வரப்படுகிறது. அதனையிட்டு இந்த சிறுகுறிப்பு பிரசுரமாகிறது.**

நல்லைக் கந்தன் ஆலய பெருந்திருவிழாவுக்கான கொடிச்சீலை நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு வடபால் உள்ள சட்டநாதர் வீதியில் மரபு வழியாக வசித்துவரும் செங்குந்த மக்களால் அதற்கென அமைக்கப்பட்ட அழகிய சித்திரத்தேரில் வைத்து அங்கு அமைந்துள்ள முருகன் ஆலயத்திலிருந்து கொடியேற்ற தினத்திற்கு முதல் தினம் சட்டநாதர் வீதி வழியாக எடுத்து வந்து வழங்கப்பட்டு வருகிறது.

**செங்குந்தர் வரலாறு**

முருகனின் தாயாரான பார்வதி தேவியின் கால் சிலம்பின் ஒன்பது நவரத்தினங்களில் இருந்து முருகன் சூரபத்மனுடன் போர் புரியப் புறப்பட்ட போது தோற்றுவிக்கப்பட்ட வீரவாகு முதலான ஒன்பது தளபதிகளின் வழி வந்த இனத்தவரே செங்குந்த இனத்தவர் என்று கூறப்படுகின்றது. இவர்கள் முருகனின் குறிஞ்சி நிலப்பகுதியில் இருந்து வந்தவர்களாவர். செங்குந்தர் என்றால் சிவந்த ஈட்டி தாங்கியவர் என்றும் பொருள்படும். இவர்களது மூதாதையர்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்தியாவில் வசித்து வருகின்றனர். இவர்கள் தம் குலத்தொழிலான போர்த் தொழிலை விட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

நல்லைக் கந்தன் ஆலய கொடிச்சீலைக்குரிய வெற்றிலைச் சுருள் ஆலயத்திலிருந்து அர்ச்சகர்களால் காளாஞ்சி மூலம் செங்குந்த இனமக்கள் வாழும் சட்டநாதர் வீதிக்கு எடுத்து வரப்பட்டு செங்குந்த குலத்தவரிடம் ஒப்படைக்கப்படும். அதன்படி கொடியேற்றத்துக்கு முதல் தினம் செங்குந்தர்கள் அக்கொடிச்சீலை, கயிறு முதலியவற்றை மேள வாத்தியங்களுடன் தெருவீதி வழியாக எடுத்துவந்து நல்லைக் கந்தன் ஆலயத்தில் ஒப்படைப்பார்கள். அதன்பின் கொடிச்சீலையானது முறைப்படி வேதமந்திர உச்சாடனத்துடன் கொடியேற்ற தினத்தன்று ஏற்றி வைக்கப்பட்டு நல்லைக் கந்தனின் பெருந்திருவிழா தொடங்கி இருபத்தி ஐந்து தினங்கள் விழா நடைபெற்று நிறைவடையும்.



-லோகு-


## விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பில் உள்ள HA தொடரிலக்க முடைய 'ஓட்டோ' விற்பனைக்குண்டு.

தொ.பே: 0771882145

## காணி விற்பனைக்கு

கரணவாய் தெற்கு, மூத்த விநாயகர் கோயிலடியில் 4 பரப்புக் காணியுடன் புதிய வீடும், கடையும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778592456

## தேவை

யாழ்.நகர் மத்தியில் இயங்கும் ''சன்றைஸ் மெடிகிளினிக்'' இற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1.தாதிய உதவியாளர்
2.உதவிக் கணக்காளர் (Accountant Assistant)
3.வரவேற்பாளர் (Receptionist)
(கணனி அறிவு முக்கியம்)

நேர்முகத் தேர்வு:- ஞாயிறு காலை (15.08.2010) 9 மணிக்கு
இடம்: சன்றைஸ் மெடிகிளினிக், 388, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

## புதிய வீடு விற்பனைக்குண்டு

இருபாலைச் சந்தியில் புதிதாக சீர் அமைத்த வீடு-மேல்மாடி கீழ் மாடியில் 5 அறைகள் 1 அலுவலக அறை, 2 குசினிகள், 2 ஹோல்கள், குளியல் அறை, கிணறு, தண்ணீர்தாங்கி கிழக்குப்பக்கம் றோட், மேற் குப்பக்கம் றோட் உள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டியது:
0779239355 (ரகுநாதன்)
0213219747

(101864)


# சமய சந்நிதிகளில்





யாழ்ப்பாணம்,ஓக.14

வேலணை, பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை காலை 9 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் காலைத் திருவிழா காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் மாலைத் திருவிழா மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரையும் நடை பெறும்.

(த-204)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.ஆனைக்கோட்டை வரத விக்னவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியா னந்தசர்மா 'விநாயகர் பெருமை' என்னும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

(த-204)

* * *

நவாலி,ஓக.14

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை மாம்பழத்திருவிழாவும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(த-204-302)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.14

ஊர்காவற்றுறை, நாரந்தனை வடக்கு, பண்டாரபுலம் தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த்திருவிழாவும் இடம்பெறும்.

(204)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒரு வேண்டுகோள்

**யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இதுவரை பதிவினை மேற்கொள்ளாதவர்கள், பதிவில் குழப்பம் உள்ளவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இன்றும் நாளையும் (சனி, ஞாயிறு) காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை நாவலர் மண்டபத்திற்கு வருகை தந்து தமது பதிவினை உறுதிசெய்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பட்டதாரிகள் சங்கம் கேட்டுக் கொள்கிறது.**

**செயலாளர்.**


## மணமகள் தேவை

கௌரவ குடும்பம் R.C மதத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியா P.R உடைய மென்பொருள் பொறியியலாளர் பட்டம்பெற்ற 28 வயது நிரம்பிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.

தொடர்பு:- 0775151548


# ஜனாதிபதி மஹிந்தவின் பல்கலைக்கழக விஜயம்

கொழும்பு, ஓக. 14

நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக் கழகங்களில் நிலவும் நெருக்கடிகளை ஆராய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நாள்களில் பல் கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இதனடிப்படையில் பல்கலைக்கழகங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு அடுத்த வரவு - செலவுத் திட்டத்தின்போது நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் என்று உயர்கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் மொழிப்பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இதற்காக, பல்கலைக்கழகங்களுக்கு மொழி பெயர்ப்பாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-சி)


உ

## ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 25 ஆவது குருபூசை தின நிகழ்வு







காலம்: நாளை (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை
இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
விசேட நிகழ்வு: இசைச் சொற்பொழிவு
''குருவாய் வருவாய்'' (பக்கவாத்திய சகிதம்)
வழங்குபவர்: திரு.க.ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கள்

வழமைபோல் ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் குருபூசை நிகழ்வுகள் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. சந்நிதியான் ஆச்சிரமம்.

## கோண்டாவில் மேற்கு, கந்தர்வளவு ஸ்ரீமகாகணபதிப் பிள்ளையார் கோயில் (காளி கோயில்)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்-2010

15.08.2010 ஞாயிற்றுக்கிழமை **கொடியேற்றம்**
காலை 9 மணி வசந்தமண்டபப் பூசை காலை 10.30 மணி கொடியேற்றம்

23.08.2010 திங்கட்கிழமை **தேர்த்திருவிழா**
காலை 8.30 மணி வசந்த மண்டபப் பூசை
முற்பகல் 10 மணி சுவாமி தேரில் வீதியுலா
பகல் 12 மணி பச்சை சாத்தி சுவாமி இறக்குதல்

24.08.2010 செவ்வாய்க்கிழமை **தீர்த்தத்திருவிழா**
காலை 9.30 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 11 மணி தீர்த்த உற்சவம்
மலை 4 மணி கொடியிறக்கம்

25.08.2010 புதன்கிழமை **பூங்காவனம்** மாலை 5 மணிக்கு ஆரம்பம்

ஆலயப் பிரதம குரு: ''சிவாகம கிரியா தத்துவநிதி'' பிரம்மஸ்ரீ இரங்க.வரதராஜக் குருக்கள்
மஹோற்சவ குரு: பிரம்மஸ்ரீ சுப்பிர.கௌரிபாலக்குருக்கள்
ஆலய நித்திய குரு: பிரம்மஸ்ரீ வரத.கோபாலகிருஷ்ணக்குருக்கள்

**தினமும் அன்னதானம் வழங்கப்படும்.**

கோண்டாவில். (101863) பரிபாலன சபையினரும் உபயகாரரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் தொடரும் திருட்டுக்கள் தடுக்கப்பட வேண்டும்

## பாதுகாப்புத் தரப்பிடம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,ஓக.14

வன்னிப்பிரதேசத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்கள் மீளக்குடியேறிய பகுதிகளில் இடம் பெற்றுவரும் திருட்டுக்களை தடுத்து நிறுத்தி, மீளக்குடியேறிய மக்கள் இயல்பு நிலையில் வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித்தருமாறு இம்மாவட்டத்தில் மீளக்குடியேறிய மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்த பொலிஸார் மற்றும் அரசியல்வாதிகள், அரசியல் அமைப்புக்களிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

மீளக்குடியேறிய மக்கள் வன்னி மாவட்டத்தில் எவ்வித வசதிகளுமின்றிக் கூடாரங்களில் வாழ்ந்துவரும் நிலையில் இரவு, பகல் எனப்பாராது கூடார வீடுகளிலிருந்து உடைமைகள் மற்றும் சொத்துக்கள் நாளாந்தம் ஆள்கள் இல்லாத வேளை களில் அல்லது இரவு வேளையில் அவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் வேளையில் கூடார வீடுகளில் உள்ள இவர்களது உடைமைகள், சொத்துக்கள் பரவலாகத் திருடப்பட்டு வருகின்றன.

இதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் மீளக்குடியேறிய மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

இந்தத் திருட்டு அச்சநிலையைப் போக்க கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் உரிய நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டும் என மீளக் குடியேறிய மக்கள் கேட்டுள்ளனர். இல்லையேல் மீள்குடியேற்றத்தில் தொய்வு நிலை ஏற்படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு இருந்து வரும் திருடர்களின் தொல்லைகளைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசியல் வாதிகளிடமும் வன்னியில் மீள் குடியேறிய மக்கள் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளனர். (த-236)

# புலமைப் பரிசில் எழுதும் மாணவர் கவனத்துக்கு

கிளிநொச்சி,ஓக.14

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான சுட்டெண்கள் கிடைக்கப் பெற்றுள்ளமையால் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஊடாக இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தமது சுட்டெண்களைப் பெற்று பரீட்சைக்குத் தோற்றுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் அறிவித்துள்ளார்.

இம்முறை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு 143 மாணவர்கள் தோற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-405)

# மன்னார் பேருந்து நிலையத்தில் அங்காடி வியாபாரிகளால் நெருக்கடி

மன்னார்,ஓக. 14

மன்னார் அரச பேருந்து நிலையத்தினுள் தனியார் வாகனங்களுக்கும் அங்காடி வியாபாரம் செய்பவர்களுக்கும் நுழையத் தடை விதிக்கப்பட்ட போதும் இத்தடைகளைத் உதாசீனம் செய்து தனியார் வாகனங்களும், அங்காடி வியாபாரிகளும் தங்களது செயற்பாட்டைத் தொடர்கின்றனர்.

கடந்த பல வருடங்களாகவே மன்னார் பேருந்து நிலையத்திற்குள் அங்காடி வியாபாரிகளினதும் தனியார் சிற்றூர்தி மற்றும் வாகன உரிமையாளர்களினதும் ஆதிக்கம் இருந்து வந்துள்ளது.

தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளதால் மன்னார் பேருந்து நிலையம் வாகனங்களால் நிரம்பி வழிகின்றது. இதனால் பிரயாணிகள் பெரிதும் சிரமங்களை அடைகின்றனர்.

இந்தநிலையில் சில தினங்களுக்கு முன்னர் பேருந்து நிலையத்தில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இருந்த போதிலும் மீண்டும் அங்காடி வியாபாரிகளும் தனியார் சிற்றூர்திகளும் மன்னார் பேருந்து நிலையத்துக்குள் அத்துமீறி நுழைவதால் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(த-80)

# இராமநாதபுரம் கிராம மக்களுக்கு இரண்டு நீரிறைக்கும் இயந்திரங்கள்

## கனடா தமிழ் மாணவி வழங்கினார்

கிளிநொச்சி, ஓக.14

கனடாவாழ் புலம்பெயர் தமிழ்மாணவி செல்வி கார்த்திகா தயானந்தன் நிதியுதவியுடன் போரினால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இரண்டிற்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வழங்கி வைத்தார். சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மேற்படி இயந்திரங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்தந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

அவற்றை இராமநாதபுரம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பாக நா.ராஜசேகரமும் இராமநாதபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பாக க.சந்திரராசாவும் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய இராமநாதபுரம் கிராமவாசியொருவர் '' சகலவற்றையும் மீளவும் ஆரம்பத்தில் இருந்து வளர்க்க வேண்டியவர்களாக உள்ளோம். இந்நிலையில் இந்த மாணவியின் உதவி அளப்பரியது. பிறந்த மண் மீதான பற்று வாழும் தலைமுறையினரிடம் மறக்கப்படவில்லை என்பதற்கு இந்த மாணவி சிறந்த எடுத்துக் காட்டாகும். அந்த மாணவிக்கு எமது நன்றிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாகத் தெரிவிக்கின்றோம்''- என்றார். (த)

# பவுசர் வாகனங்கள் மூலம் குடிதண்ணீர் வழங்குங்கள்

## வன்னி மக்கள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, ஓக. 14

வன்னிப் பிரதேசத்தில் தற்போது நிலவிவரும் கடுமையான வெப்பகால நிலையையடுத்து அப்பகுதிகளில் குடி தண்ணீருக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மீள் குடியேற்றவாசிகள் குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள்.

வன்னிப்பிரதேசத்தில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பிரதேச சபைகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தத்தம் பிரதேசங்களில் மீளக் குடியேறியுள்ள மக்களுக்குப் போதிய குடிதண்ணீரை பவுசர் வாகனங்கள் மூலம் விநியோகிக்க உரிய நடவடிக்கைகளைத் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-236)

# இலவச புலமைப் பரிசில்

கிளிநொச்சி,ஓக.14

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கொன்று வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பொய்கை வெளியீட்டினைப் பெறும் வவுனியா,முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கான செயலமர்வு காமினி மகா வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என பொய்கை வெளிப்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இக்கருத்தரங்கில் வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள பொய்கை வெளியீட்டினைப் பெறும் மாணவர்களும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-405)

# உணவுத்திட்ட முத்திரை வழங்கல்

கிளிநொச்சி, ஓக.14

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியேறிய மக்களுக்கான உலக உணவுத்திட்ட முத்திரை கல்மடுநகர் கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் முதற்கட்டமாக வழங்கப்பட்ட உலக உணவுத்திட்ட முத்திரைக்கு இரண்டு மாதங்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவது மாதத்திற்கானதும், நான்காவது மாதத்திற்கானதுமான உலக உணவுத் திட்டப் பொருள்களை வழங்குவதற்கான முத்திரைகளே தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இதனை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது பழைய உலக உணவுத்திட்ட முத்திரையினைக் கையளித்து புதிய முத்திரையினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-405)

# பேசாலை வெற்றிநாயகி வீடமைப்புத்திட்ட மக்களின் அவலவாழ்வு நீங்குவதெப்போது?

மன்னார்,ஓக.14

மன்னார் பேசாலை வெற்றிநாயகி கிராமத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வீடமைப்புத்திட்ட வீடுகள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதாக அங்கு மீள்குடியேறிய மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வீடமைப்புத் திட்டம் 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட வீடுகளுக்கு அப்போதே சமையல் கூடமும், கழிவறைகளும் இல்லாத நிலையில் மக்கள் குடியேறினர். ஆனால் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து இங்கு இராணுவம் புகுந்ததால் மக்கள் வெளியேறினர்.

தற்போது உடைந்த மதில்களும், ஓட்டை விழுந்த கூரைகளும், மண் அரித்த அத்திபாரங்களுடன் காணப்படும் வீடுகளில் எந்தவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் ஒரு பகுதி மக்கள் குடியேறியுள்ளனர். இவர்களுக்கான பாதை வசதிகளும், மின்சார இணைப்பும், சிறுவர் பாடசாலை, பொது மண்டபம் ஆகிய வசதிகளில் எதுவும் செய்து தரப்படவில்லை. இதனால் இந்த மக்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் அவலமாக வாழ்ந்து வருகின்றனர்.

அரசுசாரா நிறுவனங்கள் தமக்கு உதவி செய்து தங்களை இந்த அவல வாழ்விலிருந்து மீட்க வேண்டுமென்பதே இந்த மக்களின் எதிர்பார்ப்பாகும்.

(க-80)




# கரைச்சிப் பிரதேசத்தில் திங்களன்று 6 கிராமங்களில் மக்கள் மீள் குடியமர்வு

கிளிநொச்சி,ஓக. 14

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை திருவையாறு மேற்கு, பாரதிபுரம், மலையாள்புரம், பொன்னகர், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

மேற்படி கிராமங்களை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட வேறு மாவட்டங்களில் தற்காலிகமாக வசித்து வருவோர் தாம் தற்போது வசித்துவரும் கிராம அலுவலர் பிரிவில் தமது பதிவினை நீக்கி அக்கிராம அலுவலர் பிரிவு அமைந்துள்ள பிரதேச செயலரின் மேலொப்பமிடப்பட்ட கடிதங்களுடன் 16 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.9 மணி தொடக்கம் பி.ப.2 மணிவரை கிளிநொச்சி மத் திய கல்லூரியில் அமைந்துள்ள இடைத் தங்கல் முகாமிற்கு வருகைதந்து தமது மீள்குடியேற்றப் பதிவினை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மருதநகர் பன்னங்கண்டி, கிளிநகர், இரத்தினபுரம், கனகாம்பிகைக் குளம், திருவையாறு ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளிற்கான மீள் குடியேற்றப்பதிவுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் இடைத்தங்கல் முகாமில் வைத்து கிராம அலுவலர்களால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இராணுவத்தினரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, புகைப்படம் எடுக்கப்பட்டு [illegible] கப்பட்டு தமது சொந்தக் காணிகளில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டனர். (த-405)

# வட்டக்கச்சி பொது நூலகத்தை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை.

கிளிநொச்சி,ஓக.14

வட்டக்கச்சி பொதுநூலகத்தை மீள ஆரம்பிக்குமாறு வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதி பொதுமக்கள் கோருகின்றனர்.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் இப்பொது நூலகத்தை மீள ஆரம்பிப்பதற்கான எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் உடனடியாக யுத்தத்தின் போது சேதமடைந்த பொது நூலகக் கட்டடத்தைப் புனரமைத்து அதனை மீள ஆரம்பிக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளில் கடந்த ஏப்ரல் மாதம் மீள்குடியேற்றம் இடம்பெற்றது. மீள்குடியேற்றம் இடம்பெற்று நான்கு மாதங்கள் கடந்துள்ள நிலையில் இந்நூலகத்தை மீள ஆரம்பிக்காமையால் பிரதேச மாணவர்களும் வாசகர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பிரதேசத்தில் ஒன்பது பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்ட போதிலும் எப்பாடசாலையிலும் நூலக வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் விரைவாக பொதுநூலகத்தை ஆரம்பித்து மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என மக்கள் கோருகின்றனர். (த-405)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிவந்தனின் மனிதநேய நடைபயணம்:

# ஐ.நா. முன்றலில் அலைகடலாகத் திரள தயார் நிலையில் புலம்பெயர் தமிழர்கள்

கொழும்பு, ஓக. 14

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற் றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என வலி யுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபை நோக்கி மூன்று கோரிக்கை களுடன் சிவந்தன் மேற்கொள்ளும் மனிதநேய நடை பயணம் கடந்த புதன்கிழமை 20 ஆவது நாளை எட்டியது.

நேற்றைய மனிதநேய நடை பயணத் தில் 6 பேர் சிவந்தனுடன் இணைந்து நடந்தனர். கடந்த புதன்கிழமை 11 மணித்தி யாலங்களில் 42 கிலோமீற்றர் நடந்த சிவந்தனுடன் 20 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இணைந்து நடந்திருந்தனர். கடந்த புதன்கிழமை மழையின் மத்தியில் இந்த நடை பயணம் இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை மனிதநேய நடை பயணத்தில் 12 வயதுயுடைய பைரவி என்ற சிறுமி 20 கிலோமீற்றர் சிவந்தனுடன் இணைந்து நடந்து, சிவந்தனின் கோரிக் கைக்கான தனது ஆதரவைத் தெரிவித்தி ருந்தார்.

லண்டனில் இருந்து பரிஸ் நகர் ஊடாக இதுவரை 772 கிலோமீற்றர் நடந் துள்ள சிவந்தன், ஜெனீவாவை அடைவதற்கு இன்னும் 203 கிலோமீற்றர்கள் நடக்க வேண்டியுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் ஈகப்பேரொளி முருக தாசன் திடலை (ஐ.நா. முன்றலை) சிவந் தன் சென்றடைந்ததும், அங்கு இறுதிநாள் எழுச்சிக் கவனயீர்ப்பு நிகழ்வும், மனுக் கையளிப்பும் நடைபெற இருக்கின்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற் கான ஏற்பாடுகளில் ஐரோப்பிய தமிழ் மக் கள் ஈடுபட்டுள்ளனர். (சி)


மலிவு விற்பனை

அன்ரனா வயர் (RG 6) 100 Yards



Rs 900/=

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

இல 11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021-2223857

எமது நிறுவனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
08.04.1953

மறைவு:
14.08.2007

அமரர்
முத்தன் சந்திரன்

திதி: 14.08.2010

மூன்றாண்டுகள் சென்றாலென்ன
ஏழேழு ஜென்மத்திலும்
உங்கள் உறவும்
உங்கள் நினைவும்
எம்மோடு தொடர்ந்து
கொண்டே இருக்கும்

குடும்பத்தினர்
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.


வீடு காணி விற்பனைக்கு

3 பரப்புடன் 4 அறை வீடு வளவும் 3 பரப்பு படி வெறுங்காணி 3உம் விற் பனைக்கு உண்டு.

சோடாக் கம்பனி லேன்,
மல்லாகம்.

தொடர்பு : 0777877843



ஆளணி தேவை

வவுனியாவில் பிரபல புடைவைக்கடைக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் (ஆண்கள் மட்டும்) தேவை. சிங்கள மொழி கதைத்தல் விரும்பத்தக்கது. தொடர்பு: 0726385295


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
28.03.1966

காலனின் பிடியில்
15.07.2010

### அமரர் செல்லத்துரை பாலச்சந்திரன்

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்த எங்கள் தெய்வமே!
பாசத்தில் நாம் திளைத்து நிற்க எம்மை
பரிதவிக்க விட்டுப் போனதென்ன?
உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைஞ்சு
கின்றோம்.



கடந்த 15.07.2010 அன்று சிவபத மடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (14.08.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோச னத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறி, அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி, துண்டுப் பிரசுர ங்கள் ஊடாக அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மேலும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17.11.1987
மறைவு: 14.08.2008

## நாகராஜா சிரஞ்சீவ்

எமது அன்பு மகனே! சிரஞ்சீவியே!!
விதி செய்த விளையாட்டால்
அலை செய்த சதியால் கதி கலங்கி நிற்கின்றோம்
நீ எம்மைவிட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றதோ!
மறக்க முடியவில்லை உன்னை
மறுக்கவும் முடியவில்லை உன் மரணத்தை
20 ஆண்டுகளுக்கு மேல் புவிக்கு நீ பாரமாகிவிட்டாயோ....
100 ஆண்டுகளுக்கு மேலும் எமக்கு நீ சுமையில்லை
என்பதை இறைவன் அறியவில்லையோ.....
பாரினிலே சிறப்பாக வாழ்ந்த நீ
பரமனடியில் அமைதி பெற இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, பெரியப்பா,
பெரியம்மா, அண்ணாமார், அண்ணி, அக்கா.

76/5, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. முக்கோணிகளுக்கு கோணங்கள் உள்ளன. ஆனால் நான் சொல்லும் உருவிற்கு கோணமில்லை. எனவே, நான் சொல்லும் உரு எதுவாக இருக்கும்?
1) ஒரு வட்டம் 2) ஒரு சதுரம்
3) ஒரு செவ்வகம்

★ கீழுள்ள விளக்கங்களை அவதானித்து விடை தருக.





நீளப்பக்கம் 5 உம் அகலப்பக்கம் 5 உம் என அருகில் காட்டப்பட்டுள்ளவாறு முதலாவது அடுக்கில் 25 தோடம்பழங்களை சதுர வடிவிலே அடுக்கிய ஒரு பழவியாபாரி, அருகிலுள்ள வாறு கூம்பக அமைப்பிலே உச்சியில் ஒரு தோடம்பழம் அருகிலுள்ளவாறு இருக்கத் தக்கவாறு அடுக்கி முடித்தான்.

33. அடுக்கி முடிந்த கூம்பக அமைப்பிலே மொத்தமாக எத்தனை தோடம்பழங்கள் இருக்கும்?
1) 41 2) 50 3) 55

34. மேலே காட்டப்பட்டுள்ள முதலாவது அடுக்குப் போன்று, அடியில் இருந்து நுனிவரை எத்தனை அடுக்குகள் காணப்படும்?
1) 4 2) 5 3) 6


35. மணியம் முருகேசுவின் தம்பி, சிவராசா மணியத்தின் அண்ணன். எனவே, இவர்கள் மூவரில் மூத்தவர் யார்?
1) சிவராசா 2) முருகேசு 3) கூறமுடியாது

36. இது ஒரு சதுர வடிவ ஊர் ஆகும். இதில் G எனும் சந்தியில் நிற்கும் சாமினி மிகக்குறைந்த திருப்பங்களைச் சந்தித்து வீட்டைச் சென்றடையும் சரியான வழி யாது?





i) G → D → A → B → C
ii) G → H → E → B → C
iii) G → D → E → F → C

★ 37 - 40 வரையான வினாக்களின் விடைகளைப் பொருத்தமான இடத்தில் எழுதுக.

37. 


அருகேயுள்ள சதுரக்கூட்டை மேலிருந்து கீழாகவும், இடமிருந்து வலமாகவும் கூட்டும்போது 20 கூட்டுத் தொகை வருமாறு கூடுகளைப் பூரணப்படுத்துக.

(..................................)

38. 


அருகேயுள்ள வட்டத்தில் ஏதோ ஒரு ஒழுங்கில் எண்கள் இடப்பட்டுள்ளன. எண் இடம்பெறாமல் உள்ள பகுதியினுள் வரவேண்டிய எண்ணை அடைப்பினுள் எழுதுக.

(..................................)

39. 6 மாடுகள் சேர்ந்து 6 தவிடு மூட்டையை 6 நாட்களில் தின்று முடிக்கின்றன. அப்படியாயின் ஒரு மாடு ஒரு மூடை தவிட்டை தின்றுமுடிக்க எத்தனை நாட்கள் தேவை?

(..................................)

40. 

அருகே காணப்படுவது ஒரு முக்கோண வடிவமாகும். மேலும் இரண்டு நேர்கோடுகளை மட்டும் வரைந்து இதனை ஒரு சதுரமாக மாற்றுக.

-முற்றும்-

## வினாத்தாள் II

1 மணி 15 நிமிடங்கள்

சுட்டெண் | புள்ளிகள்

### எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

★ கீழ்வரும் பாடலை நன்றாக வாசித்து, அது தொடர்பான வினாக்களுக்கு சரியான விடை தருக.

"கொட்டி வைத்த முத்தே
குவித்து வைத்த இரத்தினமே
கட்டிப் பசும் பொன்னே - என்
கண்மணியே நித்திரையோ......!"

எனும் கவியில் உள்ளது கனிவு
இது தாயின் உள்ளத்து நினைவு
தன் குளவி துயில்வதைப் பார்த்து
அன்புத் தமிழில் வந்தது பாட்டு

01. சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. இரத்தினம் எவ்வாறு கிடப்பதாகச் சொல்லப்படுகிறது?
i) கொட்டிக்கிடப்பதாக ii) குவிந்துகிடப்பதாக
iii) கட்டியாகக் கிடப்பதாக

2. 'பசும் பொன்' என்பது எதனைக் குறிக்கிறது?
i) குளிர்ச்சியான பொன் ii) பச்சைநிறப் பொன்
iii) சிறப்புமிக்க பொன்

3. 'கண்மணி' எனக் குழந்தையைக் கூறுவதன் காரணம் யாது?
i) கண்ணுக்குள் இருக்கும் கருமணியைப் போன்று குழந்தை சிறப்பானது என்பதால்
ii) அக்குழந்தையின் பெயர் கண்மணி என்பதால்
iii) குழந்தை நித்திரை செய்வது கண்களினால் என்பதால்

4. முத்து என்பதன் ஆங்கிலச் சொல் யாது?
i) Gold ii) Pearl iii) Ring

5. குவியல் என்பதன் கருத்து யாது?
i) பல வகையான பொருட்கள் ஒன்றாகச் சேர்ந்து கிடத்தல்
ii) குறித்த ஒரு பொருள் சம அளவில் பரவிக் கிடத்தல்
iii) ஒரேவகையான பொருட்கள் பல ஒன்றாகச் சேர்ந்து கிடத்தல்

02. கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1) ஒத்த கருத்துள்ள சொல் தருக.
அ) கவி : ..................................
ஆ) குளவி : ..................................

2) எதிர்கருத்துடைய சொல் தருக.
அ) அன்பு : ..................................
ஆ) வந்தது : ..................................

3) அன்புத் தமிழ் என்பதைப் பிரித்தெழுதுக. ..................................

4) கனிவு எனும் சொல்லின் மூலம் கூறப்படும் உணர்வு யாது?
..................................


5) பாடலில் உள்ள உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.
..................................

★ கீழ்வரும் ஒவ்வொரு கருத்துக்களுக்கும் உரிய பொருத்தமான பழமொழித்தொடரைத் தெரிவுசெய்க.

1) காந்தனிடம் பல திறமைகள் இருந்தும் அவை வெளிப்படாமலேயே இருந்து விட்டன.
i) கிணற்றுத்தவளை போல
ii) இலவுகாத்த கிளி போல
iii) இலைமறை காய் போல

2) ஒருமுறை தண்டனை பெற்ற றஹீம் மீண்டும் அதே குற்றத்தைச் செய்ய மாட்டான்.
i) சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
ii) பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது.
iii) மனமுண்டானால் இடமுண்டு.

04 கீழே காணப்படும் பாத்திரங்களில் பல அளவுகளில் பால் ஊற்றப்பட்டுள்ளது. அவற்றை அவதானித்து கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.





1) பாத்திரம் B யினையும் C யினையும் கூட்டி எழுதுக.
(..................................)

2) பாத்திரம் D யிலிருந்து பாத்திரம் A யைக் கழித்து எழுதுக.
(..................................)

3) பாத்திரம் C யின் அளவுபோல் மூன்று மடங்கு அளவு யாது?
(..................................)

4) பாத்திரம் B யில் உள்ள பாலின் அளவை நான்கு பேருக்குச் சமனாகப் பங்கிட்டால் ஒருவருக்குக் கிடைக்கும் அளவு யாது?
(..................................)

5) நான்கு பாத்திரங்களிலுமுள்ள பாலின் அளவினைக் கூட்டி எழுதுக.
(..................................)

05. 


கீழ் உள்ள A, B ஆகியவை இரு காணிகளாகும். அவற்றை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) காணி A யினது சுற்றளவு யாது? .............................................

2) காணி B யினது பரப்பளவு யாது? .............................................

3) S .இலிருந்து V ஊடாக நேராக T யிற்குச் செல்லும் தூரத்தை மீற்றரில் எழுதுக.

.........................................

4) L இலிருந்து K ஊடாக V யிற்கு செல்லும் தூரம் அதிகமாயின் L எனவும், K யிலிருந்து L ஊடாக T வரை செல்லும் தூரம் அதிகமாயின் K எனவும் எழுதுக.

.........................

**06. கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i) L எனும் உரோமன் எண்ணின் பெறுமதி யாது? .................................

ii) 45 எனும் எண்ணை உரோமன் எண்ணில் எழுதுக. ...........................

iii) ஒரு மணித்தியாலத்தில் எத்தனை 15 நிமிடங்கள் உள்ளன? (............................)

iv) 100 செ.மீ ஒரு மீற்றர் எனின், 5 மீற்றரில் எத்தனை சென்ரிமீற்றர்கள் உள்ளன? (............................)

v) 100 கிராமில் இரண்டு 50 கிராம்கள் உள்ளன. எனவே, 500 கிராமில் எத்தனை 50 கிராம்கள் இருக்கும்? (............................)

**07. கீழே காணப்படும் சில பழங்களின் பெயர்களை அறிந்து, அவற்றின் கீழ் எழுதுக.**



i) ............................ ii) ............................

iii) ............................ iv) ............................

**08. கீழுள்ள வித்துக்களின் பெயர்களை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான வித்துக்களின் பெயர்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

கத்தாப்புக் கொட்டை / மரமுந்திரி / குன்றிமணி / தக்காளி / பலா

1) அவித்தும், பொரித்தும் உண்ணக்கூடிய வித்து எது? (....................................)

2) மிளகாய் வித்தைப் போன்ற அமைப்பையுடைய இன்னொரு வித்து எது? (....................................)

3) நிழற்தாவரம் ஒன்றின் வித்து எதுவாக இருக்கும்? (....................................)

4) பழத்தின் வெளியே தள்ளிக் கொண்டிருக்கும் வித்து எது? (....................................)

5) கறுத்த முகையுள்ள சிவப்பு வித்து எது? (....................................)

**09. கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) கீழுள்ளவற்றில் தனிப்பழத்திற்கு உதாரணமாக அமைவது எது?
1) தோடை 2) அன்னமுன்னா 3) பலா

2) முக்கனிகள் எனக் கூறப்படும் பழங்கள் எவை?
1) வாழை - அன்னாசி - பலா 2) மா - வாழை - பலா
3) மா - பலா - தோடை

3) முளைக்கும் திறன் கொண்ட வித்தின் இயல்புகள் எவை?
1) வெடிப்பு, நெளிவு, முதிர்ச்சி , துவாரம்
2) சப்பை , ஈரலிப்பு , பிரகாசம் , வெடிப்பு
3) முதிர்ச்சி, திரட்சி, போசாக்கு , பிரகாசம்

4) கீழுள்ளவற்றுள் வித்துக்கள் பரவும் முறை அல்லாதது எது?
1) நீரினால் 2) காற்றினால் 3) ஒளியினால்

5) வெடித்துப் பரவும் வித்து கீழ்வருவனவற்றுள் எது?
1) காசித்தும்பை 2) அல்லி 3) எருக்கலை

**10. கீழுள்ள ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப் பதங்களை எழுதுக.**

i) Sand : ............................................

ii) Flower Plant : ............................................

iii) Pet : ............................................

iv) Coconut : ............................................

**11 கீழுள்ள தமிழ்ச் சொற்களின் ஆங்கிலப் பதங்களை எழுதுக.**


i) வெளிச்சம் : ............................................

ii) பகல் : ............................................

iii) மேகம் : ............................................

iv) மழை : ............................................

**12. கீழே ஒரு பூவின் வெட்டுமுகத் தோற்றம் காணப்படுகின்றது. அதனை அவதானித்து, கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**




1) இப்பூவின் பெயர் யாது?
.............................

2) அல்லியைக் குறிக்கும் எழுத்து எது?
.............................

3) எழுத்து A குறிப்பது எதனை?
.............................

4) மகரந்தக் குழாய் எதுவென அறிந்து, அதன் அம்புக் குறிக்கு எதிரே Z என எழுதுக. (....................................)

5) பூவில் F எனக் குறிக்கப்பட்டிருக்கும் பகுதியின் பெயரை எழுதுக. (....................................)

13. நான் அன்று பாடசாலையில் உற்சாகத்துடன் கற்றுக் கொண்டிருந்தேன். அப்போது எனது மாமா அங்கு வந்தார். அவர் எனது வகுப்பாசிரியருடன் ஏதோ கதைத்துவிட்டு, என்னை வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். வீட்டுக்குச் சென்ற பின்பே எனது பாட்டி இறந்து விட்ட விடயம் எனக்குத் தெரிய வந்தது....


தொடர்ந்து திருத்தமான நான்கு சொற்களுக்கு மேற்பட்ட ஆறு வாக்கியங்கள் எழுதுக.


## விடை விளக்கக்குறிப்புகள் வினாத்தாள்-I

01-3 02-3 03-4 04-3 05-3 06-3 07-3 08-1 09-2 10-3
11-1 12-2 13-1 14-3 15-2 16-1 17-2 18-3 19-2 20-3
21-1 22-3 23-2 24-1 25-1 26-2 27-3 28-1 29-2
30- A.F.K வெட்டும்கருவி/உபகரணம்.
31- B.D.I விளையாட்டுப் பொருட்கள்.
32- புனித → தந்தி → திகதி
33- ரூபா 30.00 35-3 36-Δ
37- B 38-P 39-விமல் 40-நிமல்.

## வினாத்தாள்-II

01. 1. மேளம் போல. 2. காய்ந்த/வாடின தாவரங்கள்.
3. வளமும் வாழ்வும். 4. நெடிய மேகம். 5. காற்று/வெள்ளம்.
6. நெற்கள் வளருதல்.
02. 1-2 2-3 3-1
03. 1. முகில். 2. விலகியது. 3. பெய்தது.
04. 1. அழுதது. 2. எழுந்தது.
05. 1. செம்மை+நெல்.
06. 1. அந்த மாணவனிடம் சிவப்பு, நீலம், ஊதா ஆகிய நிறங்களில் மாபிள்கள் உண்டு.
2. மாணவனே! நீ பல்லாண்டு வாழ்க.
07. 1. அம்மா விடியற்காலையில் சமைத்தாள்.
08. 1. Peacock 2. After noon
09. Please give me your book/ Please give your book
10. 1. நான் பூ கொண்டு வருவேன்.
11. நமது நாடு இலங்கை.
12. எலியட்ட யன்ட.
13-3 14-3 15-4 16-2 17-2 18-1 19-3 20-3 21-4 22-1
23-4 24-4 25-2 26-1 27-3 28-3 29-1 30-1 31-4 32-1
33-1 34-2 35-2 36-1 37-4 38-4 40-E 41-C 42-D
43 1-4 2-4 44-20080 46-கூடியது.
48-120.00 50-5055 லீ. 51-30 மி.லீ 52-400 செ.மீ/4மீ.
53-பி.ப 3.05 54-106 மீதி 2 55-24 கி.மீ

39


49



45

| 0 | 1 | 3 | 0 | 0 | 0 | km |
|---|---|---|---|---|---|---|

47

| | தொகை | ஒன்றின் விலை | மொ.பெறுமதி | கொடுக்கப்பட்டது | மீதிப்பணம் |
|---|---|---|---|---|---|
| தீப்பெட்டி | 2 | ரூ. 3.00 | **ரூ. 6.00** | ரூ. 10.00 | ரூ. 4.00 |
| தேங்காய் | 3 | **ரூ. 30.00** | ரூ. 90.00 | ரூ. 100.00 | **ரூ. 10.00** |
| அப்பிள் பழம் | 4 | ரூ. 45.00 | **ரூ. 180.00** | ரூ. 500.00 | **ரூ. 320.00** |
| மண்வெட்டி | 1 | **ரூ. 450.00** | **ரூ. 450.00** | ரூ. 500.00 | ரூ. 50.00 |
| செயல்நூல் | 2 | ரூ. 125.00 | ரூ. 250.00 | **ரூ. 500.00** | ரூ. 250.00 |
| மின்குமிழ் | 3 | **ரூ. 65.00** | ரூ. 195.00 | **ரூ. 200.00** | ரூ. 5.00 |

இன்றைய வினாத்தாள்களுக்கு மாணவர்கள் அளித்த விடைகளை நாளைமறு தினம் வெளிவரும் விடை விளக்கக்குறிப்புக்களுடன் ஒப்பிட்டு விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை 0773013062 என்ற தொலைபேசியூடாக எஸ்.சுசந்திரபவன் ஆசிரியரிடம் நாளைய தினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக் கொள்ளமுடியும். [பிரபல ஆசிரியர்கள் ஒதுக்கிய அரிய நேரத்தைப் பயன்படுத்தத் தவறாதீர்கள்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த ராஜபக்ஷவின் குரலில் பேசும் கிருஷ்ணாவைப் பதவி நீக்கம் செய்க!

## பிரதமரிடம் பழ.நெடுமாறன் வலியுறுத்து



சென்னை,ஓக.14

கடலில் எல்லை தாண்டும் மீனவர்களைப் பாதுகாக்க முடியாது என்று நாடாளுமன்றத்தில் அறிவித்த வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

எஸ்.எம்.கிருஷ்ணா மஹிந்த ராஜபக்ஷவின் குரலில் பேசுகிறார் என்றும் அவர் சீறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கைக் கடற்பகுதிக்குள் எல்லை மீறி நுழையும் தமிழக மீனவர்களைப் பாதுகாக்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நாடாளுமன்றத்திலேயே அறிவித்திருப்பது பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

உலகெங்கும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் அவர்களை அறியாமல் எல்லைத் தாண்டிச் செல்வதுண்டு. ஆனால் அவர்களையெல்லாம் யாரும் சுட்டுக்கொல்வதில்லை. குஜராத் மாநில மீனவர்கள் பாகிஸ்தான் கடலில் நுழைந்து விட்டால் அவர்கள் சுடப்படுவதில்லை. மாறாக பாகிஸ்தான் கடற்படை அவர்களைக் கைது செய்து சிறையில் வைக்கிறது. மேற்கு வங்க மீனவர்கள் வங்க எல்லைக்குள் புகுந்துவிட்டால் அவர்களை வங்கதேச கடற்படை கைது செய்கிறதே தவிர சுடுவதில்லை. ஏன் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படை இதுவரை சுட்டதில்லை.

1983 இலிருந்து இதுவரை 27 ஆண்டுகளாக இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 500 பேர் வரை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மீனவர்கள் உடல் உறுப்புகளை இழந்துள்ளனர். பல நூறு கோடி ரூபா பெறுமான மீனவர்களின் படகுகளும் வலைகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. நமது கடல் எல்லைக்குள்ளாகவே இவ்வளவும் நடைபெறுகின்றன. இராமேஸ்வரத்திற்கு அருகேயுள்ள வாழைக்குடா என்ற தமிழகச் சிற்றூரில் இலங்கைக் கடற்படை வந்திறங்கி அங்குள்ள மீனவர்களைச் சுட்டும் அவர்களின் குடிசைகளைக் கொளுத்தியும் அட்டூழியம் செய்துவிட்டுத் திரும்பியுள்ளது. இதற்கு இந்தியக் கடற்படை இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



இலங்கைக் கடற்படையால்சுட்டுக்கொல்லப்பட்ட நமது மீனவர்களுக்குச் சர்வதேச சட்டங்களின்படி இழப்பீடு பெற்றுத்தர மத்திய அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

எஸ்.எம்.கிருஷ்ணா மஹிந்த ராஜபக்ஷவின் குரலில் பேசுகிறார். இவரைப் போன்றவர்கள் வெளிவிவகார அமைச்சராக இருக்கும்வரை தமிழக மீனவர்களுக்கு மட்டுமல்ல, இந்திய குடிமக்களுக்கே எத்தகையப் பாதுகாப்பும் ஒரு போதும் இருக்காது.

சொந்த நாட்டு மக்களைப் பாதுகாக்க முடியாது எனப் பகிரங்கமாக அறிவித்துள்ள எஸ்.எம். கிருஷ்ணா அந்தப் பொறுப்பிலிருந்து உடனடியாக விலகவேண்டும் அல்லது அவரை பிரதமர் விலக்கவேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளது.

# இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னையில் 5 அடுக்குப் பாதுகாப்பு!

## கோட்டையைச் சுற்றி 5 ஆயிரம் பொலிஸார் குவிப்பு

சென்னை, ஓக.14

இந்தியாவின் சுதந்திர தினவிழா நாளை 15 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி சென்னை கோட்டையைச் சுற்றி 5 அடுக்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்படுகிறது. 5 ஆயிரம் பொலிஸாரும் குவிக்கப்படுகிறார்கள் - என்று சென்னை நகரப் பொலிஸ் கமிஷனர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

அதுகுறித்து நேற்றுமுன்தினம் மேலும் அவர் கூறியவை வருமாறு -

ஐதராபாத்தில் உள்ள பொலிஸ் அக்கடமியில் 3 வாரங்களும், லண்டனில் ஒரு வாரமும் நடந்த மேலாண்மை தலைமைப் பயிற்சி முகாமில் கலந்துகொண்டேன். என்னோடு மேலும் 8 கூடுதல் பொலிஸ் டி.ஜி.பிக்களும் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சி நல்ல அனுபவத்தைக் கொடுத்துள்ளது.

ஆந்திராவில் நக்ஸலைட்டுகளை ஒடுக்க அமைக்கப்பட்டுள்ள சிறப்புப் பொலிஸ் படையின் செயற்பாடுகளை நேரில் கண்டறிந்தோம்.

லண்டன் நகரத்தில் மிகச்சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. லண்டன் நகர் முழுக்க 5 லட்சம் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஒரு நபர் லண்டன் நகருக்குள் நுழைந்துவிட்டு வெளியே வரும்போது அவரது உருவம், அவரது செயற்பாடுகள் 100 கமராக்களில் பதிவாகிவிடும். அந்தளவுக்கு அங்கு கண்காணிப்பு கமராக்கள் சிறப்பாக செயற்படுகின்றன. உலகிலேயே தலைசிறந்த பொலிஸான 'ஸ்கொட்லாந்து யார்ட்' பொலிஸாரின் செயற்பாடுகள் பற்றி நேரில் கண்டறிந்தோம்.

சென்னை நகரில் தற்போது 3 ஆயிரம் கண்காணிப்பு கமராக்கள்தான் பொருத்தப்பட்டுள்ளன. இதை மேலும் அதிகரிக்க வேண்டும். சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சட்டசபை வளாகத்துக்கு ரூபா 26 கோடி செலவில் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வரும் 15 ஆம் திகதி (நாளை) சென்னை கோட்டையில் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, கோட்டையில் 5 அடுக்குப் பாதுகாப்பு போடப்படும். விழா நடைபெறும் நாள் 5 ஆயிரம் பொலிஸார் அங்கு குவிக்கப்படுவார்கள். அவர்களோடு அதிவிரைவு படை பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

சென்னை முழுவதும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்படும். வாகனச் சோதனையும், தீவிர ரோந்துப் பணியும் இருக்கும். 14 ஆம் திகதி (இன்று) இரவு முதல் கோட்டை வளாகம் பொலிஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். சுதந்திர தினத்தையொட்டி, குறிப்பிட்ட மிரட்டல் எதுவும் வரவில்லை. பொதுவாக உஷாராக இருக்கும்படி எச்சரிக்கைத் தகவல் வந்துள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# நக்ஸல் மீது தாக்குதல் நடத்த விமானப் படைக்கு அனுமதி

புதுடில்லி, ஓக. 14

நக்ஸலைட்டுகள் தாக்குதல் நடத்தும் பட்சத்தில், தற்காப்புக்காக அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என இந்திய விமானப் படைக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

நக்ஸலைட் அச்சுறுத்தல் அதிகமுள்ள மாநிலங்களில் அவர்களை ஒடுக்க, விமானப்படையின் விமானங்களைப் பயன்படுத்த வேண்டும் என விமானப்படை கேட்டுக் கொண்டது. இது தொடர்பாக நாடாளுமன்றிலும் விவாதங்கள் நடைபெற்றன. உள்நாட்டுப் பாதுகாப்புக்கு நக்ஸலைட்டுகள் மிகவும் அச்சுறுத்தலாக உள்ளனர் என பிரதமர் மன்மோகன் சிங்கும் கவலை தெரிவித்திருந்தார்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படுகிறது இந்திய அரசு

## ம.தி.மு.க. செயலாளர் வைகோ சீற்றம்



மாநாடு நடத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தை வை.கோ நேரில் பார்வையிட்டபோது...

சென்னை, ஓக. 14

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவாக இந்திய அரசு செயற்படுகிறது - என்று ஈழத் தமிழர் ஆதரவுப் பீரங்கியும், ம.தி.மு.க. பொதுச்செயலருமான வைகோ சுற்றம் சாட்டியுள்ளார்.

அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி காஞ்சீபுரம் அருகே நத்தப்பேட்டையில் ம.தி.மு.க. சார்பில் திறந்தவெளி மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாடு நடைபெறும் இடத்தை வைகோ பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

மத்திய அரசு, ஈழத் தமிழர்களுக்கு துரோகம் செய்தது. அதற்குத் துணைபோனவர் கருணாநிதி.

இலங்கை தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு, இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறது. வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி அண்ணா பிறந்த நாளையொட்டி காஞ்சீபுரத்தில் பிரமாண்டான ம.தி.மு.க. திறந்தவெளி மாநாடு நடைபெறவுள்ளது.

மேலும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப் படும் விடயத்தில் இந்தியப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் மஹிந்த ராஜ பக்ஷவுக்கு ஆதரவாகத்தான் பேசி வரு கின்றனர். இது கண்டிக்கத்தக்கது.

தமிழர்கள் தாக்கப்படுவது குறித்து ராஜ்யசபாவில் அ.தி.மு.கவினர் பேச முயன்றபோது தி.மு.க., காங்கிரஸ் உறுப்பினர்கள் பேச விடாமல் தடுத்துள்ளனர். மீனவர்கள் பிரச்சினை ஆறரைக் கோடித் தமிழர்களின் பிரச்சினை. அனைவரும் இந்தியப் பிரஜைகள்.

- இப்படி அவர் தெரிவித்தார்.


# கேள்வி அறிவித்தல்

***கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, தென்மராட்சி. - 2010***

Education Sector Development Programme Grant No IDAH - 196CE

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உலக வங்கியிடம் இருந்து கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கென செலவுக்கான மானியத்தைப் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதியை, வடமாகாணக் கல்வி அமைச்சின் ESDP நிதி ஒதுக்கீட்டினூடாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டட நிர்மாண திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்ய வலயக் கல்விப் பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகின்றது.

02. ஒப்பந்தக்காரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் 2010 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

03. கேள்விப் பத்திரங்கள் வழங்கல் 17.08.2010 ஆம் திகதியில் இருந்து 23.08.2010 ஆம் திகதி ந.ப. 12 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 26.08.2010 ஆம் திகதி மு.ப.10.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப.11.30 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.

04. கேள்விப் பத்திரங்களுக்கான மீளளிக்கக் கூடிய பாதுகாப்புப் பணம் மற்றும் மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா 750.00 ஐ தென்மராட்சிக் கல்வி வலயத்தில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களைப் பாடசாலை வேலைப்பகுதியில் பெற்றுக்கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளமுடியும். கீழ் உள்ள வேலைகளுக்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கட்டணமேதுமின்றி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

| இல. | பாடசாலையின் பெயரும் வேலையின் விவரமும் | கட்டுமான மதிப்பீடு (வரி நீங்கலாக) | கேள்விப் பத்திர பாதுகாப்பு வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01. | யா/மந்துவில் றோ.க.த.பாடசாலை (கட்டடத் திருத்தம்) | 211,540.00 | 1,100.00 | M8/C9 |
| 02. | யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை (கட்டடத் திருத்தம்) | 380,222.80 | 2,000.00 | M8/C9 |
| 03. | யா/கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. (கட்டடத் திருத்தம்) | 818,066.50 | 4,100.00 | M8/C9 |

05. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்றை மூலப் பிரதியாகவும் மற்றையதனைப் பிரதியாகவும் கொள்ளவேண்டும்.

06. கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப் பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறைகளையும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தக்காரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு, ***தலைவர், கேள்விச்சபை, வலயக் கல்விப் பணிமனை, தென்மராட்சி.*** என விலாசமிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 26.08.2010 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு முன் இடப்படல் வேண்டும்.

07. மேற்படி வேலைகளுக்குக் கேள்விகளில் பங்கெடுக்க விரும்புவோர் தமது இக்ராட் பதிவுப் புத்தகத்தினை மேலதிக மாகாண கல்விப் பணிமனையின் பாடசாலைப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் சமர்ப்பித்து பங்கெடுப்பதற்கான சிபாரிசினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு இந்நடைமுறை விலக்களிக்கப்பட்டுள்ளது.

08. குறித்த நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கேள்விகள் திறக்கப்படுகையில் கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்க முடியும்.

*கு.பிரேமகாந்தன்.*
*வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22ஆவது பிறந்தநாள் நினைவுகளும் 18ஆம் மாத கண்ணீர்த்துளியும்

பிறப்பு 14 ★ 08 ★ 1988



அழிப்பு 24 ★ 02 ★ 2009

திருமதி

### ரிலோர்த்தி பத்மராஜா (ஜானு)

உன் பூ முகம் நான் பார்த்து பதினெட்டு திங்களாச்சு
பதினெட்டு நொடிபோல என்முன்னே நின்முகம் நிழலாடுதே
நீ தந்த உன் அருமைச் செல்வத்தில் உன் உருவும்
உன் திறனும் தினம் பார்த்து கண்ணீரில் கரைகின்றோம்!
அதைப் பார்த்து மகிழ்ந்திட எம்முடன் நீ இல்லையே
மீண்டும் பிறப்புண்டேல் எம்முடனே இணைந்திடு கண்ணே,
அதுவரைக்கும் நின் ஆத்மா இறையடியில் சாந்திபெற

அஞ்சலிக்கும் :
அன்புக் கணவர் பத்மராஜா, மகன் கோபிநாத்,
அம்மா, அப்பா, தம்பி, தங்கை, மாமா, மாமி,
மைத்துனர்கள், உறவுகள்.

பழனி கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு.
(1021003)

ஆனைவிழுந்தான், வன்னேரி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 31 - 12 - 1948



உதிர்வு 26 - 07 - 2009

### சீனிவாசகம் (ஸ்தபதி) தெட்சணாமூர்த்தி ஆச்சாரி

*திதி: கருடபஞ்சமி*

**அப்பா உங்களின் அன்பாலும் எல்லையில்லா அர்ப்பணிப்பாலும்
தலைநிமிர்ந்து வாழுகின்றோம்
எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும் எங்களுக்கு - நீங்கள்
எங்களைப் பிரிந்த கவலை மாறாது
எங்களை விட்டுப் பிரிந்த உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*90, சிவன் கோயில் வடக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்* (102006) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கரத்தினம் கந்தசாமி



உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் கந்தசாமி நேற்று (13.08.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் அதிபரும் உடுவில் பகுதி முன்னாள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளருமாகிய அ.கந்தசாமியின் பிரிய பத்தினியும்,உடுவில் பகுதி முன்னாள் பொலிஸ் விதானையார் சின்னையா - மாணிக்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், வட்டுக்கோட்டை காலஞ்சென்ற அருணாசலம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகளும், திருமதி கௌரி சிவராஜசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, மானிப்பாய், மகளிர் கல்லூரி), சிவாஜி (Former Principal, J/Skandavarodaya College, Visiting lecturer, Advanced Technological Institute, Jaffna, Palaly Teacher's College Under Graduate Department, Jaffna College) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவராஜசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), கருணாதேவி சிவாஜி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாதுமை (A/L-ஸ்கந்தவரோதயக் கல்லூரி),சாம்பவி (A/L-உடுவில் மகளிர் கல்லூரி), ஆரமுதன் (Gr-9-ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற தில்லைமலர் - பசுபதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி) அருமைச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான பசுபதி (முன்னாள் பிரதம கணக்காளர், சுங்க இலாகா), பரமசாமி (முன்னாள் ஆசிரியர்), திருமதி பாக்கியம் இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சகலகலாவல்லி கருணாகரன் (Canada), சித்திரகலா லோகேஸ்வரன் (Newzealand), உமாசுதன் (Accountant, Australia), சிவ சக்தி ரூபன் (Canada) ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உடுவில் மேற்கு, உடுவிலில் உள்ள அவரின் ''சிவை'' இல்லத்தில் நாளை (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சிவை', உடுவில் மேற்கு,
உடுவில்.

தகவல் : க. சிவாஜி.
(முன்னாள் அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
(1020..)

## பிரதியமைச்சர் வீரகுமார நாளை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், ஓக. 14

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரதிய மைச்சர் வீரகுமார திசாநாயக்கா நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அவர்நாளை பிற்பகல் 3 மணிக்கு அல்லாரையில் உள்ள தும்புத் தொழிற் சாலைத் திறப்புவிழா நிகழ்விலும், மாலை 5 மணிக்கு வதிரியில் உள்ள தோல் பொருள் உற்பத்தி நிலையத் திறப்புவிழா நிகழ்விலும் அமைச்சர் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் ஏ.எம்.லை.ஜெ. மன்னப்பெருமா, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பதில் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகெங்காதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-322)

## கைதடிப் பாலத்தில் பலர் சறுக்கி வீழ்ந்தனர்

தென்மராட்சி, ஓக. 14

நாவற்குழி மற்றும் கைதடி பாலங்களில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் பயணித்தவர்கள் பலர் சறுக்கி வீழ்ந்து எழுந்து சென்றனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

காலை பெய்த மழையின் பின்னர் பாலம் ஊடாக பயணித்தவர்களே அடுத்தடுத்து சறுக்கி வீழ்ந்தனர் என்றும் - வாகனங்களில் இருந்து வடிந்திருந்த எண்ணெய் மீது மழைத்துளிகள் விழுந்ததால்தான் சறுக்கல் ஏற்பட்டது என்றும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ஒ-207)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஓக. 14

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2278ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "P" என்ற ஆங்கில எழுத்தும் 2/7/3/1/0/3 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 2/7/3/1/0/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/3/1/0/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/1/0/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 134 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/0/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,370 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

0/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,724 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

3 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,34,869 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 2/7/3/1/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/7/3/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 135 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

2/7/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,379 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,452 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"P" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 53,850 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ஒ-10)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

### திருமதி இராசதுரை(பத்தர்)இராசரத்தினம்மா

தோற்றம் 12.09.1924
மறைவு 21.07.2010



கடந்த 21.07.2010 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயார் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறி அனுதாபங்களைத் தெரிவித்து சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் வீட்டிற்கு வந்து வைத்திய உதவிகள் புரிந்த வைத்தியர் அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் சிவபதப் பேறுகுறித்த ஆத்மசாந்தி பிரார்த்தனைகள் இன்று (14.08.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளமை யால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன விருந்து பசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு.திருமதி வரதராஜா குடும்பம்,
திரு.திருமதி இரவீந்திரன் குடும்பம்,
திரு கணேசராசா குடும்பம்,
திரு.திருமதி தவராசா (பத்தர் ஐயா) குடும்பம்,
திரு.திருமதி ஜெயராசா குடும்பம்,

55/201,சபாபதி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (101997)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 - 12 - 1973



உதிர்வு 01 - 07 - 2010

### அமரர் சண்முகநாதன் றொபின்


**இன்று (14.08.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

பிரிவால் துயருறும்:
அம்மா - ச.லீலாவதி,
மனைவி-றொ.ஜானகி(லண்டன்),
மகள் - றொ.சாரங்கி(லண்டன்),
சகோதரி-ப.றயேந்தினி(சுவிஸ்),
சகோதரன்- ச.லெலின் (ஜேர்மனி),
மைத்துனர்-க.பகீர்தரன் (சுவிஸ்),
மைத்துனி - லெ.சுகந்தா (ஜேர்மனி).

ஏழாலை வடக்கு,
ஏழாலை.
(102005)

## மரண அறிவித்தல்

### தங்கராசா சுகந்தன்



பருத்தித்துறை, பத்திரகாளி கோயில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் தெகிவளை, இல.18, ரணஜெயகம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட தங்கராசா சுகந்தன் 11.08.2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கராசா, காலஞ்சென்ற இந்திராணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குணரத்தினராசா - பூலோகராணி தம்பதியரின் மருமகனும் கஜந்தியின் அன்புக் கணவரும் சந்தோஷ்சின் பாசமிகு தந்தையும் சங்கீதாவின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
க.தங்கராசா (தந்தை).
தொ.பே. 077 0870998

பத்திரகாளி கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை. (சி/56993)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் திருவிழாவுக்குச் செல்லும் அடியார்கள் வீதித் தடைகளில் பாதணிகளை வைக்க வேண்டும்

## அவர்களிடம் 5 ரூபா அறவிடப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 14

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந் திருவிழாவில் பங்குகொள்ளவரும் அடியார்களின் பாதணிகள் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள வீதித்தடைகளில் வைத்து பாதுகாக்கப்படும். அதற்காக ஐந்து ரூபா கட்டணம் அறவிடப்படும்.

யாழ். மேயர் திருமதி யோ.பற்குணராஜா மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

நல்லூர் உற்சவத்தின் இறுதி ஏற்பாடுகள் குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

✱ஆலயச் சூழலில் வதிவோரது வாகனங்கள் யாவும் பின்வரும் வீதிகள் ஊடாக வெளிச் செல்வதற்கு விசேட அனுமதி அட்டைகள் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும்.

இரண்டாம்கட்டை பருத்தித்துறைவீதி சந்தி, சங்கிலியின் வீதி கோயில் வீதிச் சந்தி, செட்டித்தெருஒங்கை செட்டித் தெருச் சந்தி, பிரமணக்கட்டு ஒழுங்கை கோயில் வீதிச் சந்தி, அரசடிச் சந்தி, ஆலயத் தொண்டர்களுக்கு (சகல வீதித் தடைகள் ஊடாக), ஊடகவியலாளர்கள் (பிராமணக் கட்டு ஒழுங்கை கோயில்வீதி சந்தி), வீதித் தடைகளுக்கு உட்பட்ட வர்த்தகர்களுக்கு (அரசடி சந்தி), கலைஞர்களுக்கு (சங்கிலியன் வீதி கோயில் வீதி சந்தி).

✱ உற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் எதிர் நோக்கப்படும் குறைபாடுகள் பறி உடனுக்குடன் எமக்கு அறியத்தருவதற்கு வசதியாக 021 222 8888 இலக்க தொலைபேசி 24 மணி நேரமும் செயற்பட உள்ளது.

✱ ஆலய உற்சவத்துக்கு வருகை தரும் முக்கிய பிரமுகர்களின் வாகனங்கள் யாவும் பருத்தித்துறை வீதி நல்லூரில் உள்ள வீரமாகாளி அம்மன் ஆலய வீதிகளில் நிறுத்தப்படலாம்.

✱ அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத மாநகர சபை பணியாளர்கள் எவரும் வீதித் தடைகள் ஊடாக தமது வாகனங்களில் உட்செல்வதற்கு அனுமதிக்கப் படமாட்டார்கள்.

✱ பக்கதர்கள் அங்கப்பிரதட்சனை செய்யும் வேளையிலும் கந்தன் வீதி உலா வரும் சமயத்திலும் காவடி, துக்குக் காவடி என்பன ஆலய வீதிகளில் பிரவேசிப்பதை தவிர்த்தல் ஆரோக்கியமானதாகும்.

✱ ஆசார சீலர்களாக அடியார்கள் அனைவரும் வருகை தந்து ஆலயஉற்ச வம் பக்தி பூர்வமாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என நம்புகின்றோம். (ஒ-ஐ)

## திடீர் வேட்டையில் சிக்கிய வர்த்தகர்கள்

சண்டிலிப்பாய், ஓக. 14

மானிப்பாய், கோயில்பற்றுப் பகுதியில் நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் வேட்டையின்போது, பல வர்த்தகர்கள் அகப்பட்டுக் கொண்டனர். இவர்கள் மீது நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

நுகர்வோர் பாதுகாப்புச் சபையின் கொழும்பு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கூட்டாக இணைந்து மானிப்பாய் கோயில்பற்றுப் பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது கட்டுப்பாட்டு விலையிலும் அதிகமான விலையில் விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருள்கள் விற்பனை செய்தமை, நிறை குறைந்த பாண் விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டின் பேரில் பலர் அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்கள் மீது நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ-115)

## நூல்களுக்கு விருது

யாழ்ப்பாணம், ஓக. 14

இலங்கை இலக்கியப் பேரவை வருடா வருடம் இலங்கையில் வெளிவரும் சிறுகதை, கவிதை, நாடகம், சமயம், சிறுவர் இலக்கியம், பல்துறை நாவல், காவியம், ஆய்வு, மொழிபெயர்ப்பு (வேற்று மொழியிலிருந்து தமிழில்) ஆகிய நூல்களைத் தெரிவுசெய்து விருதுகள் வழங்கிவருகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு வெளிவந்த துறைசார்ந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளதால் குறிப்பிட்ட ஆண்டில் நூல் வெளியிட்ட நூலாசிரியர்கள் நூலின் ஒரு பகுதியை விருதின் தேர்வுக்காக எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பதாக "சி.சிவதாசன், செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை, இல.58, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு இலங்கை இலக்கியப் பேரவைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

நூல்கள் இலங்கையில் பிரசுரமானவையாக இருக்க வேண்டும். நூலின் பிரதியை ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்பத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201)

## தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக நலனோம்பு திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு

### நாளை கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வியில்

தென்மராட்சி, ஓக. 14

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும் கழகத்தின் நலனோம்பு திட்டங்கள் ஆரம்ப நிகழ்வும் நாளை ஞாயிறு முற்பகல் 10.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி, மாவட்ட இரண்டாவது உப ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராசாவும் சிறப்பு விருந்தினர்களாக கழக 306 பி, மாவட்ட ஆளுநர் சபை வடக்குப் பிரிவு பொருளாளர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ், கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொள்வர்.

கழக எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கால் ஊனமுற்ற இருவருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கல், அண்மையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் தென்னங் கன்றுகள் வழங்கல், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 10 மாணவர்களுக்கும், ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிடையே நடத்தப்பட்ட முன்னோடிப் பரீட்சையில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கல் உட்பட பல்வேறு நலத்திட்டங்கள் விருந்தினர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

கழகத்தின் புதிய தலைவராக லயன் சி.தேவகுமாரும், செயலாளராக லயன் கு.நடராசாவும், பொருளாளராக லயன் கே.கஜேந்திரனும் ஏனைய நிர்வாக அலுவலர்களும் சத்தியப்பிரமாணம் செய்து பதவியைப் பொறுப்பேற்கவுள்ளனர். (ஒ-207)

## ரணிலின் தாயாரை பார்வையிட்டார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 14

சுகயீனமுற்ற நிலையில் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தாயாரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டார். (ஒ-சி)

## நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 14

சங்குவேலி ஸ்ரீ சிவஞான விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும். (ஒ-10)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஓக.14

கோண்டாவில் மேற்கு, கந்தர்வளவு ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையார் கோயில் (காளி கோயில்) வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ஒ-10)

## மாநகரசபை வளாகத்தில் டெங்கு ஒழிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரிப்பிரிவின் யூபிலி மகப்பேற்று நிலைய உத்தியோகத்தர்களும் சக பணியாளர்களும் இணைந்து "தலை தூக்கித் தாண்டவம் ஆடும் டெங்கு நோயை முற்றாக ஒழிப்போம்" என்னும் தலைப்பில் அண்மையில் டெங்கு ஒழிப்பு தின நிகழ்வை மாநகரசபை வளாகத்தில் மேற்கொண்டனர் - என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-319)

# தம்பி பிரபாவுக்காக வாக்காளர்களிடம் மன்னிப்புக் கோருகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஓக. 14

"தனக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் தனது தலைவருக்கு அளிக்கப்படும் வாக்கு எனப் பகிரங்கமாகக் கூறி மக்களிடம் வாக்குகளை பெற்ற ஒருவர் இன்று கட்சித் தலைவரான எனதும், எமது கட்சியினதும் முடிவுகளுக்கு மாறாக தன்னிச்சையாக செயற்பட்டுள்ளார். ஆகவே, வாக்குகளை வாங்கித் தந்த கட்சித் தலைவர் என்ற முறையில் வாக்களித்த கொழும்பு மாவட்ட மக்களிடம் நான் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றேன்" - இப்படி ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் அரசுடன் இணைந்து கொண்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் கூறியவை வருமாறு:-

ஆளும்கட்சியுடன் இணைந்துகொள்வது என்பது இலங்கை அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருக்கின்றது. பல்வேறு சிறுபான்மை கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறியிருக்கின்றார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது கட்சிக் கட்டுப்பாட்டை மீறி ஆளுந்தரப்புக்குத் தாவியுள்ளார்கள்.

இன்னும் பல எதிர்க்கட்சி உறுப்பினர்களும் விரைவில் தாவ இருக்கின்றனர் என சொல்லப்படுகின்றது. இந்த வரிசையில் எமது கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கட்சியினதும், தலைவரினதும் நிலைப்பாடுகளுக்கு மாறாக தனது சொந்த முடிவுகளின் அடிப்படையில் அரசுடன் கைகோத்துக் கொண்டுள்ளார்.

இவரது கட்சி மாறுதலுக்கு எமது கட்சியினதும், தலைவரான எனதும் ஒப்புதல்கள் இருக்கின்றன என்ற கருத்து திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வருகிறது.

எங்களது அரசியல் பயணத்திலிருந்து இடைநடுவில் தான்தோன்றித்தனமாக விலகி வேறு பயணம் செல்ல முயல்பவருக்காக நான் காத்திருக்கப்போவதில்லை. தனது சொந்த நலன்கருதி இவர் செய்துவிட்ட காரியத்தினால் என் நெஞ்சில் ஏற்பட்ட காயம் ஒருபோதும் ஆறவும் போவதில்லை.

- இவ்வாறு மனோ கணேசன் கூறினார்.

## 1953 ஹர்த்தால் நினைவுதினக் கூட்டம்

வண்ணை, ஓக. 14

1953 ஓகஸ்ட் 12 ஹர்த்தால் திரள்நிலை மக்கள் போராட்ட 57ஆவது நிறைவுதினக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தி புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சர்வதேச மார்க்சிய குழு ஏற்பாட்டில் நடைபெறும் கூட்டத்திற்கு சொ.சிவபாலன் தலைமை வகிப்பார்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கச் செயலாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, மொஸ்கோகம்யூனிஸ்ட் உறுப்பினர் ந.விஸ்வலிங்கம் மற்றும் தொழிற்சங்க, இடதுசாரி அமைப்பைச் சார்ந்தோர் உரையாற்றுவர். (ஒ-160)

# விஜித ஹேரத், அஜித்குமார உட்பட 10 பேர் விளக்கமறியலில்

காலி, ஓக. 14

ஜனநாயக தேசிய முன்னணிச் செயலாளர் விஜித ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, மாகாணசபை உறுப்பினர் நளின் ஹேவகே உட்பட 10பேர் நேற்றுமுன்தினம் இரவு காலி நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயகத் தேசிய முன்னணி நேற்று முன்தினம் காலியில் ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும்படி கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதில் விஜித ஹேரத், அஜித்குமார, அர்ஜுன ரணதுங்க, ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா, மாகாணசபை உறுப்பினர் நளின் ஹேவகே உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைந்து செல்லும்படி பொலிஸார் கோரினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லாததை அடுத்து பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பிரயோகித்தனர். இருப்பினும் ஊர்வலம் காலி பஸ் நிலையம்வரை சென்றது. அங்கு பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸார் சிலரைக் கைது செய்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், அஜித்குமார, மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே ஆகியோர் காலி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்தபோது அங்கு பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

அமைதிக்குப் பங்கம் விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று காலிப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-சி)

# பிரிட்டிஷ் தூதுவர் மன்னார் விஜயம்

கொழும்பு, ஓக. 14

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் பீட்டர் ஹெய்ஸ் மன்னார் மாவட்டத்துக்கு முதன்முறையாக விஜயம் மேற்கொண்டார். பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் பிரிட்டிஷ் உதவியுடன் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளையும் அவர் ஆய்வு செய்தார்.

பிரிட்டிஷ் தூதுவர் கடந்த 10ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்தார் என பிரிட்டிஷ் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கான தரைவழிப் பயணத் தடையை அரசு நீக்கிய பின்னர் மன்னார் மாவட்டத்துக்கு பீட்டர் ஹெய்ஸ் முதல் தடவையாக விஜயம் செய்துள்ளார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற மடுமாதா ஆலயம், திருக்கேதீஸ்வரம் ஆகிய புனித பிரதேசங்களுக்கும் அவர் விஜயம் செய்தார். இந்த விஜயத்தின்போது மன்னார் ஆயர் பிலிப் ராயப்பு ஜோஸப், மன்னார் பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரிகேடியர் மைத்திரி டயஸ் மற்றும் கடற்படை அதிகாரி ஆகியோரையும் சந்தித்து அப்பகுதி நிலைமைகளைக் கேட்டறிந்துகொண் டார்.

மீள்குடியமர்த்தப்படும் சின்னபண்டிவிரிச் சான் பகுதிக்கும் பிரிட்டிஷ் தூதுவர் யூ.என்.எச்.சீ.ஆர். அதிகாரிகளுடன் சென்றார். அங்கு மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

பீட்டர் வெய்ஸ் மன்னார் மாவட்டத்திலுள்ள சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களுக்கும் விஜயம் செய்தார்.(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.- கொழும்பு பஸ் சேவைக்கு புதிய அனுமதிப்பத்திர முறை

கொழும்பு, ஓக. 14

யாழ்.- கொழும்பு தனியார் பஸ் சேவை அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதில் புதிய நடைமுறையைப் பின்பற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், மதவாச்சி, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, கந்தானை ஆகிய பகுதிகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது அனுமதிப்பத்திரம் இல்லாமல் சேவையில் ஈடுபட்ட 83 தனியார் பஸ்கள் இனங்காணப்பட்டுள்ளன.

இதைக் கருத்திற்கொண்டு உத்தேசத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுச் சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் பஸ்களின் உரிமையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது என ஆணைக்குழுவின் தலைவர் சஷி வெல்கம கூறினார்.

இதுதொடர்பாக அரசின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

# இலங்கை அபிவிருத்திப் பணிகளுக்கு சீனா மேலும் ஒத்துழைப்பு வழங்கும்

## அந்நாட்டுத் துணைப் பிரதமர் தகவல்

கொழும்பு, ஓக. 14

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என சீனா அறிவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலை மகிழ்ச்சியளிக்கும் வகையில் காணப்படுகிறது என்றும் சீனா தெரிவித்துள்ளது.

சீனாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கும், அந்நாட்டுத் துணைப் பிரதமர் லீ கீவாங்கிற்கும் இடையிலான சந்திப்பின் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட் டுள்ளது.

கடந்த 53 ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையில் வலுவான பிணைப்பு நிலவி வருகிறது என சீனத் துணைப் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரே சீனா என்ற கோட்பாட்டிற்கு இலங்கை தொடர்ச்சியாக அளித்து வரும் ஆதரவு பாராட்டுக்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள 'சங்காய் எக்ஸ்போ 2010' கண்காட்சியின் நிறைவு விழாவில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு துணைப் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதத்தை இல்லதொழிப்பதற்கும் அதன் பின்னரும் சீனா இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுக்குரியதென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

### சிவந்தனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நோக்கி கடந்த ஜூலை மாதம் 23ஆம் நாள் முதல் லண்டனில் இருந்து பரிஸ் நகரம் ஊடாக சிவந்தன் மனிதநேய நடை பயணத்தை மேற்கொண்டு வருகின்றார்.

சிவந்தனை நடந்து சென்று வரவேற்கவும், சுவிஸில் உள்ள மக்களும் இந்த நடை பயணத்தில் பங்கேற்கும் வகையிலும் எதிர்வரும் 14ஆம் திகதி காலை 9.30 மணியளவில் சூரிச் ஹெல்விற்சியா பிளட்ஸில் இருந்து மூவர் இந்த நடை பயணம் ஆரம்பிக்க இருக்கின்றனர்.

செல்வராஜா வைகுந்தன், விபுலானந்தன் கௌரிதாசன், சிவராசா ஜெயானந்தன் ஆகியோரே சூரிச், அறோ, சொலத்தூண், பேர்ண், பிறைபூர்க், லவுசான் மற்றும் ஜெனீவ் ஊடாக சுமார் 300 கிலோமீற்றர்கள் நடந்து செல்ல இருப்பதால் அந்தந்தப் பிரதேச மக்கள் இவர்களது மனிதநேய நடைப் பயணத்தில் தம்மையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜெனீவா செல்லும் சிவந்தனை வரவேற்க சுவிற்ஸர்லாந்தின் பிரதான அரசியல் அமைப்புக்களான ஈழத்தமிழரவை, மற்றும் சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடுகளைச் செய்துள்ளன. (அ-சி)

### ஜெனரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாவது இராணுவ நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

எனினும், இந்தத் தீர்ப்பு ஜனாதிபதியின் இறுதிப் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்றார்.

இந்நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இறுதி முடிவுக்கு அமையவே இந்தத் தீர்ப்பு செயற்படும் என முதலாவது இராணுவ நீதிமன்றம் அறிவித்துள்ளது என்றும் பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள் ளது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த காலப் பகுதியில் அர சியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காகவே முதலாவது இராணுவ நீதிமன்றம் நிறுவப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

இந்த நீதிமன்றத்தின் நீதிபதிகளாக மேஜர் ஜெனரல் எச்.எல்.வீரதுங்க, மேஜர் ஜெனரல் ஏ.எல்.ஆர்.வீரதுங்க மற்றும் மேஜர் ஜெனரல் டீ.ஆர்.பீ.ஜயதிலக்க ஆகியோர் செயற்படுகின்றனர். (அ-சி)

### அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கு தொடர்பாக பதில் அளிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் மத்திய அரசையும் தமிழக அரசையும் கேட்டிருந் தது.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் சார் பில் பதில் மனு தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணையின்போது நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜராகத் தயார் என்று அமைச்சர் அறிவித்துள்ளார் என மனுவைத் தாக்கல் செய்துள்ள சட்டத்தரணி வஜிரவேலு தமிழோசையிடம் தெரிவித்துள்ளார். (சி)

### முரளிதரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடன் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது இவர்கள் அதில் முக்கிய பங்கு வகித்தவர்கள். எனவே, சமாதான முயற்சிகள் தொடர்பான நடுநிலையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள இவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழு இன்றைய நிலையில் ஐ.தே.கட்சியைத் தாக்குவதற்கும் சமாதான முயற்சிகளைக் கொச்சைப்படுத்துவதற்காகவுமே பயன்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. இதனை விடுத்து யுத்த நிறுத்த காலத்தில் சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்ட மேற்குறிப்பிட்டோரை ஆணைக்குழு முன் ஆஜராகும்படி பணித்து சாட்சியங்களைப் பதிவு செய்யவேண்டும். - என்றார்.(அ-சி)

### வன்னியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர் போராளிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் அல்லாத போராளிகளை விடுவித்து, பொறுப்பான அமைப்பிடம் அல்லது பொதுவான தரப்பினரிடம் ஒப்படைக்கலாம். விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் எனக் கருதப்படுவோருக்கு எதிராக அரச சட்டங்களின் கீழ் வழக்குத் தொடரலாம்

விடுதலைப் புலிகளின் தலைவர் தற்போது உயிருடன் இல்லை. எனினும் விடுதலைப் புலிப் போராளிகள் யுத்தம் நிறைவடைந்தும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டு சாதாரண மக்கள் போல் வாழ்வதற்குரிய சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் விடுதலைப் புலிகள் அமைப்பும் ஒழிக்கப்பட்டு ஒரு வருடம் கழிந்துள்ள நிலையில் இதுவரையில் ஒரு துப்பாக்கித் தோட்டாவின் சத்தமோ, குண்டு வெடிப்புக்களோ இடம்பெறவில்லை. இதனால் விடுதலைப்புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என உறுதியாக நான் நம்புகிறேன்.

கிளிநொச்சியில் உள்ள மக்களின் காணிகளை அரசு சுவீகரித்துள்ளது. அரசால் தமிழ் மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளை அவர்களிடமே மீளக் கொடுப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐந்து நட்சத்திர விடுதியில் வைக்கப்பட்டிருக்கும் கே.பிக்கு தண்டனை வழங்க வேண்டும் - என்றார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் சாட்சியங்களைத் திரட்டும் பணிகள் எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளன. (அ-ஐ)

### முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களுக்கு மேற்படாததாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 3 ஆயிரத்து 40 புலிச் சந்தேக நபர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் சேர்க்கப்பட்டுள்ளனர். எனது கட்டுப்பாட்டின்கீழ் மிகவும் ஆபத்தான புலிச் சந்தேக நபர்கள் எவரும் இல்லை.

புலிகள் இயக்கத்தில் பலவந்தமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள், குடும்பத்தைப் புலிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக புலிகள் அமைப்பில் இணைந்தவர்கள், பெண் உறுப்பினர்கள் மற்றும் புலிகள் அமைப்பில் வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தோர் ஆகியோரே எனது கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர். - என்றார் சுனந்த ரணசிங்க. (அ-சி)

### குடிவரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சட்டமூலத்தின்படி அப்பாவி அகதிகளுக்கு 6 மாத காலங்களுள் குடிவரவு தொடர்பிலான தீர்மானத்தை வழங்கவும், உடனடியாக அகதிகள் என நிரூபிக்கப்படாதவர்களை நாடுகடத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என கனேடியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

### தமிழ் அகதிகளுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதிகளைத் தங்கவைப்பதற்காக பல கூடாரங்களைக் கனேடிய அரசு அமைத்துள்ளது. இக்கூடாரங்களில் ஒன்று மருத்துவ சிகிச்சையளிக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் பெருமளவில் பெண்களும், சிறுவர்களும் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கப்பலில் வரும் அகதிகளைக் கூடாரங்களுக்கு அழைத்துச் செல்ல 12 பெரிய வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கப்பலில் வரும் தமிழ் உறவுகளுக்கு உதவுவதற்காக கனடாவில் உள்ள தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் குடியேற்ற சட்ட நிபுணர்களும் விக்டோரியாவில் காத்திருக்கின்றனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கப்பலில் வரும் இலங்கைத் தமிழ் அகதிகளிடம் விசாரணை நடத்துவதற்காக கனேடிய அதிகாரிகள் தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் பலரையும் தயார் நிலையில் வைத்துள்ளனர்.

"சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக ஆள்களைக் கொண்டு செல்வோர் கனடாவின் பிரதிபலிப்பை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றனர். அகதிகள் தொடர்பில் கனடா சாதகமான நிலைப்பாட்டை எடுத்தால் அவர்களின் நடவடிக்கை தொடரலாம். எனவே பாடம் கற்பிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கனடா பொது பாதுகாப்பு அமைச்சர் விக்டோவ்ஸ் எச்சரிக்கை விடுக்கும் வகையில் தெரிவித்துள்ளார்.

கப்பலில் வரும் அகதிகளில் கடும் சுகவீனமுற்றவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை வழங்க விக்டோரியாவிலுள்ள வைத்தியசாலை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

'சன் சீ' கப்பலில் வரும் அகதிகள் குறித்து கனேடிய பத்திரிகைகளில் பல்வேறு செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. (அ-சி)


**விற்பனைக்கு**

NP-H இலக்கமுடைய isuzu ரக டிப்பர் வாகனம் (வெள்ளைநிறம் - 1 கியூப்) விற்பனைக்குண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
0777432665, 0770650730, 0772518884

**தேவை**

உருக்குத் தளபாடம், M.T.F. BOARD தளபாடம் செய்வதற்கு ஆள்கள் தேவை.
தொடர்பு :- 0212222846, 0779050186

**தேவை**

தச்சு வேலையுடன், வாணிஸ் பூசும் வேலை செய்யக்கூடியவர் தேவை. மற்றும் பலசரக்கு வியாபாரம் செய்யக்கூடியவர் தேவை.
தொடர்பு :- 0773583879

**வங்கியியல் கற்கை நெறி**
DBF
செப்ரெம்பர் பரீட்சைக்கான மீட்டல் வகுப்பு
Accounting Analysis and Planning (90)
K.ஸ்ரீபரன் BBA (FM.Spl)
தொடர்புக்கு: 0774598430





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org